# பார்வை ஒன்றே போதுமே!

## 1

அம்மியில் நீர் தெளித்து, அதில் வைத்திருந்த தேங்காய் சில்லுகளை நைத்து, பின் இழுத்து அரைக்கலானாள், அஸ்வினி.

தோள் பட்டைகள் வலியால் விண்டன.

மாலை இரண்டு மணி நேரம் மாணவிகளின் முன் நின்று உடற்பயிற்சிக்காகத் தூக்கி இறக்கிய கை மூட்டுகள், 'கொஞ்சம் ஓய்வாய் விடேன்' என்று 'நறநற'த்தன. ஆனால் பல்லைக் கடித்தபடி துவையலை அரைத்து வழித்தாள்.

அவள் ஆசிரியையாகப் பணிபுரியும் பள்ளியில் ஆண்டு விழா ஏக அமர்க்களமாய் நிகழ்ச்சிகள் தயாராகிக் கொண்டிருந்தன.

''கூட்டு உடற்பயிற்சியை உன் பொறுப்பில் விடுறேன் அஸ்வினி, நீதான் பிசிறில்லாமல் பிள்ளைகளின் அசைவைக்



கச்சிதமாய்த் தயார் பண்ணுவே'' என்று இனிக்கப் பேசி இவள் முதுகில் மேலும் ஏற்றிய வேலைகளைப் பணிந்து செய்து கொண்டுதான் இருந்தாள். ஆனாலும் உடல், முழுக்க ஒத்துழைக்கவில்லை.

அதற்காக, 'என்னால் ஆகாது' என்று காலை நீட்டிப் படுக்கவும் முடியாது. அஸ்வினியின் சம்பளத்தில்தான் இரண்டு வயிறுகள் வேளா வேளைக்குப் பசி ஆறின.

தனக்கென்று வீட்டிலும் உலகிலுமுள்ள ஒரே ஜீவனான சொந்த தம்பி அசோக்கை அவள் வாட விட முடியாது... அதற்காகத்தான் இந்த அம்மி அரைத்தல்... மிக்சி பழுதாகிப் பல மாதங்களாகி விட்டன. அதைப் பழுது பார்க்கப் பணமோ நேரமோ இல்லை.

அதே நேரம் அசோக், 'வெறும் ரசஞ்சோறா... வேணாம் போ' என்றால் இவளது மனம் வாடும். இரண்டு முட்டை வாங்கினால் இருக்கும் மிளகாய், வெங்காயத்தை நறுக்கிச் சேர்த்து 'அடை வார்க்கலாம்: ஆனால் அந்த மூன்று ரூபாய்க்குக் கணக்குப் பார்க்க வேண்டிய அவல நிலைமை!

இருந்த தேங்காய், பருப்பு, வற்றலை வைத்து அதை மிச்சம் பிடித்தாகி விட்டது.

ஆனால், இதெல்லாம் தம்பிக்குப் புரிகிறதா?

புரிந்த மாதிரி இல்லை, அவனது நடவடிக்கைகள். சதா நண்பர்களுடன் ஊர் சுற்றுதல், வீட்டில் இறுகிய மௌனம், எதிர்காலம் பற்றிய இலக்கோ, எதிர்பார்ப்போ இல்லாமல்...

அதற்காக ஒரேயடியாய் இல்லை என்றும் சொல்ல முடியாது.



''அக்கா, நான் என்ஜினீயர் ஆகணும்... என்ன? புதுசு புதுசா எதுனாச்சும் கண்டுபிடிக்கணும்... அப்பத்தானே பெரும் புகழுமாய் வரும்? எனக்குப் பிறகும்கூட, 'அசோகராஜன் எனும் விஞ்ஞானி மனுக்குலம் மேம்பட இதைக் கண்டுபிடித்தார்'ன்னு பாடப் புத்தகத்துல என்னைப் பற்றி...''

''எல்லாம் போட்டுடலாம். முதல்ல நீ பள்ளியின் சிறந்த மாணவன்கிற பேரை வாங்கு...''

''ஏன்... அதையும் ஒரு வரி போடச் சொல்லிடலாமா?''

''ஆசைடா... சுளையாய் மார்க் எடுத்தால்தான் பொறியியல் கல்லூரியில் நுழையலாம்...''

''அதிலெல்லாம் நான் ரொம்ப சுறுசுறுப்பு...''

''சரி... படிக்க உட்காரு...''

''பசிக்குதுக்கா... ஏதாவது சூடாய் வேணும்போல இருக்குது...''

இவள்தான் உடன் பிறந்தவனுக்காய் சமையலறையில் பரபரப்பாள். இவர்களைப் பெற்றவள். 'தேமே' எனச் சுவரில் சாய்ந்தபடி, எதிர்ச்சுவரில் ஊறும் பல்லியை உற்றுப் பார்த்தபடி இருப்பாள்.

காலை ஒரு நேரம் மட்டும் அம்மாவின் சமையல்.

அதன் பிறகு, 'நான் இந்த உலகத்தைச் சேர்ந்தவளில்லை' என்ற ரீதியில் சுவரில் சாய்ந்து விடுவாள்.

அஸ்வினியும் அசோக்கும் குழந்தைகளாய் இருந்தபோது இதே அம்மா சரவெடியாய்ப் பொழிந்தவள்.



''வாயை மூடுடி... ஓயாமப் பேச்சு... இந்தக் கத்தல் தாளாமத் தானே நான் நிம்மதியைத் தேடி வெளியே ஓடுறேன்... சனியன்...'' என்று அப்பாவும் சளைக்காமல் கத்துவார்.

பெற்றவர்களின் அலறலில் பிள்ளைகள் அஞ்சிச் சுருண்டிருப்பார்கள்.

அம்மா அப்படி உரக்கக் கத்தி ஆர்ப்பாட்டம் செய்ததால் அப்பா வேறு ஒருத்தியின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு போய் விட்டாரா, அல்லது தன் கணவருக்கு வேறு ஒருத்தியுடன் தொடர்பு உண்டு என்ற சந்தேகத்தினால் அம்மா அப்படிக் குதர்க்கமாய்க் குதறினாள் என்பது இன்றும் புதிர்தான்.

''எவளைப் பார்க்க இப்படி ஓடுறே...?''

''.........''

''எந்த நாயோடு புரண்டுட்டு இப்ப இங்கே வர்றே...?''

''.......''

''அந்தச் சிங்காரிக்கு அத்தனை காசையும் அள்ளி விட்டுட்டு எங்களைக் கஞ்சியோடு அம்போன்னு விட்டுட்டே இல்ல...?''

இப்படியெல்லாம் ஆங்காரமாய்க் கேட்ட அம்மாவின் வாய், அப்பா வேறு ஒருத்தியோடு போன பிறகு இறுகி விட்டது.

கோடாக இறுகிய உதடுகளும் வெறித்த பார்வையுமாய் ஒடுங்கிப் போனாள்.

அப்போது அஸ்வினி, கல்லூரி மாணவி. அவமானத்தில் சுருண்டாலும், குடும்ப பாரத்தைத் தாங்க வேண்டிய பொறுப்பு தன் தோள்களுக்கும் உண்டு என்பது புரிந்து சமாளித்தாள்.

அருகிலிருந்த ஒரு பெண் மருத்துவரிடம் மாலை மூன்று மணி நேர வேலை கிடைத்தது.

வரும் நோயாளிகளின் பெயர் சீட்டுகளைத் தேடி எடுப்பது, ரத்த அழுத்தம் சோதிக்கையில் கைகளில் ரப்பர் பையைச் சுற்றி விடுவது, மருத்துவ உபகரணங்களைச் சரியாக எடுத்து வைப்பது, அச்சிறு ஒற்றை அறையைப் பெருக்கித் துடைப்பது, குடிநீர் பிடித்து வைப்பது என்ற வேலைகளுக்குச் சில நூறுகள் கிடைத்தன. உபரியாய் அம்மாவிற்குத் தேவைப்பட்ட மருந்துகளும் கிடைத்தது பெரிய உதவி.

மருத்துவர் கிளாடிசிடம் அஸ்வினி ஒரு நாள் தயங்கித் தயங்கிக் கேட்டாள்.

''டாக்டரம்மா... எங்கம்மா ஏன் இப்படி இருக்காங்க?''

''அதிர்ச்சிதான். உங்கப்பாவை அதிகமாய் நேசிச்சவங்க, எங்கே அவரை இழந்திடுவோமோங்கிற பயத்தில் முன்னே கத்தினாங்க... இப்ப அவரை உயிரோடு இழந்த துக்கம்... தவிர அவங்க குணமே அதீதமானதுன்னு நீ சொல்வதிலிருந்து புரியுது. முன்னே அதிகம் வெடிச்சாங்க. இப்ப மிக இறுகிட்டாங்க... தவிர மாதவிலக்கு வேளை... இப்ப உடம்பின் சுரப்பிகள் மாறும், குறையும். பதற்றமும், படபடப்பும் எல்லாப் பெண்களுக்கும் இந்தப் பருவத்தில் வர்றதுதான்...''

''அம்மா நேற்று ரோட்டிலே இறங்கி ஓடிட்டாங்க.''

''இந்த மாத்திரை தரலாம் - மனச்சோர்வு குறையும். கீரை, பழம் எல்லாம் கொடும்மா... பண வசதி எப்படி?''

கனிவோடு விசாரித்தார், மருத்துவர்.



''அப்பா நிறைய கடன் வாங்கி இருக்காரும்மா. ஆனா வீடு அம்மா பேர்ல இருக்குது. வீட்டை வித்துக் கடனை அடைக்கணும்னு யோசிச்சிருக்கோம். எஞ்சின பணத்தை வங்கியிலே போட்டு நான் சம்பாதிக்கும் வரை சமாளிக்கணும். இதுவரை அம்மாவின் நகைகளை விற்றுதான்...''

மருத்துவர், அவளுக்குச் சம்பளத்தைக் கூட்டித் தந்தார். அதோடு மகளின் சில உடைகளையும் தந்தது பெரிய உதவி.

ஆனால், தாங்கள் வளர்ந்த வீட்டை விற்று எஞ்சிய சொற்ப தொகையோடு வாடகை வீட்டில் குடியேறியபோது அஸ்வினியின் மனம் துடித்தது. வாழ்க்கை இருண்ட சூனியமாய் அச்சுறுத்தியது.

ஆனால், விரைவில் அச்சம் விலகி, 'சமாளித்து விடலாம்' என்ற நம்பிக்கை துளிர்த்தது. கல்லூரிப் படிப்பை முடித்து ஆசிரியை வேலையில் தொற்றிக் கொண்டாள்.

குடும்பச் சக்கரம் இனி சற்று சுலபமாய்ச் சுழலும் என்று நம்பிய வேளையில்தான் அச்சாணி முறிந்து போனது.

அம்மா இறந்து போனாள்.

அது சாவா? அல்லது தற்கொலையா? என்பது இன்றுவரை புதிர்தான். அம்மாவின் குணத்தைப் போலவே அவளது மரணமும் விளங்காத மர்மம்தான். மருத்துவர் தந்த மாத்திரைகள் மொத்தத்தையும் விழுங்கிச் சாவை வரவழைத்தாளா? அல்லது மனமொடிந்த அவளின் மேல் இறங்கி, மரணமே அவளைக் கொண்டு போனதா? என்பது தெரியவில்லை.

இத்தனை சோதனைகளுக்கும் நடுவே அசோக் முயன்று படித்து சிறந்த மதிப்பெண்களைப் பெற்றான். ஆனால்,



பொறியியல் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. சில ஆயிரங்கள் கூட கையிலின்றி இவள் அலை மோதினாள். தம்பியின் சுண்டிய முகத்தைக் காணச் சகிக்கவில்லை. தன் வாழ்வே பறிபோனதாய் நினைத்த அவனும் திசை மாறினான்.

''அச்சு... என்னடா நீயும் நம்ப அம்மா மாதிரி இப்படி உட்கார்ந்தா எப்படி? இப்ப என்ன ஆச்சு? டிப்ளமா ஏதேனும் படிக்கச் சேரேன். சும்மா இப்படி இறுகி உட்காரதேப்பா... எனக்கு பயமா இருக்கு...''

அவன் அசைந்து கொடுக்கவில்லை. அம்மா வீட்டினுள் ஒடுங்கினாள் என்றால் தம்பி வீட்டை விட்டு ஒதுங்கினான்.

இரவு வீட்டிற்குத் திரும்புபவனின் ஒரே பேச்சு, 'சாப்பிட என்ன இருக்கிறது?' என்பதுதான்.

இவளும் கரிசனையோடு எதையேனும் செய்து வைத்துக் காத்திருப்பாள். சில இரவுகளில், 'சாப்பிட்டுட்டேன்' என்று அவன் லுங்கிக்கு மாறும்போது சமைத்தது வீணாகுமே என்ற எரிச்சல் கிளறும். ஆனால், ஏதும் பேசாமல் மறுநாள் காலையில் சற்று சளித்த அந்த உணவை, தானே சாப்பிட்டுக் கொள்வாள்.

ரசத்தைச் சூடு படுத்தியவள், சற்று தளர்ந்தாள்.

சாப்பாடு தயார். அசோக் வீடு வந்ததும், 'முகம் கழுவிட்டு உட்கார்' என்றபடி பரிமாறலாம். இதுவரை மனதுள் குமைந்து கொண்டிருந்த நினைவுகளை ஒதுக்கியவள், முகம் கழுவிட்டு பரீட்சை விடைத் தாள்களைத் திருத்தத் தொடங்கினாள்.

பிடரி வலித்தபோது நிமிர்ந்து கழுத்தை நீவியபடி கடிகாரத்தைப் பார்த்தவளை பயம் நிமிண்டியது.



மணி பத்தைத் தாண்டி விட்டிருந்தது.

யாரோ கதவைத் தட்டினார்கள்.

இது அசோக் அல்ல... அவன் இப்படித் தயக்கத்துடன் தட்ட மாட்டான். நீரில் விழுந்த மைத்துளி போல அவளுள் அச்சம் பரவியது.

## 2

வெளியே நின்றவனின் முகம், தெளிவாய்த் தெரியவில்லை.

''யாரு... யாரது?''

''நீங்கதானே அசோக்கின் அக்கா?''

''ஆமா.''

''அசோக்... இப்ப வரலை...''

''சரி... அவன் எங்கே?''

''ஆஸ்பத்திரியில்.''

இதயத்தில் தேள் கொட்டிய போலத் துடித்தாள். ''ஐயோ... என்னாச்சு?''

''ஆபத்தில்... பைக்ல வந்திட்டு இருந்தோம்... எதிரே வந்த கார் எங்க மேல உரசி...''

''உயிரோடு இருக்கானா...? எந்தம்பி இருக்கானா?''

''உயிருக்கு ஆபத்தில்லைக்கா. தோளிலேதான் அடி. தோளில் மூட்டு நழுவிடுச்சுன்னு அதைத் தூக்கி வச்சு கட்டுப் போட்டாச்சு?''

வீட்டின் சாவியை எடுத்தவள், கதவைப் பூட்ட முனைந்தாள்.

''இந்நேரம் நீங்க ஏன்க்கா... எப்படி?'' இழுத்தான்.

''நடந்தேனும் போகணுமே... எந்த ஆஸ்பத்திரி?''

''டாக்டர் பரந்தாமனின் ஆஸ்பத்திரியில்தான் சேர்த்தேன்.''

அது இங்கிருந்து தொலைவில் இருக்கிறது. இவர்களின் வீடு நகரிலிருந்து சற்று ஒதுங்கி இருந்தது. அருகே பேருந்தோ ஆட்டோக்களோ கிடையாது.

''நீ எப்படி வந்தே?''

''பைக்ல... ரோட்டில் நிறுத்தி இருக்கேன்க்கா...''

''நீ அதிலே போ... நான் என் சைக்கிள்ல முடிஞ்சளவு வேகமாய்ப் பின்னால் தொடர்ந்து வர்றேன்.''

அந்தப் பழைய சைக்கிளை வாங்கியதற்காகத் தற்போது அதிகம் மகிழ்ந்தாள் என்றுதான் சொல்ல வேணும்.

''இந்த ராத்திரி வேளையில் வேண்டாங்க.''

''அசோக்கை வேதனையில் தனியே விட்டுட்டு நான் இங்க உட்காரக்கூட முடியாதேப்பா...'' அவளது குரல் கெஞ்சியது.

''நாங்க அவனைப் பார்த்துக்கிறோம்க்கா... தவிர அவனிருக்கிற ஆண்கள் வார்டில் உங்களை இந்நேரம் அனுமதிக்கவும் மாட்டாங்களே...''



''நான் வெளி வராந்தாவிலேயே நின்னுக்கிறேன்'' - சொன்ன பிறகு தன் அது அசட்டுப் பேச்சு என்று உறைத்தது. அதனால் யாருக்கு என்ன பயன்? தவிர இது தனித்த - ஆள் அரவமற்ற பகுதி. அவளைத் திரும்ப கொண்டு விட இந்த நண்பர்கள் வரலாம். ஆனாலும் பிறருக்கு ஏன் சிரமம் தரவேண்டும்?

அடிபட்டிருக்கும் தன் சகோதரனைப் பார்க்கப் போக முடியாத கையாலாகாத்தனத்துடன் ஒரு சில விளக்குகள் மட்டும் எரிய, மங்கலாய்க் கிடந்த சாலையை வெறித்தாள். ஆள் நடமாட்டமற்ற சாலை கம்மல்களைப் போட மறந்த பெண்ணின் முகம் போலக் களையற்றுத் தெரிந்தது.

அவளது விழிகள் நீர் கொப்பளிக்க, எதிரே நின்றவன் தர்ம சங்கடமாய் விழித்தான்.

''கவலை இல்லைங்க... அது என் சிநேகிதனுடைய சித்தப்பா ஆஸ்பத்திரிதான். இல்லைன்னா விபத்துங்கிறதால் நேரே அரசாங்க மருத்துவமனைக்குத்தானே போயிருந்திருக்கணும்? தெரிஞ்சவங்க... அதனால கருத்தாய் கவனிப்பாங்க... கவலையை விட்டுட்டுப் படுங்கக்கா.''

''கவலைப்படாம எப்படி? அவன் மட்டும்தான் எனக்குன்னு இருக்கிறது.''

''தெரியும்க்கா... அசோக் அடிக்கடி உங்களைப் பற்றிப் பேசுவான்.''

அவளுக்கு மேலும் கண்ணீர் பெருகியது.

''சாப்பிட்டியா?''



''பசிக்கலைக்கா... நீங்க காலையில் தயாராய் இருங்க... நான் ஒரு ஆட்டோ எடுத்து வந்து உங்களைக் கூட்டிட்டுப் போறேன்.''

**கா**லையில் அவள் தம்பியின் துணிமணிகளையும் எடுத்து வைத்து பிளாஸ்க், இட்லி, சிற்சில பாத்திரங்கள் சகிதம் தயாராகி இருந்தாள்.

தன் தாய் இறந்த நேரம்... டாக்டரம்மா தனக்குச் சொன்ன ஆறுதல் வார்த்தைகளை மறுபடி தேடி எடுத்துத் தன்னை தைரியப்படுத்திக் கொண்டாள்.

'வாழ்க்கை, நதி போன்றது அஸ்வினி. ஓடிக்கொண்டே இருக்கணும். அதுதான் நியதி, அழகு எல்லாம் சிலநேரம் நீர், மணலின் மேல், புரண்டு போகும். ஆனால் பாறைகள், வீழ்ச்சி, சுழல் எல்லாமும் உண்டே. நதி தன்பாட்டிற்குப் போவது போலத்தான் நாமும் இருக்கணும். அதிலும் நல்லவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும். அது ஆண்டவனின் வாக்கு எந்நிலையிலும் தளர்ந்து தேங்காமல் போய்க்கிட்டே இரு... நிலைமை மாறும்.''

இப்போது கவலையும் அச்சமும் அவளைப் பந்தாடின. ஆனாலும் தளராமல் 'அடுத்ததாய் என்ன?' என்று யோசித்தாள். மண்டியிட்டு இறைவனிடம் வேண்டினாள். மனம் தெளிந்து, செயல்படுத்தும் துணிவு சேர்ந்தது.

ஆட்டோவுடன் வந்த சிநேகிதன் அருணின் முகமும் அன்று காலை தெளிவாகவேத் தெரிந்தது.

''அசோக்கிற்கு...''

''பார்த்துட்டுதான்க்கா வர்றேன். எழுந்து உட்கார்ந்திருக் கான். டாக்டரிடம் கேட்டேன். எந்த பயமுமில்லைன்னுட்டார்.''



''நல்லது.''

முழுசாய்த் தம்பியைக் கண்டதும்தான் மனம் முழுக்க சமாதானமானது. தோள்பட்டையில் கனத்த கட்டு. கையை அசைக்கக்கூடாது என்பதற்காய் அது தொட்டிலுக்குள் மாட்டி வைக்கப்பட்டிருந்தது.

அக்காவைப் பார்த்தவனின் முகம், குற்ற உணர்வுடன் தாழ்ந்தது. இவள் கேட்ட கேள்விகளுக்குச் சுருக்கமாய்ப் பதில் சொன்னபடி, ஊட்டிவிடப்பட்ட இட்லிகளை மென்று முழுங்கினான்.

அவனது உடம்பை உதவியாள் துடைத்துவிட்டபின், தான் எடுத்து வந்த சலவை சட்டையைத் தம்பிக்குப் போட்டு விட்டாள்.

அவள் கேட்ட கேள்விகளுக்கு செவிலியிடம் முழுமையான பதில்கள் வரவில்லை.

''இப்ப டாக்டர் வர்ற நேரம். அவரிடமே கேட்டுடுங்களேன்'' என்று சொல்லிவிட, அவரது வருகைக்காகக் காத்திருந்தாள்.

வந்த மருத்துவர் அனைத்து நோயாளிகளையும் ஒரு 'சுற்று' வந்து பார்க்கும்வரை ஓரமாய் நின்றவள், அவர் அறைக்குப் போன பிறகு பின்னே போனாள்.

தன்னை அறிமுகப்படுத்தியவளின் முதல் கேள்வி - ''சிகிச்சைக்கான செலவு எவ்வளவு ஆகும் டாக்டர்'' என்பதுதான். அவர் தனது மேட்டு நெற்றியை நீவியபடி சற்று ஆச்சரியமாய் அவளைப் பார்த்தார்.

''அசோக்கைப் பார்த்தபோது அவனுக்கு எந்த ஆபத்தும் இல்லைன்னு சொன்னீங்களே டாக்டர்... அடுத்தது செலவு எவ்வளவுங்கிறதைத்தானே நான் பார்க்கணும்.''

''தொண்டையை செருமிவிட்டு பேசத் தொடங்கினார் மருத்துவர். ''எந்த ஆஸ்பத்திரியிலேயும் விபத்துல சிக்கியவங்களை எடுத்துக்கிறதில்லை - நானும்தான். என் மகனின் சிநேகிதன்ங்கிறதாலதான் சேர்த்தேன்... சிகிச்சை அளித்தேன்.''

''புரியுது டாக்டர். நீங்க செய்தது பெரிய உதவி. அதுவும் தக்க நேரத்தில் செய்த, உயிரைக் காக்கும் உதவிதான். அதற்கு என் நன்றி. ஆனால், என் பிரச்சினை என்னவென்றால், நான் தொடர்ந்து ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் தம்பியைத் தங்க வைத்துச் செலவழிக்க முடியாது. அதாவது - அதற்கான வசதி என்னிடமில்லை. அசோக்கை அரசு மருத்துவமனைக்குக் கூட்டிச் செல்லலாம் என்று...''

மருத்துவரின் விழிகள் சற்றுக் கோபத்துடன் உருண்டன. ''விபத்து - எங்கே எப்போ நேர்ந்தது? பயல் எங்கே சிகிச்சை பெற்றான்னு கேள்வி வருமேம்மா...''

''அது உங்களைப் பாதிக்காமல் பார்த்துக்குவேன் டாக்டர். அது என் பொறுப்பு...''

''அதெப்படிம்மா?'' அவரது குரல் சற்று உயர்ந்தது.

இவள் குரலை உயர்த்தாமலேயே பதிலளித்தாள். ''ஏன்னா... எனக்கு அங்கே மருத்துவமனைகளைத் தெரியும். தவிர என் தம்பியின் உடல்நிலை பற்றி இன்னொரு டாக்டரிடமும் அபிப்பிராயம் கேட்டுக்கிறதும் நல்லதுன்னு நினைக்கிறேன்.''

மருத்துவர் வாயடைத்துப் போனார். பணமும் அந்தஸ்தும் உள்ளவர்கள் சொல்வதை அதே தோரணையில் சொல்கிறாளே இப்பெண்!



''உன்... உங்க தம்பிக்கு ஆபத்து இல்லை... இயல்புதான்...''

''அதனால்தான் அவனை வேறு இடத்திற்கு மாற்றலாமான்னு கேட்டேன்'' - மிடுக்காகவே சொன்னாள்.

''நீங்க நர்சா?''

''இல்லை. ஆனால், டாக்டர் கிளாடிஸ்சிடம் உதவியாளராய் இருந்த அனுபவமுண்டு. அவங்களும் அசோக்கை வந்து பார்ப்பதாகச் சொன்னாங்க.''

''ஓகோ...''

''ஆம்புலன்ஸ் எல்லாம் நானே ஏற்பாடு செய்திடுறேன் டாக்டர். உங்க கட்டணம் எவ்வளவுன்னு சொன்னால்...'' தொடங்கிய இடத்திலேயே வந்து நின்றாள்.

தைரியமும் தெளிவுமாய் தன் முன் நின்று பேசும் இளம் பெண்ணை சுவாரசியமாய்ப் பார்த்தார். ஆரோக்கியம் - அழகுள்ளவள் என்றாலும் காசுள்ளவள் அல்ல.

'காதில் தங்கப் பொட்டுகள் - கழுத்தில் ஏதோ பாசி வகை, கைகளில் ஒவ்வொரு கண்ணாடி வளையல். தூக்கி வாரிய கூந்தலும், சீராகக் கட்டிய சேலையும் அவளுக்குக் கம்பீரம் சேர்த்தன என்றாலும் முக்கியமானவை, அந்த பேச்சின் புதுமைத்தொனி... அசராத பார்வை...

புன்னகையுடன் நியாயமான தொகையே சொன்னார்.

''நன்றி டாக்டர். இன்று மாலை பணத்தைக் கட்டி 'டிஸ்சார்ஜ்' பண்ணிக்கிறேன். உங்க உதவிக்கு மீண்டும் நன்றி.''

மறுபடி டாக்டர் கிளாடிசுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவரின் ஆலோசனைப்படி பரிச்சயமான வேறு சில





மருத்துவர்களிடம் ஓடி, தம்பியை அரசு மருத்துவமனைக்கு மாற்றி விட்டாள்.

அவள் கிளம்பும்போது செவிலிகள் கிண்டினார்கள்.

''ஏம்மா... ஒரே தம்பிங்கிறே... அங்க கவனிப்பு எப்படி இருக்குமோ? பேசாம இங்கேயே இருக்கட்டுமே?''

''இங்கேயே தங்க நாங்க கடன்படணும்... அங்கே இலவசமாய் எலும்பு மருத்துவர் நிபுணர் ரங்கராஜனே இவனைப் பரிசோதிக்கப் போறார்.''

''யார்... டாக்டர் ரங்கராஜனா?''

''அவரேதான்... அங்கேயும் எல்லாரும் உங்களை மாதிரியே நல்லா கவனிப்பாங்கங்கிற நம்பிக்கையோடு போறேன்... மற்றது கடவுளின் பொறுப்பு'' என்று விடைபெற்றாள்.

அவளது நம்பிக்கை பழுதுபடாமல் அங்கும் அனைத்தும் நல்லபடியே நடக்க, அசோக் விரைவில் தேறினான்.

தம்பியை வீட்டுக்கு அழைத்து வந்தபோது அஸ்வினியின் முகத்தில் முழு நிம்மதி தெரிந்தாலும் சேமிப்பில் மிச்சம் இல்லை.

''பத்து, பன்னிரண்டாயிரம் போச்சா... எப்படிக்கா?''

''இத்தோடு போனதே நம்ப புண்ணியம்டா... பைசா பைசாவாய் சேர்த்த பணம்... ஆனால், கடன்படாமல் சமாளிச்சாச்சு.''

ஏறக்குறைய ஒரு மாதம் கழித்துச் சொன்னான் - ''மன்னிச்சிடுக்கா.''



''விபத்துங்கிறதே எதிர்பாராமல் நேருவதுதானடா... நீ கண்டபடி சுற்றினதைத் தவிர்த்திருக்கலாம்... அன்னைக்குக் குடிச்சிருந்தியா?''

''ஐயோ... இல்லைக்கா... அருண் ஏதோ கொஞ்சம் போட்டிருந்தான் போல...''

''நீ அவனோடு ஏறி வரலாமா?''

''எனக்கு வேலை வாங்கித் தருவதாய்ச் சொன்னான். அதுபற்றி பேசியபடியே வந்தோம்... எதிரில் வந்த காரின் தவறுதான்...''

''அந்த வேலை இப்ப கிடைக்குமா?''

''அதானே... அருணிடம் சொன்னால் இங்கேயே ஓடி வந்திடுவான்க்கா... ஆஸ்பத்திரிக் கட்டணத்தைக்கூட அவனே கட்டுறேன்னு சொன்னான்.''

''அது சரியாய் இருக்காது. நம்ம சுமைகளை நாமேதான்டா சுமக்கணும். வேலை விஷயமாய் நானே அவனிடம் பேசுறேன். நம்பரைக் கொடு. ஆனால், அதிக உடல் உழைப்பு இல்லாத வேலையாய் இருந்தால் தேவலை.''

''ஆடைகளைத் தைத்துக் கடைகளுக்கு அனுப்புறதுதான் அவங்க தொழில்க்கா... அதில் மேற்பார்வையாளர் வேலைன்னான்.''

''பிரச்சினையே இல்லை... பணம்தான் இப்ப நமக்குப் பிரச்சினை, தெரியுமா அசோக்?''

அவன் உதடுகளைக் கடித்தபடி குனிந்திருந்தான்.

''தலை ரொம்ப வறண்டு கிடக்குதேடா'' என்றபடி ஒரு கை எண்ணெயை அவன் தலையில் வைத்துத் தேய்த்தாள்.

அவனுடைய உடம்பு தேற, அவனுக்கு மட்டும் பாலும் பழமும் தந்துவிட்டு அக்கா வெறும் சோற்றைக் கீரை மசியலுடன் சாப்பிடுவது அவனுக்குத் தெரியும். அந்தக் கீரையும்கூட அவர்கள் வீட்டின் கொல்லைப்புறத்தில் பயிரிட்டு பறித்துக் கொள்வதுதான்.

டியூஷன், வீட்டு - தோட்ட வேலைகள் ஆசிரியை உத்தியோகம் என்று உழலும் தமக்கைக்கு இதுவரை தன்னால் உதவி ஏதுமில்லை; உபத்திரவம்தான் என்பதை உணர்ந் தவனின் முகம் இறுகியது.

அக்கா மெலிந்திருந்தாள்.

சிவந்த அவளது மேனி, அதிக அலைச்சலில் வாடி இருந்தது.

சுத்தமாய் உடுத்திக் கொண்டு தினம் பள்ளிக்குப் போய் விடுகிறாள் என்றாலும் அவளுக்குள் குழப்பங்கள் அலை பாய்வது இவனுக்குப் புரியாமலில்லை.

''இனி நானும் உதவுறேன்க்கா...''

''ம்... இல்லைன்னா தாக்குப் பிடிக்க முடியாதுடா - வீட்டு வாடகையை ரெண்டு மாசமாய்க் கொடுக்கலை... இதையும் சேர்த்தால் மூன்று மாசமாச்சு... பக்கத்து வீட்டு அக்காளிடம் கீரை, அவங்க மாட்டுக்குக் கழனித் தண்ணீர், தந்துதான் அரை லிட்டர் பால் வாங்கிக்கிறேன் - உனக்கு மருந்துக்கு வேறு செலவாகுது...''

இவன் பெருமூச்செறிந்தான்.

''உன்னை நோகடிக்கறதுக்காக சொல்லலைடா... நம்ம நிலைமை இதுங்கிறது உனக்கும் தெரியணுமில்லையா? டாக்டர் கிளாடிஸ் தர்றதாய்ச் சொன்ன வேலையை ஏற்றுக்க மாட்டேனுட்டே... அப்படியே உன்னை கார் ஓட்டப் படிக்க வைப்பதாயும் சொன்னாங்க.''



''ஏன்... என்னை அவங்களுக்கு ஓசியில டிரைவர் ஆக்கும் திட்டமா?' என்று தான் சீறி மறுத்தது. அசோக்கிற்குக் குறுகுறுப்பாய் நினைவு வந்தது.

''முடிந்தவரை நம் தகுதிகளை வளர்த்துக்கணும் அசோக்... தேடிவரும் சந்தர்ப்பங்களை அலட்சியம் பண்ணக் கூடாது...''

மிருதுவாய் அறிவுறுத்தினாள், மூத்தவள்.

இப்போது இரும்பு சற்று கனிந்திருக்கிறது - அடித்தால் வளைக்கலாம் என்ற நப்பாசைப் பேச்சு.

''இப்ப... நான் டாக்டரம்மாகிட்ட கேட்டால்...''

''போய்க் கேளு... அவங்க உதவியில்லாமல் நாம இந்தக் கண்டத்தை இத்தனை சுலபமாய் தாண்டியிருக்க முடியாது. அவங்களுக்கு ஓசியில் கார் ஓட்டினாலும்கூட தப்பில்லை. நன்றியோடு செய்யக் கடமைப்பட்டிருக்கோம்.''

''ம்...''

''அருணிடம் வேலைக்குச் சேர்ந்துக்கோ... காரோட்டவும் கற்றுக்கோ... இவைதான் இப்ப உனக்கு முன் வந்திருக்கும் சந்தர்ப்பங்கள்... யாருக்குத் தெரியும்...? அடுத்து உனக்கு என்ஜினீயரிங் படிக்கும் வாய்ப்புகூட வரலாம்...''

''ம்ப்ச்...'' கசப்புடன் உதட்டைச் சுழித்தான்.

அஸ்வினிக்குள் வலித்தது.

முயன்று படித்தும் தன் கனவுகள் கருகிய வருத்தம், அவனுக்கு. தன்னால் மட்டும் முடிந்தால்... எப்பாடு பட்டாவது அவனைப் பொறியியல் கல்லூரியில் சேர்த்துவிடுவாளே... ஒரே தம்பியை அறிவும் அந்தஸ்தும் உள்ளவனாய்ப் பார்க்க இவளுக்கு மட்டும் கசக்குமா என்ன?



ஆனால், காலம் போடும் கணக்கு என்னென்னவோ?

தொலைவில் கோவில் மணி அடித்தது...

## 3

சைக்கிளைவிட்டு அவசரமாய் இறங்கியவள், தரையை ஆராய்ந்தபடி பின்னே நடந்தாள். அவளது பார்வையில் அது பட, ஆத்திரத்துடன் கண்களை உயர்த்தினாள்.

யார் வேலை இது?

குதிரை லாடத்தைப் போட்டு, காற்றுக்கு வேட்டு வைத்த போக்கிரி யார்?

அது எதேச்சையாகவும் இங்கு கிடந்திருக்கலாம்... ஆனால் இத்தனை அலட்சியமாய் இதை இங்கு வீசலாமா?

''புத்தி கெட்டதுங்க... மட்டி... மக்கு... எங்கே எதைப் போடணுங்கிற விவஸ்தையற்ற கழுதைங்க...''

''நீங்க டீச்சரா?''

பின்னாலிருந்து வந்த குரலில் அவசரமாகத் திரும்பினாள்.

பார்த்த கண்கள், வியப்பால் பெரிதாகின. 'யார் இவன்...? சத்தமில்லாமல் எங்கிருந்து இங்கே முளைத்தான்?'



சற்றுத் தொலைவில் நிறுத்தப்பட்ட காரைக் கண்டதும் ஓரளவு விளங்கியது. ஆனாலும் வாகனத்தை அங்கே நிறுத்திவிட்டு பூனை போல தன் பின்னே வந்து நிற்பானேன்?

''ஆங்... எப்படித் தெரியும்?''

''பார்த்தாதான் தெரியுதே...''

''அதில்லை நான் டீச்சருன்னது...''

முகம் சிவக்க, பேச்சை வளர்க்க விரும்பாமல் சைக்கிளை, தள்ளிப் போக முயன்றாள்.

''சப்பை டயரோடு இப்படி இழுத்திட்டுப் போறது சுலபமில்லை...''

''ஆமாம்.''

''என் கார்ல உங்க சைக்கிளை ஏற்றிடலாம்.''

''நான் பள்ளிக்கூடம் வரை போகணும்.''

''என் காருக்கு ஆட்சேபனை இருக்காது - போகலாமே...''

அவனது பேச்சு, ஒருபுறம் சிரிப்பையும் மறுபுறம் எரிச்சலையும் கிளறியது.

ஆனால், இரண்டையும் காட்டிக் கொள்ளாமல் ''இல்லை...'' என்று தயங்கினாள்.

அன்று காலை பள்ளிக்கூடத்தில் 'காலத்தின் முக்கியத்துவம்' பற்றி அவள் பேச வேண்டியது இருந்தது. ஆக... தாமதமாய் போக முடியாது...

அதற்குள் அவன் 'விறுவிறு' என்று தன் காரை நோக்கிப் போகத் தொடங்க, அஸ்வினி தவித்தாள்.

கிடைத்த உதவியை உதறியது முட்டாள்தனம்.

போகிறவனை உரக்க அழைக்கவும் கூச்சமாக இருந்தது. அவனது முகத்தில், கண்களில், பேச்சில் தெறித்த நக்கல்தான் இவள் வாயைக் கட்டிவிட்டது போலும்.

கார், சன்ன உறுமலுடன் கிளம்பியது.

ஆனால், இவளைத் தாண்டிப் போகாமல் அருகேயே நின்றது. வியப்பும், சிறு நன்றியுமாய் காரிலிருந்து இறங்கியவனைப் பார்த்தாள். அவனோ காரிய கண்ணனாய் சைக்கிளை தன் வாகனத்தில் ஏற்றும் முயற்சியில் இருந்தான். ஜீப்பும் காரும் கலந்து பிரசவித்தது போன்றது அவ்வாகனம். பின்புறம் சைக்கிளை முனங்காமல் ஏற்றிக்கொண்டது.

''ரொம்ப நன்றிங்க...''

''அமர்...''

''ம்...?'' கேள்வியோடு பார்த்தாள்.

''என் பேரைச் சொன்னேன்.''

''ஓகோ...?''

தன்னை அவன் ஒரு வினவலுடன் பார்ப்பது,புரிய, ''என் பேர் அஸ்வினி'' என்றாள், மரியாதை நிமித்தம்.

''ஓகோ?'' என்றான், அவளுடைய அதே தொனியில்!

அதன்பிறகு இருவருக்கிடையே மௌனம் அமர்ந்து கொண்டது. பள்ளிக்குப் போகும் வழியை அவள் சொல்ல முனைய.

''தெரியும்'' என்றான், சுருக்கமாய்.



பள்ளிக்கூட வாசலில் அவள் சைக்கிளை இறக்கி வைத்தபடி கேட்டான்.

''எப்படி பழுது பார்ப்பீங்க? நான் வேணுமானால் எடுத்துப் போய் கடையில் விடவா?''

இவளுக்குள் நெகிழ்ந்தது.

''வேண்டாங்க... இங்கே பியூன் உண்டு. உங்க உதவிக்கு ரொம்ப நன்றி...''

''அதுதான் ஏற்கனவே சொல்லியாச்சே...''

''ஆமா... ஆனால் இன்று காலை பள்ளிக்கூடத்தில் நான் பேசணும். அதுவும் நேரத்தின் அருமையைப் பற்றி... தாமத மாய் வந்து என்ன சொன்னாலும் எடுபடாதே... அதான்...''

''நல்லது - நல்லாப் பேசுங்க - பிறகு பார்ப்போம் - வர்றேன்!'' அவன் வாகனம் கிளம்பிவிட, சற்று மலைத்து நின்றாள்! 'பிறகு ஏன் பார்க்கணும்?'

''யாரு அஸ்வினி அவர்? இந்தப் பக்கத்துல ஆள் மாதிரியில்லை... பெரிய பட்டணத்து ஆள் போல அசத்தலாய் இருக்காரே...?''

கேட்ட சக ஆசிரியையுடன் நடந்தவள், அவனுடைய தோற்றத்தை மறுபடி மனதுக்குள் கொண்டு வந்து ஆராய்ந்தாள்.

நல்ல உயரம் - அதற்கேற்ற உடற்கட்டு.

அடங்காத தலைமுடி... அவன் கண்களும் அடங்கத்தான் இல்லை... அதில் குறும்பு... கூடவே வேறு ஏதோ ஓர் உணர்வும் கொப்பளித்ததோ?



ஆனால், மற்றபடி ரகசியம் காக்கத் தோதான முகம்!

என்ன நினைக்கிறார் என்பதை அறிவித்துவிடாத அழுத்தமான பாவனை. அதிகம் பேசாமல் செயல்பட்ட அவன் வேகத்தை நினைத்தான்.

உடைகள் அவனைக் கண்ணியவானாக, ஏன் காசு உள்ளவனாகவும் காட்டின.

இவனை எங்கோ பார்த்திருக்கிறேனோ...?

ஞாபக அடுக்குகளைப் புரட்டி யோசித்தாள்.

''ஊகூம்...''

''யாருன்னு கேட்டேனே?'' தோழி, விடாமல் கிண்டினாள்.

''தெரியலை கோகிலா... சைக்கிள் பழுதாகி விட்டது. வந்து உதவினார்...''

''நல்லவர் போல... ஆனா ஒரேயடியாய் அப்படியும் சொல்லிவிட முடியாது. அழகான பெண்ணிற்கு உதவப் பல ஆண்டுகள் படு தயாராய்தானே இருப்பார்கள்.''

அஸ்வினியின் நெற்றி சுருங்கியது.

''என்ன யோசனை?''

''நான் அழகான்னுதான்...''

கோகிலா வாய்விட்டுச் சிரித்தாள்.

''பார்த்தியா... நீ ரொம்ப அழகு அஸ்வினி. மறுபடி மறுபடி பார்க்க வைக்கும் அழகுன்னு நாங்க கொண்டாடணும்னு எதிர்பார்க்கிறே...''



''இல்லை கோகிலா... என் தோற்றத்தைப் பற்றி நான் யோசிக்கிறதேயில்லை... அதான் அந்த மாதிரியான சந்தேகம்...''

''அதான்டி... உன் அழகு, அலட்டாத... ஏன், தான் அதி அழகுன்னும் உணராத அடக்கம்தான் உன் தனி அழகு... ஏன் உங்க வீட்டுல யாரும் சொன்னதில்லையா? எங்க வீட்டுல... அதாவது நான் இத்தனை அம்சமாய் இருந்திருந்தேன்னா, எங்கம்மா சுத்திப் போட்டே உப்பு, மிளகாயைக் காலியாக்கிடுவாங்க...''

மற்றவளின் மௌனத்தில் கோகிலா சுதாரித்து வருந் தினாள்.

''மன்னிச்சிருடி... உங்கம்மா இப்ப இல்லைங்கிறதை மறந்து...''

''ஆனா கடவுள் அப்பப்ப உதவ சரியான ஆட்களை அனுப்பிடுறார் இல்லையா... பாராட்ட உன்னை அனுப்பியது போல...''

பெண்கள் சிரித்தனர்.

''உண்மைதான்... அந்த ஆணழகனை நீ இதுவரை பார்த்ததே இல்லையா?''

மறுபடி அஸ்வினியின் நெற்றியில் கேள்விச் சுழிகள்...

''எங்கேயோ பார்த்தது போலவும் இருக்கு... ஆனால் தெரியலை...''

''அதெப்படி மக்கு? இத்தனை 'பளிச்'சுனு ஒருத்தர் கண்ணில் பட்டால் அப்படியே 'பச்சக்'னு மூளையில் பதிஞ்சுட வேணாமா?''

புன்னகையுடன் தலையாட்டினாள், அஸ்வினி.

''என் மூளையில் என் தம்பியும் எங்களுக்குச் சோறு போடுகிற இந்த வேலையும் மட்டும்தான் இருக்குது கோகிலா... அதையும் மீறி வேறேதும் பதியாது...''

''அதெல்லாம் அததுக்கான நேரம், வரும்போது தானாய்ப் பதியும்...''

ஆசிரியர்களின் அறைக்குள் நுழைந்து தோள் பையை வழக்கமான இடத்தில் வைத்தவள், கைப்பையிலிருந்து அன்றைக்குப் பேச வேண்டிய குறிப்புத் தாளை எடுத்துப் பிரித்தாள்...

மனதுக்குள் ஏனோ அவன் முகமே விரிந்தது.

மறுபடி பார்ப்போம் என்றானே... எப்போது?

ஆனால், மறுபடி மாலையே அவனை நிச்சயமாய் எதிர்பார்க்கவில்லை. அந்தக் கருநீல வாகனத்தைப் பார்த்ததும் அவளுக்கு அதிர்ச்சியில் சற்று விக்கித்து விட்டது.

பார்வையைத் தழைத்து ஓட்டுநர் இருக்கையைத் துழாவினாள்.

அவனேதான்!

இவளைப் பார்த்துவிட்டு காரிலிருந்து இறங்கினான்.

காலையில் பார்த்ததைவிட இப்போது மேலும் உயரமாய்த் தெரிந்தான்... அதற்குள் வளர்ந்திருக்க முடியாதே என்ற நக்கல் நினைப்புடன் அவன் முகத்தை நோக்கிப் புன்னகைக்க முயன்றாள்.

அவன் கண்களில் அதே சீண்டல்.



''என்ன மிரண்டு முழிக்கிறீங்க?''

''எதிர்பார்க்கலை... அதான்.''

''உங்க வாகனம் சரியாகலைன்னால் என் வாகனத்தால் அழைத்துப் போகலாம்னுதான்.''

அவளுக்குப் படபடத்தது.

காலையில் நேர்ந்தது எதேச்சையான சந்திப்பு...! ஆனால், இது திட்டமிட்ட சந்திப்பு. இது சரியில்லை!

''அவசியமில்லைங்க... சைக்கிள் சரியாயிடுச்சு...''

''நல்லது...'' ஒரு தோள் குலுக்கலுடன் விலகினான்.

தூரத்தில் கோகிலா வருவதைப் பார்த்த இவள், அவசரமாய் சைக்கிளில் ஏறி அழுத்தினாள். கேலியான கேள்விகளை எதிர்நோக்கும் தெம்பில்லை. மனம் மிரண்டு படபடக்கிறதே...

ஆனால், அதையும் மீறி ஒரு பரவசமும் படருவதை உணர முடிந்தது. அது ஏன் என்பது புரியவில்லை. எனினும் சைக்கிளை மிதிப்பது மிக இலகுவாய் இருந்தது. சைக்கிளுக்கு இறக்கைகள் முளைத்து விட்டனவா? தானே இலேசாகி விட்டது போன்ற சிலிர்ப்புடன் பறந்தாள்.

## 4

**வீ**டு நுழைந்தவளிடம் இனிப்புத் தட்டை நீட்டினான். அசோக்.

''என்னடா?'' ஆச்சரிய ஆனந்தத்துடன் கேட்டாள்.



''இன்னைக்கு நானே காரைத் தனியே எடுத்தேன்க்கா. பயிற்சி கொடுத்த மாஸ்டர் 'நல்லா ஓட்டுறே'ன்னாங்க. லேசில் தட்டிக் கொடுக்காத ஆள் அவர்.''

''பரவாயில்லையே... பதினைஞ்சு நாள்ல ஓரளவு தேறிட்டியே?''

''இப்படியே ஓட்டினால் டிரைவர் வேலை வாங்கித் தருவாராம். அப்படியே இன்ஜின் வேலையையும் கூடமாட நின்னு கத்துக்கிறேன்.''

இவள் கண்களில் நீர் மல்கியது. ''உழைக்க முடிவு செய்துட்டே... இனி நிமிர்ந்திடுவோம்டா.''

''இதோ...''

கொண்டையைப் பிரித்து, பின்னி முகம் கழுவியவள், சமையலறைக்குள் புகுந்தாள். தட்டில் தயாராய்த் துருவி வைக்கப்பட்டிருந்த தேங்காய்ப்பூ, பிற சாமான்களுடன் அம்மியில் சாய்க்கப்போனவளை தம்பியின் குரல் தடுத்தது.

''மிக்சியிலே போடுக்கா.''

''அதுதான் பழுதாயிடுச்சே.''

''இப்ப போட்டுப் பாரேன்.''

தட்டிலிருந்ததை, மின் அம்மியில் தட்டியவள் அதை மூடி விசையைத் தட்ட, உற்சாகமாய் தன் வேலையைச் செய்தது.

தம்பியைப் பூரிப்புடன் திரும்பிப் பார்த்தாள். ''எப்படிடா?''

''பொறியியல் படிச்சாத்தானா? நம் வீட்டுப் பொறியை முதல்ல இயக்குவோம்னு செயலில் இறங்கிட்டேன்.''



''நீ கெட்டிக்காரன்டா.''

பாராட்டியவளின் மனதுள் அன்று சந்தித்த இளைஞனின் முகம் மறுபடி ஏறி ஆடியது.

அவனைப் பார்த்தது நல்ல நேரம் போலும். நடப்பவை எல்லாம் அருமையான நிகழ்வுகள்.

**ம**றுநாள் பள்ளிக்குப் போகும் வழியில், அவனது கார் இவளை முந்திக்கொண்டு பறந்தது. ஆனால், சற்றே குனிந்து, இவள் புறமாய் கையசைத்துவிட்டுப் போனான்.

இவளுக்குள் மறுபடி ஒரு பதற்றப் பரபரப்பு. வெட்கமும் விநோதமுமான புது சங்கடம்.

இப்படிச் சாலையில் கையாட்டியபடி போனால் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? அதே நேரம் அவன் தன்னைக் கண்டு கொள்ளாமல் விரைந்திருந்தாலும் மனம் கூம்பி வாடியிருக்கும்.

இத்தகு நினைப்புகளுடன் வெடித்துக் கிளம்பிய புன்னகையைத் தன்னுள் ரகசியமாய் மென்று ரசித்தாள்.

அதன் பின் அடிக்கடி அவனைப் பார்க்க நேர்ந்தது. அவ்வப்போது நெஞ்சுக்குள் வந்து கோலமிட்டான். விடாதபடி இவளும் நீர் ஊற்றிக் கலைத்தபடி இருந்தாள்.

**அ**ன்று தன் வீட்டு வாசலில் பழைய கார் ஒன்று நிற்பதைப் பார்த்தவள், குழப்பத்தோடு படியேறினாள். நாற்காலியில் காலாட்டியபடி இருந்தவர், திரவியம்.

''அண்ணாச்சியா... வாங்க'' பரபரப்பாய் வரவேற்றாள்.

''வாம்மா... களைச்சுத் தெரியுறே... முதல்ல ஏதேனும் சாப்பிடு.''

''இருக்கட்டும் அண்ணாச்சி'' என்றபடி எதிர் முக்காலியில் அமர்ந்தாள். புன்னகைத்தபடி அமர்ந்தாலும் வயிறு சற்று புரண்டது. இவர்கள் சொந்த வீட்டை விற்றுவிட்டு எங்கே போவது என்று நின்றபோது உதவிக்கு வந்தவர்தான் திரவியம்.

''என் சிநேகிதனுடைய வீடுகள் சில, செந்தில் நகரில் இருக்குதும்மா. வீடு பழசுன்னாலும், கிணறும் மரமுமாய் குளுகுளுன்னு இருக்கும். நம்பிக்கையானவங்களாய் குடி வைக்கணும்னான். வாடகையும் கூட அதிகம் எதிர்பார்க்கலை. முன் பணமும் வேண்டாம். ஐந்நூறு ரூபாய் சரிப்படுமா?''

அப்படி குடிவந்ததுதான் இங்கு. ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இவளே திரவியத்தின் வீடு தேடிப் போய் வாடகைப் பணத்தைத் தந்து விடுவாள். அசோக்கின் வைத்திய செலவு, சேமிப்பையும் உறிஞ்சிவிட, வாடகைப் பணம் தரவில்லை. குற்ற உணர்வு குத்தியது.

''மன்னிக்கணும்... வீட்டு வாடகை...''

''நான் அதுக்காக வரலைம்மா... ஆனாலும் வீடு சம்பந்தப்பட்ட விஷயந்தான்.''

''சொல்லுங்க.''

''வீட்டுச் சொந்தக்காரருக்கு இப்போது இந்த இடம் தேவைப்படுது. நீங்க காலி பண்ணிட்டால் நல்லது.''

'பக்'கென்றது. 'ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை' என்றபடி கழுத்தில் கத்தியை வைத்து விட்டாரே... ''கொஞ்சம் பொறுத்துக்கணும். அண்ணாச்சி... வேறு வீடு கிடைக்குமான்னு பார்க்கிறேன்.''



அதற்குள் விருந்தாளிக்கும் அக்காவிற்குமாய் காப்பி போட்டு, பிஸ்கட்டுகளுடன் எடுத்து வந்த அசோக் குறுக்கிட்டான் -

''உங்க சிநேகிதருக்கு இன்னும் சில வீடுங்க பக்கத்திலேயே உண்டே சார்... அதை உபயோகிச்சுக்கக்கூடாதா?''

''இதுதாம்ப்பா உள்ளதிலேயே பெரிசு. பத்து சென்ட் நிலம். இதைத் தரை மட்டமாக்கி விற்பனைக் கூடம் ஒன்று அமைப்பதாய் திட்டம்.''

''சரி... அப்படின்னா மற்றொரு சின்ன வீட்டுக்கு நாங்க குடியேறிடுறோம்'' சமயோசிதமாய்ப் பேசிய தம்பியை நன்றியுடன் பார்த்தாள். தனியே சிந்தித்துச் செயல்பட்டுப் பழகியவள்தான். எனினும் துணை இருப்பது பெரிய தெம்பாய் இருந்தது.

அண்ணாச்சி மோவாய் தூக்கி ஏதோ யோசித்தார். ''இதெல்லாம் நேரே அவனைக் கேட்டுடறது நல்லதும்மா... ஓட்டல்ல சொந்தக்காரன் இப்ப ஊரில்தான் இருக்கான். பக்கத்து ஓட்டல்ல தங்கியிருக்கான். நேரில் பேசி...''

''ஆகட்டுங்க... மூணு மாச வாடகையை எடுத்துப் போய் தந்து நயமாய்ப் பேசினால்...''

''அவன் நல்லவன்... செய்ய முடியுதோ இல்லையோ, நீ சொல்றதைக் காது கொடுத்துக் கேட்பான்.''

''ம்... தம்பிக்கு விபத்து நேர்ந்து... நிறைய செலவாயிடுச்சு...''

''கேள்விப்பட்டேன். டாக்டர் கிளாடிஸ்கிட்ட பரி சோதனைக்குப் போனப்ப சொன்னாங்க. தம்பிப் பயல் டிரைவிங் பழகுறானாமே?''





''ஆமா... இப்பத்தான் ஒரு நிலைக்கு வர்றது போல இருக்கோம். இன்னொரு மாற்றத்தை, பெரிய செலவை சமாளிக்கிறது சிரமம். புது வீடுன்னா ஆயிரக்கணக்கில் முன்பணம் தரணுமே... உங்க சிநேகிதரிடம் ஒரு வார்த்தை சொல்லி வையுங்க அண்ணாச்சி...''

''சொல்றேன். ஆனாலும் நீ சொன்னால் அது தனிதான். அவன் பேர் அமரேசன். அறை எண்: 115.''

''நாளை காலையே போகட்டுமா? சனிக்கிழமை விடுமுறைதான். பத்து மணிக்கு?''

''சரி... நீ வர்றதாய்ச் சொல்லிடுறேம்மா.''

அவரை வாசல் வரை போய் வழியனுப்பிவிட்டு அக்காவும் தம்பியும் ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றார்கள்.

ஒருபக்க சுவர் முழுக்கக் கண்ணாடி. அதற்குப் போட்டியாய் 'நானும்தான் மின்னுகிறேன்' என்ற சடாலடித்தது. பளபளவென்ற சலவைக்கல் தரை.

கண்ணாடிச் சுவரால் ஓட்டலின் வரவேற்பறை இரட்டிப்பாய்த் தெரிந்தது - விஸ்தாரமானது போன்ற மாயத் தோற்றம் காட்டி மருட்டியது. ஆங்காங்கு நின்ற சிலைகளும், பூங்கொத்துகளும் நளினம் சேர்த்தன.

இளம் ஆரஞ்சு நிறத்தில் கரும்பச்சை நிறக் கரையிட்ட கைத்தறிச் சேலையின் முந்தானையால் தன் முக வியர்வையை ஒற்றி எடுத்தாள், அஸ்வினி.

வரவேற்பறையில் நின்ற பெண்ணிடம், ''அறை எண் 115'' எனக் கேட்டவளின் காகிதப் புன்னகை, ஏதோ சற்று கசங்கியது.



''அங்கே உட்காரங்க. அவரிடம் சொல்றேன். உங்க பேர்? பார்க்க வந்த நோக்கம்?'' சற்று சிடுசிடுப்பாகவே கேட்டாள்.

''அஸ்வினி. அவரது வீட்டில் வாடகைக்கு இருக்கோம்.''

''இருங்க.''

ஓரமாய் கிடந்த நீள சோபாவில் அமர்ந்தவள், எப்படித் தொடங்குவது, என்னவெல்லாம் சொல்வது என்ற சிந்தனையில் மூழ்கி நிமிர்ந்தபோது சற்று ஆச்சரியமானாள். எதிரே தெரியும் அழகிய பெண் யார்?

தன் பிம்பம்தானா அது?

முழு நீள கண்ணாடியில் அதுவரை தன்னைப் பார்க்கும் சந்தர்ப்பம் வாய்க்காத அஸ்வினிக்கு இனிப்பான திகைப்பு.

இத்தனை ஒயிலாய் கண்ணைக் கவரும் வண்ணம் தெரிவது தானேதானா? கைத்தறிச் சேலையிலும் கூட மங்காத, மறையாத உடல் வளைவுகள்.

அந்த வடிவிற்கு ஏற்ற எழில் முகம்... நெளிநெளியான அடர் கூந்தல். தன்னையே ஆர்வமாய்ப் பார்த்தவள், வேறு யாரும் இதைக் கவனிக்கிறார்களோ என்ற கூச்சத்துடன் சுற்றிலும் பார்க்க, வரவேற்பறை பெண் தன்னைக் கோபமாய் பார்ப்பது புரிந்தது.

தன் உத்தியோகத்திற்கேற்ப இனிமையாய் புன்னகை சிந்தாமல் ஏனிந்த எரிச்சல்?

இவளருகே வந்த ஒரு சிப்பந்தி, ''அமரேசன் சார் வர இன்னும் பத்து நிமிஷமாகும் உங்களை உணவகத்தில் உட்காரச் சொன்னாங்க.''

''பரவாயில்லை.''

''இல்லைம்மா... நானே கூட்டிட்டுப் போறேன்.''

மேலும் மறுக்க முடியாமல் அவனைப் பின் தொடர்ந்தாள். எங்கும் மெல்லிய இசையும் நறுமணமும் கலந்து பரவியிருந்தன. இங்கு தங்க ஒரு நாள் வாடகையே ஆயிரம் ரூபாய் இருக்கலாம். தான் கொண்டு வந்த இந்த பிசாத்து 1,500 ரூபாய்க்கு மயங்கி இந்த அமரேசன் மனமிளகிவிடுவாரா என்ன? அவளது நம்பிக்கை கரைந்து குறைந்தது.

கதவைத் திறந்த சிப்பந்தி, குளிரூட்டப்பட்ட உணவகத்துள் அவளை அமரச் செய்து மற்றொருவனிடம் ஏதோ சொல்லி விட்டுப் போக, மறுநிமிடம் 'ஜில்'லென்று ஆரஞ்சு பழரசமும், சூடான வடையும் அவள் மேசைக்கு வந்தன.

இவள் குழப்பத்துடன் ஏறிட, ''எதிர்பாராமல் போன் வந்திடுச்சாம். அதான் தாமதம். நீங்க சாப்பிடுறதுக்குள்ளே சார் வந்திடுவாராம்.''

இந்தக் கரிசனை, அவளுக்குச் சற்று தெம்பேற்றியது. காலை நேர அவசரத்தில் எதையோ வாயிலிட்டதோடு சரி; பசி மிச்சமிருந்தது. ஆக, ஆவலுடன் சாப்பிட்டான்.

நான்கு வித சட்னி வகைகளுடன் மொறு மொறுவென்ற வடை; அமிர்தமாய் இனித்த பழரசம்... அவற்றைக் காலி செய்த நிமிடம் உணவகத்தின் கதவு திறந்து ஒரு நெடிய உருவம் நுழைந்தது. இவளது மேஜையை நோக்கி வந்தது.

அந்த அரை இருட்டுச் சூழலில் முகம் தெளிவாய்த் தெரியாவிட்டாலும், எழுந்தாள்.

''உக்காருங்க அஸ்வினி.''



''நீங்க... நீங்க...''

''அமரேசன் 115-ம் அறையில் தங்கி இருப்பவன் - பொதுவாய் அமர்.''

''திரவியம் அண்ணாச்சி...''

''அவர் எங்கப்பாவின் சிநேகிதர்... எனக்கும்தான்'' அவனது புருவங்கள் மேலேறின.

அந்த நக்கல் புரிந்து தன்னைத் திருத்திக் கொண்டாள்.

''எங்க வீட்டின் சொந்தக்காரர்?''

''நானேதான்...''

உலர்ந்த உதடுகளை நனைத்துக்கொண்டு தொடங்கினாள்.

''மன்னிக்கணும்... வாடகைப் பணம் சற்று தாமதமாயிடுச்சு... இப்ப சேர்த்துக்கொண்டு வந்திருக்கேன்...'' பணமிருந்த உறையை நீட்டினாள்.

வாங்கிக் கொண்டவன், ''வாடகை மட்டுமல்ல, இப்ப வீடும் தேவைப்படுது அஸ்வினி...''

''அண்ணாச்சி சொன்னாங்க... கொஞ்ச நாளைக்கு இங்கேயே அனுமதித்தால்... அல்லது வேறு ஒரு வீட்டைத் தந்து உதவினால்...''

''சரி - பிறகு என்ன செய்வதாய் உத்தேசம்...?''

''பிறகுன்னா?''

''எதிர்காலத்தில்...''

''வேறு வீடு தேடி... மாறி...''



''வீட்டுப் பிரச்சினையைப் பற்றிக் கேட்கலை - உங்க வாழ்க்கையைப் பற்றிக் கேட்கிறேன்'' என்றான் அவன், அமர்த்தலாய்!

## 5

ஆவி பறந்த கறுப்புக் காபியை உறிஞ்சியவனை எரிச்சலுடன் பார்த்தாள்.

வாடகை பாக்கியைத் தீர்த்தாகிவிட்டது.

அவனது வீடு ஒன்றில் தொடர்ந்து தங்கலாமா என்பது மட்டுமே இப்போதைய பிரச்சினை. அதை விட்டுவிட்டு வேறு எதிலோ அக்கறைப்படுவானேன்?

''என்ன கோபமா? இல்லை, வெறும் யோசனையா?''

''ம்... ரெண்டும்தான்'' -உண்மையைச் சொன்னாள்.

''உன் 21 வயதிற்கு நீ தைரியமான பெண்தான்'' மகிழ்ச்சியாய்ச் சொன்னான்.

''பாராட்டுக்கு நன்றி... உபசரிப்புக்கும் நன்றி... உங்க நோக்கம் என்னன்னு சொல்லிட்டா, கிளம்பிடுவேன்.''

''அதற்காகத்தான் உன் எதிர்காலத் திட்டம் பற்றிக் கேட்கிறேன்.''

''அதற்கும் வீட்டு வாடகைக்கும் என்ன சம்பந்தம்?''

''சம்பந்தம் இருக்குது. திரவியம் மாமா ஓரளவு உன் குடும்பச் சூழலை விளக்கினார். பெற்றவர்கள் இப்ப இல்லை... தம்பிக்குப் பொறியியல் படிக்க ஆசை?''



இவள் மௌனமாய் இருந்தாள்.

''நல்ல ஆசைகளுக்குத் தடை போடக்கூடாது.''

''தடையில்லை... மேலே படிப்பதற்கான தகுதி... அதாவது பணத் தகுதி எங்களிடம் இல்லை'' - வறட்டுக் குரலில் விளக்கினாள்.

''அது... அதான் பணம் என்னிடம் உண்டு... உன் தம்பியைப் படிக்க வைக்க சம்மதிக்கிறேன்.''

இது அவள் சற்றும் எதிர்பாராத பதில்... வாய்ப்பு... குழம்பியவள், சில விநாடிகளுக்குப் பிறகே கேட்டாள் - ''நீங்க... ஏன்... எதற்காய்?''

''எனக்கு இங்கே விவசாய நிலங்கள் உண்டு. நல்ல விளைச்சலும்கூட, விளையும் பழம், காய்கறிகளை இப்ப கட்டப் போகும் விற்பனைக் கூடத்திலேயே விற்றாலும் போதும். இந்த ஓட்டலுக்கான அத்தனையும் நம்ம தோட்டத்திலிருந்துதான் வருது.''

''ம்...'' சன்னமாய் முணங்கினாள். அவன் 'நம்ம' என்றது வேறு அவளைச் சங்கடப்படுத்தியது.

''பண்ணையின் நடுவே வீடும் கட்டிவிட்டேன். இப்பதான் வேலை முடிஞ்சது. சீக்கிரமே குடியேறிடணும்.''

''சரி.''

''அங்கே ஆற, ஏழு பேரேனும் நிரந்தரமாய் வேலை பார்க்கணும். மற்றவர்கள் தினக்கூலிக்கு வாரக் கூலிக்குன்னு வந்து போறவங்க. தங்களுக்கான சாப்பாட்டை அவங்களே எடுத்துட்டு வந்திடுவாங்க.''

இந்தத் தகவல்கள் தனக்கு எதற்கு என்று புரியாமல், அவனை நேரேயும் பார்க்கத் துணிவில்லாமல் காலி தம்ளரையே நோக்கியிருந்தாள்.

''பண்ணை வீடுன்னா சதா அங்கு பொறுப்பான ஒரு ஆள் இருக்கணும். நிர்வாகத்திலிருந்து தங்கியுள்ளவர்களுக்கு சமைச்சுப் போடுறது வரை... அன்று எத்தனை பேர் வேலைக்கு வந்தாங்க, எத்தனை மூடை எலுமிச்சை, கொய்யா பறிக்கப்பட்டது. மூடையின் எடை, என்ன, தரம் எப்படின்னு கவனிச்சு...''

''ம்...''

''அந்தப் பொறுப்பான பதவிக்கு சரியான ஆளில்லை'' அவன் நிறுத்த, அவனைப் பார்த்தாள்.

''அந்த வேலைக்கு நீ வர முடியுமான்னு...''

அவளுக்குக் கிறுகிறுத்தது. முதலில் தன் தம்பியைப் படிக்க வைப்பதாய்ச் சொல்லி, இப்போது தனக்குப் புது வேலை தரப்படுகிறது... இதெல்லாம் என்ன?

அவளது குழப்பம் புரிந்து புன்னகைத்தான்.

இடது பக்கமாய் அவன் உதடுகள் சரிந்தது அலாதி கவர்ச்சியாய்ப்பட, தன் மனதைத் தட்டி அடக்கினாள்.

வரவேற்பில் நின்ற பெண்ணின் சிடுசிடுப்பு இதனால் தானோ? இத்தகு கவர்ச்சியான சிரிப்பைப் பகிர இன்னும் ஒருத்தி வந்து விட்டாளே என்ற காய்ச்சல்!

''ஆக, நீயும் இனி பண்ணை வீட்டிலேயே தங்கிவிடலாம். வசதியான வீடு, வேலைக்கென்று வேறு இடத்துக்கு அலைய



வேண்டாம். பசுமையான சூழல்...'' அவன் இயல்பாய் ஒருமைக்குத் தாவி இருந்ததைக் கவனித்தாள்.

ஆனால், அடுக்கடுக்காய் வந்த அதிர்ச்சியில் ஆட்சேபிக்கத் தோன்றவில்லை.

''அசோக்கை... படிக்க... வைப்பதாய்...''

''ஆமா... அதுதான் உன் சம்பளம்... அல்லது உன்னைச் சம்மதிக்க செய்வதற்கான தூண்டில்னுகூட வையேன்'' - அவன் கண்களில் குறும்பு வழிந்தது.

''ஏன்... வேறு யாரும்... இந்த வேலைக்கு...?''

''இத்தனை பொறுப்பான - நம்பிக்கையான பதவிக்கு ஆள் கிடைப்பது அரிது. அப்படிக் கிடைத்தாலும் அவங்க என் மனைவியா இருக்கணுமே... அங்கேதானே இடிக்கும்... நீ இரண்டு பதவிக்கும் கச்சிதமாய்ப் பொருந்துறே அஸ்வினி.''

இதுவரை தயக்கமாய் அவனைப் பார்த்த விழிகள், இப்போது ஆணியடித்தாற்போல அவன் முகத்தில் பதிந்தன. அவனிடம் அசராத அதே கோணல் புன்னகை!

''என்ன சொல்றீங்க?''

''என் மனைவியாக வருபவள், இந்த பொறுப்புகளையும் இயல்பாகவே ஏற்றுக் கொள்ளணும் இல்லையா? அதேபோல அவளின் கடமைகளையும் நான் நிறைவேற்றுவதுதானே முறை? அசோக் இன்ஜினீயரிங் படித்த பிறகு மேற்கொண்டு எம்.பி.ஏ. அல்லது எம்.இ. படிக்கட்டும். நல்ல அறிவுள்ள பையன்னு பாராட்டினார், திரவியம் மாமா.''

''இதெல்லாம் அண்ணாச்சிக்குத் தெரியுமா?''



''முழுக்கத் தெரியாது. ஆனால், மனிதர் ஓரளவு யூகிச்சிருக்கக் கூடும். ஏன்னா... உன்னைப் பற்றிய தகவல்களைப் பெரும்பாலும் அவரிடம் இருந்துதான் கறந்தேன். சோழியன் குடுமி சும்மா ஆடாதுங்கிறது அவருக்குத் தெரியாதா?''

மீண்டும் அதே புன்னகை.

''நீங்க கல்யாணம் பற்றிப் பேசுறீங்களா? வேலை தர்றீங்களா? அல்லது உதவி செய்றேங்கிறீங்களான்னு எனக்குப் புரியலை...''

''மூன்றுமேதான். மூணும் சேர்ந்த கலவை. கனிவான கலவைன்னு சொல்லலாம்...''

''ஆனா, முறையாய் இல்லையே...''

''என் வீட்டிலேயும் கல்யாணம் பேசப் பெற்றவங்களோ இல்லை... ரெண்டு அக்காமாரும் கல்யாணமாகிப் போயாச்சு... என் கல்யாணத்திற்குக் கூப்பிட்டால் வருவாங்களே தவிர கல்யாணத்தைப்பேசி, நடத்த வரமாட்டாங்க.''

இவளுக்குள் எங்கோ இளகியது. தன்னைப் போலத்தானே இவனும் என்ற இரக்கக் கசிவு. ஆனால், அவனது பேச்சு இயல்பு, இயற்கையாய் இல்லையே!

''உன் தம்பியைப் படிக்க வைக்கிறேன். நீ என் பண்ணையைப் பொறுப்பாய்க் கவனித்துக் கொள்கிறாயா? அப்படியே என் மனைவியாகவும் மாறிவிட்டால் நலம்'' - இந்த ரீதியில் எல்லாம் குழப்பமாக அல்லவா இருக்கிறது!

ஆனாலும் தங்கள் இருவரது பிரச்சினைகளுக்கும் இதுதான் நல்ல தீர்வோ? புருவம் முடிச்சேற யோசித்தாள்.



''ஒண்ணும் அவசரமில்லை. வீட்டுக்குப் போய் உன் தம்பியுடன் பேசிய பிறகே முடிவெடு... நமக்குச் சாதகமான முடிவாய் இருந்தால் பிரச்சினையே இல்லை. வர்ற வாரமே என் பண்ணை வீட்டில் குடியேறிவிடலாம்...''

''ஆனா, இந்த மாசம் முழுதுமாவது நான் வேலைக்குப் போகணுமே...''

அவள் முடிக்கும் முன்னரே அவன் முகம் மலர்ந்தது. அவன் உதடுகள் சிரிப்பால் விரியவும்தான் அவளுக்கு உறைத்தது. அவள் இப்படிச் சொன்னதே சம்மதம் போலத்தான் என்று! முகம் சிவக்கக் குனிந்தாள்.

''பரவாயில்லை அஸ்வினி. எடுத்த வேலையை முழுக்கச் செய்யிற பொறுப்பான பெண் நீங்கிறது புரியுது. நீ உன் வேலையை முடிச்சிட்டே வா. ஆனால், முதல் வாரத்தில் நம் கல்யாணம் நடந்து, புது வீட்டில் குடியேறிடணும். அங்கேயும் வேலை அதிகம்... நீயில்லாமல் சமாளிக்கிறது சிரமம். நம்மையும் சேர்த்து 10 பேருக்கு நீ மூணு வேளையும் சமைக்கணும். தோட்ட மேற்பார்வை, கணக்குப் பார்க்கிறதுன்னு...''

**வீ**டு திரும்பியவள், தவியாய்த் தவித்தாள்.

இது உண்மையா இல்லையா என்பதன் ஒரு கனவுக் கிறக்கம்.

தனக்குக் கல்யாணமா என்ற இன்பச் சலனம்.

தம்பியின் கனவுகள் பலிக்கப் போகிறதா என்ற குதூகலம்.

ஆனால், இத்தனை கறாராய் திருமணத்தை வியாபாரம் போல பேசுகிறானே என்ற சஞ்சலம் மறுபுறம் வந்து அல்லாடினாள்.

பெரியவர்களின் ஆலோசனை தேவை என்பது புரிய மருத்துவரம்மாவையும், திரவியம் அண்ணாச்சியையும் தேடிப் போனாள்.

இருவரும் இவளைப் போல சற்று கலவரமாகிப் பின் யோசித்தார்கள்.

''இப்படியா சொன்னான் அமரேசன்? பயல் ஏதோ திட்டத்தோடுதான் இருக்கான்னு தெரிஞ்சாலும் இப்படி அந்தர்பல்டி அடிப்பான்னு நினைக்கலியே நான்'' அங்கலாய்த்தார், அண்ணாச்சி!

மருத்துவரம்மா அத்தனையும் பொறுமையாய் கேட்டு விட்டு, ''என் வீட்டுக்காரரிடம் சொல்லி அமரைப் பற்றி விசாரிக்கச் சொல்லவா? விநோதமான பேச்சு போலிருந்தாலும் வலிய வரும் வரனை நாம் தட்டிக் கழிக்கவும் கூடாது... விசாரித்துப் பார்ப்போம்.''

''தம்பி அசோக்கைப் படிக்க வைக்கிறேன் என்கிறார்.''

''ஏன், உன் மேல் அத்தனை விருப்பமா?''

அஸ்வினி, துளி வெட்கமும் மீதி வேதனையுமாய்த் தலைகுனிந்தாள்.

''அப்படி எல்லாம் ஏதும் அவர் சொல்லலைம்மா... அதாவது... என்னை விரும்புறதாய்ச் சொல்லலை...''

''பின்னே? லட்சம் வரை உன் தம்பிக்காக செலவழிக்க ஏன் முன்வருகிறாரம்?''

''அதான் தெரியலை. பொறுப்பான, உண்மையான நபர் தேவை. அது தன் மனைவியாகவும் இருந்துவிட்டால் வசதிங் கிறது போல பேசினார்...'' சொன்னவளின் தொண்டை கமறியது.



மருத்துவர், இளையவளின் தோளை ஆதரவாய்த் தட்டினார். ''ரொம்ப யதார்த்தமான ஆள் போல, பல காதலர்கள் தம்பதிகளாக முடியாமல் போவது பணத்தால்தான். வரதட்சணை சுவர், தடை எழுப்பிடும். ஆசை வார்த்தைகளைப் பேசிவிட்டு, காசுன்னு வரும்போது பதுங்குகிற ஆண்களிடையே இவர் அபூர்வம். நேசம், காதல்னு பேசாமல் உன் கடமைகளை நிறைவேற்ற உதவுகிறேங்கிறார்...''

''வியாபாரத்தனமாய் பேசினாரும்மா. நீ எனக்காய் உழைத்தால் உனக்கு வீடு, உணவு எல்லாம் பிரச்சினையில்லை. உன் தம்பியும் படிக்கலாம்னு...''

''வியாபார ஒப்பந்தம்? அமரேசனுக்கு நிச்சயம் சிறுவயசிலேயே அம்மா தவறியிருக்கணும்.''

''இருக்கலாம். தற்சமயம் பெற்றவங்க இல்லை.''

''உனக்கு அவரைப் பிடிச்சிருக்கா அஸ்வினி?''

கேள்விக்கு அவளின் முகச் சிவப்பே பதிலானது.

''சரி விடு. கடவுளை வேண்டிட்டு காரியத்தில் இறங்குவோம்'' என்றார், மருத்துவரம்மா.

## 6

**க**ழுத்தை நிறைத்த லில்லி மலர் மாலையின் மணம். மூக்கைத் துளைத்தது. ஏதோ கனவுலகில் இருப்பது போன்று அச்சுகமான மலர்ச் சுமையுடன் குனிந்து திருமணப் பதிவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டாள்.



''இனி கைகோர்த்தபடி போகலாம்'' பாதிரியார் புன்னகையுடன் உத்தரவிட்டார்.

**'மங்களம் செழிக்க கிருபை அருளும்**
**மங்கள நாதனே**
**மங்களம் நித்திய மங்களமே**
**மங்கள துத்திய நாதனும் நீர்...'**

இசைக் கருவிகளின் கம்பீர இசைக்கு ஏற்ப தேவாலயத்தில் கூடியிருந்தோர் பாட, அமரின் கைக்கு தன் கையைத் தந்து, விரல் கோர்த்தவளின் உள்ளே சொல்லொணா இன்பங்கள் பாய்ந்து பரவின.

தனது திருமணத்தைப் பற்றி அவள் கற்பனைகூடக் கண்டதில்லை.

அவள் சிந்தனையில் தம்பியின் படிப்பு, தங்களது பயமற்ற எதிர்காலம் - இவை மட்டுமே.

இப்போதோ 'அதைத் தருகிறேன்' என்ற வாக்குடன் இவள் கழுத்தில் திருமாங்கல்யம் ஏறி இருக்கிறது!

தங்கம் இழைத்தது போலிருந்த பட்டுச்சேலை சரசரக்க நடந்தாள். உடலில் மின்னிய நகைகளை நேற்றுதான் அமர் தந்திருந்தான்.

பிச்சிப்பூ அரும்புகளை அடுக்கியது போன்ற நெக்லஸ், தோடுகள், வழுவழுவென்று பட்டை தீட்டப்பட்ட ஆறு தங்க வளையல்கள், பொடி கற்கள் பதித்து மின்னிய இரு மோதிரங்கள்.

**ந**கைகளைக் கொண்டு வந்து தந்த திரவியம் அண்ணாச்சியைக் கேள்வியோடு பார்த்தாள்.



''கல்யாணப் பொண்ணு பாசிமணியோடு இருக்கலாமா? அதான் அமரேசன் தந்து அனுப்பினான். இந்தப் பைகளில் இருக்கிறது என் பரிசு... நாலு சேலைங்க. அதற்குத் தோதாய் இரவிக்கைத் துணிகளை கடைக்காரனே தந்தான்... இல்லைன்னா நான் என்னத்தைக் கண்டேன்?''

''வெட்கச் சிரிப்புடன் விளக்கியவரை வணங்கிப் பரிசை வாங்கிக் கொண்டாள்.

''நன்றி அண்ணாச்சி.''

''இனி மாமன்னே கூப்பிடும்மா. ஏன்னா உன் மாமனாரும் நானும் உடன் படிச்சவங்க. ஒரே ஊர். நாசரேத் பக்கம். ரெண்டு பேரும் போட்டி போட்டு கோவில்ல மணி அடிப்போம். பாட்டுக் குழுவிலே யாருடைய குரல் உரக்கக் கேட்குதுங்கிற ஆங்காரத்தோடு பாடியிருக்கோம். பள்ளியில் போட்டியே போடாமல்...''

''போட்டியே போடாமல்...''

'''பாஸ் ஆனாப் போறாதாடா?'ன்னு ஒருத்தருக்கு ஒருத்தர் ஆறுதல் சொல்லியபடி படிச்சிருக்கோம்.''

அவள் புன்னகைத்தாள்.

''நகைக்கு நிறைய செலவாகியிருக்குமே...''

''உன்னைக் கட்டுறவன் தன் பெண்டாட்டிக்கு நகை வாங்கித் தர்றது சுயநலம்மா. போட்டால் அழகு கூடும்... இவன் அந்தஸ்தும் கூடும்! தவிர இதுவும் சேமிப்புதானே. சிரம நேரத்துல 'சட்'டுன்னு கை கொடுக்கத் தங்கம் உதவும்தானே.''

''ஓ... நன்றி மாமா'' மீண்டும் கைகுவித்து வணங்கினாள்.

''நன்றி கிடக்கட்டும். நல்லா வாழுங்க'' என்றவரின் முகத்தில் ஓடியது கவலையின் ரேகையா? ''அமரேசன் கடுமையாய் - ஏன் வெறியோடு உழைச்சு உசந்த பையன்ம்மா... அதனால கொஞ்சம் சிக்கலான குணம்... நீதான் நயந்துபோகணும்...''

கலவரமான இவளது முகத்தைப் பார்த்தவர், ''நல்லவன் தாம்மா. ஆனா இப்படி தடாலடியாய் முடிவெடுப்பான்... கறாராய்ப் பேசுவான்...! பெத்தவங்க ஆலோசனை சொல்லி, கண்டிச்சு வளர்க்காத பிள்ளை. இதைக் கூட்டினால் விடை இதுதானே வரணும்கிற ரீதியில் வாழ்க்கையைக் கணக்குப் போல புரிஞ்சிட்டிருக்கான். ஆக நீதான்...''

அஸ்வினிக்குக் கல்யாண மயக்கமெல்லாம் இல்லை... உள்ளே கலக்கம்தான் குமிழிட்டது... ஆனால், தம்பியின் முக வெளிச்சம், இவளுக்கும் சேர்த்து தெம்பூட்டியது. வாழ்க்கைச் சவாலைச் சாதித்தே விடுவது என்ற தெம்பு!

''சரி... துணியை உடுத்தி இந்த நகைகளைப் போட்டுத் தயாராய் இரு. இப்ப அமரேசனின் அக்காமார் உன்னைப் பார்க்க வர்றாங்க...''

கிடைத்த தெம்பு சற்று நழுவ, அச்சமாய் அவரைப் பார்த்தாள்.

''இவனுக்கு 15 வயசுக்கு மூத்தவங்கம்மா... சிறு வயசிலேயே கட்டிக் கொடுத்ததால் இப்ப பெரிய பிள்ளைங்ககூட உண்டு.''

''வீட்டில பெரியவங்க யாரும் இல்லைன்னாரே...''

''அதான் சொன்னேனே... இவனுக்குக் கொஞ்சம் ஒதுங்கி நிற்கிற சுபாவம். தங்களைக் கேட்காமல் எல்லாம் முடிவு



பண்ணி முகூர்த்தத்திற்கு அழைச்சதில் அவங்களுக்கும் வருத்தம்தான். யாரும் கை கொடுக்காமல் தானாக முண்டி, முன்னுக்கு வந்தவனில்லையா? அந்த முரட்டுத்தனம் அவங்க ஏதும் காட்டிக்காம தம்பி கல்யாணத்துக்கு வந்திருக்காங்க... ஆங்... உன் பக்கத்திலேருந்து நூறு பேராவது கல்யாணத்துக்கு வருவாங்கல்ல?''

மென்று விழுங்கினாள். ''கூட வேலை பார்த்த வாத்தியாருங்க... சில சொந்தக்காரங்கன்னு நாற்பது பேர் வரலாம்.''

''ம்... உன் ஆட்களும் நிறைய வரணும்... இல்லைன்னா இந்தப் பயலுக்குத் தொக்காய் போயிடும்.''

அவர் தனக்காய்ப் பரிந்து பேசுவது ஆறுதலாய் இருந்தாலும் மனிதர் ஏன் இத்தனை அஞ்சுகிறார் என்ற சஞ்சலமும் கூடவே அறுத்தது. தன்னைப் பலி ஆடு போலப் பரிதாபமாய் வேறு பார்க்கிறாரோ?

''தயாராகும்மா... அரை மணி நேரத்திற்குள் வந்திடுவாங்க.''

சிறு குளியல் போட்டவள், சிவப்பில் சிறு கொடிகள் ஓடிய புதுச் சேலை ஒன்றைச் சுற்றிக் கொண்டாள். இந்த இடைப்பட்ட சில வாரங்கள் கருத்தாய்ச் சாப்பிட்ட மினுமினுப்பு உடலில் தெரிந்தது. தவிர கல்யாணக் களை என்பதும் இதுதானோ?

மேனியில் கிடந்த அற்ப நகைகளைக் கழற்றி, பவுடர் பூசியபின் புது நகைகளைப் போட்டவளின் விரல்களில் நடுக்கம்.

''யக்கா... பிரமாதம்!'' அதற்கு மேல் வார்த்தைகள் வராமல் ஒரு இன்பத் திகைப்புடன் நின்ற தம்பியைப் பார்த்து வெட்கத்துடன் சிரித்தாள்.





''இதெல்லாம் ஏதுக்கா?''

''அவர் கொடுத்துவிட்டிருக்கார்.''

''நினைச்சேன்... கல்யாணச் சேலை பளபளன்னு எடுத்தாலும் அதுக்குத் தோதாய் அக்காவுக்கு நகைங்க இல்லையேன்னு. அவர் எல்லாத்தையும் யோசிச்சி இருக்கிறார் இல்லை?''

''ம்... இப்ப அவருடைய அக்காமார் வர்றாங்களாம்.''

''குளிர்ச்சியா ஏதாவது வாங்கி வரவா... இல்லை காப்பி கொடுக்கலாமா?''

''அவங்க வரட்டும். கேட்டுக்குவோம்... தவிர பழம், பலகாரமெல்லாம் இருக்குது.''

இவள் நீட்டியதைக் கொறித்த அமரின் தமக்கைகள் அவனைப் போலவே புதிராகப்பட்டனர். பட்டும் படாமல் பேசிவிட்டு கொண்டு வந்திருந்த பரிசுகளைத் தந்துவிட்டுக் கிளம்பி விட்டார்கள்.

ஆளுக்கொரு பட்டுச்சேலை தந்தார்கள். பெரிய அக்கா, நவரத்தினப் பதக்கம் இணைத்த ஒரு நீண்ட சங்கிலியையும், இளையவள், ஒரு ஜோடி முத்து வளையல்களையும் போட்டு விட்டார்கள்.

கடைசியில் நம் தம்பிப் பயல் கல்யாணத்திற்கு இசைந்தானே என்ற மகிழ்வு, மணப்பெண்ணைப் பற்றிய ஆர்வம், தங்களது குடும்பத்தைப் பற்றிப் புதியவளுக்கு எடுத்துச் சொல்லும் பரிவு என ஏதுமின்றி ஏதோ கடமை போல அவர்கள் வந்து போனதும் அஸ்வினியைக் குழப்பியது. ஆனால், இனி பின்வாங்க முடியாது!



அக்காமார் வந்து போனார்களா என்று கேட்க, எட்டிப் பார்த்த அமரேசனின் போக்கும் நெருடல்தான்.

உடுத்தி, நகைகளை உடலில் சேர்க்கும்போதே அஸ்வினி ஆசைப்பட்டாள் - 'இப்போது அவர்... வந்து என்னைப் பார்த்தால்... அந்தப் பார்வை என்ன பேசும்... பாராட்டும்' என்று.

ஆனால், புது அலங்காரத்துடன் இருந்தவளைக் கண்டவன் முகத்தில் சலனமேயில்லை. தான் தேர்ந்தெடுத்த நகைகள் தன் வருங்கால மனைவிக்கு மிக அம்சமாய் பொருந்தியிருப்பதைக் கவனிக்கவும் மனமின்றிக் கிளம்பி விட்டான்.

ஆனால், இனி அவள் பின் வாங்க முடியாது!

இதோ... இப்போது ஆலயத்தில் தாலி கட்டி, பதிவுப் புத்தகத்தில் தம்பதிகளாய்க் கையெழுத்தும் போட்டாகி விட்டது. இனி... இனிமேல்...? நினைக்கையிலேயே அவளுக்குள் சிலிர்த்தது.

நேற்றே பெரும்பாலான அவளது பொருட்கள் அவனது பண்ணை வீட்டிற்குப் போயாகி விட்டன. சில நாட்களுக்கு முன்பு புதுமனையில் பால் காய்ச்சியதும் கூட அவள்தான். மிக அருமையான வீடு. அதில் கணவனோடு வாழப்போகும் நாட்களும் ஆனந்தமாய் அருமையாய் அமைய வேண்டுமெனக் கண்களை மூடி வேண்டினாள்.

புதுமணத் தம்பதிகளின் வாழ்வில் ஆனந்தம் பெருகி அவர்களின் சந்ததியும் பெருகி, பூமியை நிரப்ப வேணும் என்ற ரீதியில் ஒரு ஜெபத்தை சொல்லிவிட்டு திரவியம் கிளம்ப, இவளுக்கு வியர்த்தது.

காய்ச்சிய பாலை, படுக்கை அறையில் வைத்திருந்தாள். படுக்கையில் மலர்களைத் தூவவில்லை எனினும் அங்கு தொங்கிய கல்யாண மாலைகளின் கமகமப்பு தொடர்ந்தது.

அக்காவின் முன்பு இப்படியொரு சந்தர்ப்பத்தில் வரக் கூச்சப்பட்டோ அல்லது கல்யாண வேலையின் அலுப்பினாலோ தம்பியைக் கண்ணிலேயே காணவில்லை.

சுற்றி நிற்கும் தோழிகளின் சீண்டல், முதிய சுமங்கலிகளின் ஆலோசனைகள் என்று ஏதுமில்லை. ஆனால், வெட்கமும் தயக்கமும் நிறைய இருந்தன!

பரிச்சயப்படத் தொடங்கிய நாட்களில்கூட சிரிப்பும் கரிசனையுமாக இருந்த அமரேசனுக்கு இப்போது என்ன?

முகத்தில் இறுக்கம் - கண்களில் கவனமாய் போடப்பட்ட ஒரு திரை... பெரியவர்கள் இன்றித் தானே தன் கல்யாணத்தை நடத்திக் கொண்டதில் ஏற்பட்ட சோர்வா... சலிப்பா?

அவளுக்குள் இரக்கம் சுரந்தது.

பெற்றோரின் அரவணைப்பின்றி வளர்ந்தவன். அவன் தாயின் சில நகைகளே இந்தப் பண்ணைக்கு முதலீடு. மற்றபடி அவன் வெற்றிக்கு அயராத உழைப்புதான் காரணம் என்று அறிந்திருந்தாள். தன் கணவனின் சுயசம்பாத்தியத்தில் உருவான இவ்வீட்டில் மணமகளாகவே குடி வருவது அரிய வாய்ப்புதான்.

தனக்குத்தானே தேற்றி, தேறியவள் படுக்கை அறையை நோக்கி நடந்தாள். மாடியில் விஸ்தாரமான அறை. அது. இணைக்கப்பட்ட குளியலறை. பால்கனி என்று வசதியாக இருந்தது. விசாலமான இரட்டைக் கட்டில்கள் அங்கு புது



மெருகுடன் கிடக்க, அதில் கவர்ச்சியான விரிப்பை விரித்து, அருகே பால் பழத்தையும் வைத்தாள்.

அந்த வேலையில் ஈடுபட்டவளின் நெஞ்சுக்குள் ஒரு குறுகுறுப்பு நண்டாய் ஊர்ந்தது. இப்போது அறைவாசலில் நிற்கும்போதே நண்டின் குடைச்சல் தாளவில்லை!

முகத்தில் ஒரு விநோத வெப்பமேற, அதில் உற்பத்தியான வியர்வை வழிந்து கழுத்தில் கசகசத்தது.

எப்படித்தான் இந்த மாதிரி நேரத்தில் புதுப்பெண் கையில் பால் செம்புடன் அறைக்குள் போகிறாளோ? வியர்வையில் வழுவழுத்து செம்பு நழுவி விடாதா?

இந்நினைப்பு புன்னகையைத் தர, அறையில் நுழைந்தவளின் பார்வை விக்கி விறைத்தது!

## 7

இந்த அதிர்ச்சி, வாழ்நாள் முழுசுக்கும் மறக்காது! மாலை, அவள் புது விரிப்பிட்டபோது இணைந்திருந்த கட்டில்கள் இப்போது பிரிந்து கிடந்தன. படுக்கை விரிப்போ ஒரு நாற்காலியில் சுருண்டிருந்தது.

விதிர்த்த அவளது பார்வை, இப்படியொரு காரியத்தைச் செய்தவனைத் தேடின. பால்கனியில் நின்றவனின் முதுகு மட்டுமே தெரிந்தது. கதவு மூடும் அரவம் கேட்டுத் திரும்பியவன், இவளை நோக்கி வந்தான்.



குற்ற உணர்வில்லாத முகம்... இயல்பான நடை!

''அடடே... அசராமல் பொலிவோடு இருக்கியே?''

இவள் நா எழாமல் நின்றாள்.

''நல்லது. உனக்குள் நிறைய சக்தி இருக்குது. ஏன்... பெண்ணே சக்திதானே. ஆனா, பல பெண்கள் அதை உணராமல் ஆண்களின் நிழலிலேயே ஒதுங்கி மங்கிடுறாங்க.''

புது கணவனின் தத்துவம் போலிருந்த பேச்சை ஒரு வித மருட்சியுடன் கேட்டாள்.

''எனக்கே அசதியாய்தான் இருக்குது அஸ்வினி. காலையில் மணக்கோலத்தில் தயாராகி, நேரத்திற்குக் கோவிலுக்குப் போய், அங்கே தப்பு தவறில்லாமல் சம்பிரதாயங்களை முடித்து வந்திருந்தவர்களை வரவேற்று, அவங்க வாழ்த்துகளை - பரிசுகளை ஏற்று, எல்லாரும் விருந்தைத் திருப்தியாய் சாப்பிட்டார்களான்னு கவனித்து, வழியனுப்பி, நாமும் பேருக்குக் கொறிச்சு...''

''என்னாச்சு உங்களுக்கு?'' என்றாள், தாளமுடியாமல்.

''இத்தனையும் முடிச்சும் குளிச்சு பூவாட்டம் வந்துட்டியே... அதுக்குப் யாராட்டுதான்.''

அவன் கண்களில் பழைய குறும்பு குளிச்சு புதுப் பூவாட்டம் வந்துட்டியே... அதுக்குப் பாராட்டுதான்.''

அவன் கண்களில் பழைய குறும்பு தெரிய, இவளுக்குச் சற்று ஆசுவாசமானது. கட்டிலை நோக்கி நடந்தவள், ஆழ மூச்செடுத்துத் துணிவைத் திரட்டி, கேட்டே விட்டாள்.

''ஏன்... ஏன் கட்டிலைப் பிரிச்சுப் போட்டிருக்கு?''

''நிம்மதியாய் நாம தூங்கத்தான்.''



இதற்குமேல் ஒரு புதுப்பெண் என்ன சொல்வது?

''பிரித்துப் போட்டால் ஒருவர் மேல் மற்றவர் கை, கால் படுமேங்கிற கூச்சம் இல்லாமல் நிம்மதியாய் தூங்கலாமே...''

''இதென்ன குறும்பா... இல்லை கொடுமையா?''

''நாளை நீ ஐந்து மணிக்கெல்லாம், ஏன் அதற்கு முன்பே கூட எழுந்திருக்கணும். ஏழெட்டு பேருக்குக் காலை உணவு தயாரிச்சுட்டு, மற்ற வேலைகளையும் கவனிக்கணும். வர்ற திங்கள் கிழமையிலேருந்து பள்ளிக்கும் தயாராகிப் போகணும் நீ.''

இதெல்லாம் ஏற்கனவே சொல்லி இருந்தவைதான். ஆனால், அதற்காகக் காலையில் தாலி கட்டிய மனைவியிடம் நாலு வார்த்தைகள், கன்னத்தில்... ஊகூம்... வகிட்டில் 'நம் நேசம். வாழ்நாள் முழுக்க வளரும், இறுகும்' என்று உறுதியளிப்பது போல ஒரு முத்தம், இதமாய் அணைப்பு - இவைகூட கூடாதா? இவற்றின் தெம்பில் அவள் மாடாய் உழைக்கத் தயார்.

''நாளையே நான் அசோக்கை பேராசிரியர் வைத்திய நாதனிடம் கூட்டிட்டுப் போறேன். அவனுக்கு எளிமையாய் தேர்வு வைக்கிறாராம். அசோக்குக்கு படிப்பில் ஒரு ஆண்டு இடைவெளி விழுந்திடுச்சில்லையா? அந்தத் தேர்வின் அடிப்படையில் அவனைக் கணிச்சு, பொறியியல் கல்லூரியின் நுழைவுத் தேர்வுக்கு அவனைத் தயார் பண்ணிடுவார். அசோக்கிடம் சொல்லி, படிக்கச் சொன்னேன்.''

தன் முகத்தில் காறி உமிழப்பட்டது போல குன்றினாள்! முத்தம், சரசப் பேச்சு, அணைப்பு ஏதும் இல்லையே என்று பொறுமியவள், முக்கியமானதை எப்படி மறந்தாள்?

இக்கல்யாணத்திற்கு தான் சம்மதித்தது இன்ப உரசல்களுக்காய் அல்லவே! தன் தம்பியின் இன்ப எதிர்காலத்திற்காக அல்லவா?

பிளாஸ்கிலிருந்து பாலை ஊற்றி குடிக்கத் தந்தாள்.

''நன்றி. நீயும் ஒரு தம்ளர் குடி அஸ்வினி, நீ இங்கே அதிகம் உழைக்க வேண்டியிருக்கும் உண்மை. ஆனா நீ, உன் ஆரோக்கியத்தையும் நல்லபடி கவனிச்சுக்கணும். இன்னும் இரண்டு வாரங்களுக்கு உனக்கு ரெட்டைக் குதிரை சவாரி போல ரெண்டு வேலை... இதில் மூன்றாவதாய் மனைவிங்கிற வேலையையும் தந்து உன்னைப் பிழிய விரும்பலை... வரட்டுமா?''

ஏதோ விளங்கியது போலவும் விளங்காதது போலவும் இருந்தது.

வானத்தின் மேகங்கள் ஒவ்வொரு நேரம், வெவ்வேறு கோணத்தில் கோலம் காட்டுவது போல தன் கணவனும்...

காலையில் இவளது தோள் மிருதுவாய் தட்டப்பட்டது. குளிரினாலோ அல்லது கணவனின் முதல் தொடுதலினாலோ இவளுக்குச் சிலிர்த்தது.

வாரிச் சுருட்டி எழுந்தாள். இனிதான் இட்லி மாவெல்லாம் அரைக்க வேண்டும். ஆக இன்றைக்கு எது தோது என்று யோசித்துக் கேசரி, மிளகு பொங்கலுக்குமாய் வறுத்தாள். பெரிய பிளாஸ்குகளில் காப்பி கலந்து ஊற்றினாள். சாப்பிட்ட தட்டு, தம்ளர்களை அவர்களே கழுவி கவிழ்த்து விடுவார்களாம்.

மேஜையில் தட்டுகளை வைத்து, நடுவே கனிந்த வாழைப் பழங்களை ஓர் மரத்தட்டில் பார்வையாக வைத்தாள். பீட்ரூட் காரட் சட்னி 'அற்புதம்' என்று பாராட்டப்பட்டது.



ஒன்பது மணிக்கெல்லாம் இவள் சமைத்த அத்தனையும் துளியும் மிஞ்சவில்லை!

''வரேன்க்கா'' என்று தம்பி விடைபெற்றபோது கண்ணீர் முட்டியது.

''எப்படிப் போறே... தனியாவா?'' கவலையாகக் கேட்டாள்.

''பேராசிரியரிடம் ஏற்கனவே சொல்லியாச்சாம். இதோ விலாசம்... பஸ்சில் போகணும்னு சொன்னாங்க... வரட்டா?''

மனம் மறுபடி சிணுங்கியது. முதல் நாள் கூட்டிப்போய் சொல்லிவிட்டு வரலாமே? ஆனால், புது வீட்டின் வேலைகள் பிடிபடும் அவஸ்தையான மும்முரத்தில் மற்றது மறந்து போனது. இடைஇடையே தம்பி தன் பரிட்சையை நல்லபடி எழுதணுமே என்ற வேண்டுதல் தவிர வேறு சிந்தனை இல்லை.

பாத்திர பண்டங்களைத் தனக்கு வாகாய் இருக்கும்படி அடுக்கினாள். பிடித் துணிகூட இல்லாததால் நைந்த தலையணை உறைகள் இரண்டைக் கிழித்துச் சமையலறையில் போட்டாள்.

மேலும் தேவைப்பட்டதைப் பட்டியலிட்டாள்.

இரண்டாம் நாள் வீடு ஒரு விதமாய் அவளுக்குப் பழகியது. பள்ளிக்கு ஓடும் வேலையும் சேர, தனக்கான மதிய உணவும் கட்டி எடுத்துக் கொண்டு கிளம்பினாள். அவளுடைய பழைய சைக்கிளும் சமர்த்தாய் புது வீடு வந்து சேர்ந்து விட்டாலும் அதற்கு இனி வேலையில்லை என்றே பட்டது.

சைக்கிள் பழுது நீங்கிவிட்டதா என்றே பார்க்க முன்பு பள்ளிக்கு வந்தவன் இப்போது அவளைக் காரில் இறக்கி விடுவதுதானே இயல்பு. ஆனால், இயல்புக்கு மாறாய் நடப்பதே அவனது இயல்பு போலும்.



''மதியச் சாப்பாட்டை எப்படியோ சமாளிச்சிடுவோம். உனக்குச் சாப்பாடு எடுத்துக்கிட்டியா? வந்ததும் இரவுக்குச் சமைச்சிடு... சரி கிளம்பு'' என்று கிளப்பி விட்டான்.

வேலையிலிருந்து அசந்து திரும்பியதும் இருவருக்குச் சமைப்பதே சில நாட்களில் அவளுக்குத் திணறும்! இனி தினம் பத்து பேருக்கான பெரிய சமையல்! வேண்டிய உபகரணங்கள் இருந்தாலும்...

'இத்தனை செலவழித்தவன், கூடவே சமையல் ஒத்தாசைக்கு ஒரு மாதத்திற்கேனும் ஆள் வைத்தால் என்ன? ஒரு கரண்டி சீரகம்கூட அதிகம் செலவழித்துவிடாத நம்பிக்கையான சமையல்காரி வேணும்... தங்கம் அணிந்த இளமையான, படித்த சமையல்காரி!''

தம்பியின் பிரகாசமான முகம், அகக்கண்ணில் வந்து இத்தகு சிந்தனையில் ஒரு குட்டு வைத்தது!

'நன்றி மறக்காதே மடப்பெண்ணே... இங்கு மணமகளாய் வந்த காரணத்தை அடிக்கடி மறந்து போகிறாயே? செல்வச் செழிப்பில் சௌகரியமாய் வாழ அல்ல; உன் சகோதரனின் நியாயமான ஆசை, லட்சியம் நிறைவேற! அதற்குக் கைம்மாறாய் எத்தனை உழைத்தாலும் தகுமே.'

சைக்கிளை மிதித்தவள், இப்படித்தான்... இதையேதான் நெட்டுரு போட்டபடி பள்ளி போய்ச் சேர்ந்தாள்!

இவள் சொச்ச சில நாட்களுக்குப் பள்ளி வருவாள் என்பது சக ஆசிரியைகளுக்குத் தெரிந்த விஷயம்தான். ஆக யாரும் இவள் வந்து இறங்கியதை அதிசயமாய்ப் பார்க்கவில்லை. ஆனாலும் செல்வந்தனுக்கு வாழ்க்கைப்பட்டவள், பழைய சைக்கிளில் வந்து இறங்கியதை விநோதமாய் நோக்கினார்கள்!



கல்யாணத்தின்போது சிறிது நேரம் இவளின் பெண் தோழியாய் நின்ற சுகுணா, ஆவலாய் இவளை நெருங்கினாலும் சிடுசிடுத்தாள். ''ஆனாலும் உனக்கு வறட்டு கௌரவம் அதிகந்தான் அஸ்வி...''

''ஏன்?''

''பெரிய இடத்தில் கல்யாணமானவளுக்கு அதுக்கு ஏற்றாற் போல நடந்துக்கத் தெரியணும்...''

''எது?'' குழறினாள்.

''இந்த செயின் புதிது... அருமையான நவரத்தின பதக்கம்'' தொட்டுப் பாராட்டினாள்.

''ம்... அவருடைய அக்கா பரிசாய் தந்தது.''

''வழக்கமாய் பருத்தி உடைதான் உடுத்துவே... இந்த உடையில் அட்டகாசமாய் இருக்கே. உன் இடுப்பு மேலும் குறுகித் தெரியுது... அசத்தலான வளைவுகள். சைக்கிள் ஓட்டுறதே நல்ல உடற்பயிற்சியாச்சே... அதான்...''

''ஆமா... அதான் தொடர்ந்து சைக்கிளிலேயே...''

''நினைச்சேன்!'' தலையை வன்மத்துடன் ஆட்டினாள், சுகுணா. ''உன்னவர் 'காரில் வா'ன்னு கெஞ்சியிருப்பார். நீ அதெல்லாம் வேணாம். இதுதான் என் கவர்ச்சிக்கே காரணம்'னு அலட்டலோடு சைக்கிளை உருட்டிட்டு வந்திருப்பே... ம்...''

அஸ்வினி அசட்டுச் சிரிப்புடன் சமாளித்தாள்.

''எப்பவும் போலவே வந்து போறேனே சுகுணா...''

''ஏன்... நாங்க பொறாமைப்படுவோம்னு நினைச்சியா?''

''ச்சே... என்ன பேச்சிது?''

''சிலரது பொல்லாத கண்ணும் படக்கூடும் அஸ்வினி... ஏன்னா உனக்குக் கிடைச்சது அருமையான வாழ்வில்லையா? இத்தனை பணம், பவுன், ஸ்கூட்டர், டி.வி., சட்டி, பெட்டி கொண்டு வான்னு பட்டியல் தரும் மாப்பிள்ளைகள் கிடைக்கவே பொண்ணுங்க அல்லாடுற நாளில் இத்தனை பவிசும் பாசமும் கொண்ட வீட்டுக்காரர் கிடைச்சது கடவுளின் அருளேதான்.''

''ம்... தம்பி மகிழ்ச்சியாய் இருக்கான், சுகுணா.''

''எல்லாரும் நல்லா இருங்க...''

சுகுணா கை தூக்கி ஆசீர்வதிப்பது போல் கூற, இவளது மனக்கண்ணில்... விரிந்த கட்டில்கள் தோன்றி ஆடின! 'முழு மகிழ்ச்சி, உனக்கு அத்தனை சுலபமாய் கிடைத்து விடாதுடி!' என்ற எண்ணம் சுழன்று வந்து உலுக்கியது!

## 8

'ஆடடீ ஆடடீ' சிட்டே ஆடடீ
கூட்டுக்குள்ளே கிடக்காம
வெளியே வந்து ஆடடீ
வெளியே வெந்தணல் வேகுமே அக்கக்கோ
வெந்தாலும் வேவட்டும்
துள்ளிப் புரண்டு ஆடடீ...''



முன்பிருந்த வீட்டின் அருகே ஒரு பெண், சதா இதையே பாட்டாய் பாடியபடி சுற்றி வருவாள்.

அம்மாகூட சிறிது நேரம் சலிப்பாய்ச் சிரிப்பாள். ''பாரேன்... இந்தக் கிறுக்கச்சியின் பாட்டை... வெளியே வெந்தாலும் ஆடணுமாம்! அதுக்கு உள்ளேயே பத்திரமாய் கிடக்கலாம்ல? வாழ்க்கையில ரொம்ப வெந்து வதைபட்டா இப்படி கிறுக்குப் பிடிச்சுதான் கத்தணும்.''

ஆனால், தற்போது அஸ்வினிக்கு தான் அந்தப் பாட்டைப் பாடவேணும் போலிருந்தது. தானும் தன் தம்பியும் என்ற சௌகரியக் கூட்டுக்குள்ளேயே கிடந்திருக்கலாம். இப்படி திருமண உறவெனும் அனலை வளர்த்து அதில் வெந்து... மத்தளத்திற்குப் போல இது இருபக்க அடி!

கணவன் வரும்வரை விரகம் ஒரு பெரிய அனலாய்த் தகிக்கவில்லை. ஆனால், அழகும் ஆண்மையுமான அவன் அருகே இருக்க - பழக, அவனது பாசமான... ஏன் மோகமான அணைப்பிற்காகவும் தேகம் ஏங்குகிறதே! இதை நினைக்க வெட்கமாக இருந்தாலும் அதுவே உண்மை.

இதுபோன்ற தாப மறுகல்கள் ஏதுமின்றி அமர் இயல்பாய் உறங்கி, குளித்து அவள் அறையில் இருப்பதையே பொருட்படுத்தாமல் நடமாடினான். திரண்ட தோள்களின் மயிர் சுருள்களையும் மார்பின் அகலத்தையும் கண்டும் காணாதது போல இவள் பம்மினாள்!

தொழிலாளர்களிடம் பரிவான அணுகுமுறை, அயராத உழைப்பு, நுணுக்கமான திட்டமிடல் என்று பார்க்கப் பார்க்க அவன் மீதுள்ள ஈர்ப்பு அதிகப்பட்டது. ஈர்ப்புக்கயிறு வலிமையாய் ஆக, ஆக அவனிடமிருந்து விலகி நிற்பது தழுவத் துடிக்கும் மனதை அடக்குவது எல்லாம் சிரமமாயின.



இது போதாது போல மத்தளத்தின் மறுபக்க அடியாய் சக ஆசிரியைகளின் கேலி, கிண்டல்! ''ஏய், அஸ்வினி புதுப் பொண்ணு இப்படியா வாடி வதங்கித் தெரியுறது? பளபளக்க வேணாம்?'' ருக்மணி டீச்சர் தொடங்கி வைக்க, அதில் மற்றவர்கள் தொற்றி ஏறுவார்கள்!

''பளபளக்கிறதெல்லாம் வேலைக்குப் போகாமல் வீட்டோட இருக்கிற புதுப்பொண்ணுங்கதான். பாவம், அஸ்வி! ஒரு வாரம்கூட விடுப்பு போடலியே... நாள் முழுக்க இங்கே இருந்துட்டுப் போனா, வீட்டில் நிம்மதியாய் தூங்கக்கூட முடியாதே...''

''அதெல்லாம் இல்ல...'' இவள் வாய்க்குள்ளே முனகுவாள்.

''அதுசரி... இந்த வயசில் உங்களால முடியாததா? அனுபவியுங்க.''

இதுக்கு சீண்டல்களின் நடுவே குன்றிக் குறுகுவாள். அதை வெட்கம் என நினைத்து மற்றவர்களுக்குச் சிரிப்பு பிய்த்துக் கொள்ளும்! வீட்டு வேலைகளில்தான் தன் முதுகு ஒடிகிறது என்பது பற்றி அவள் மூச்சே விடவில்லை. ஆசிரியை பிரேமா வந்து அனுசரணையாய்ப் பேசினாள்.

'ஆனாலும் வாடித் தெரியுறேம்மா, அஸ்வினி. இரண்டு பக்கத்திலேயும் பெரியவங்க இல்லையே... நீதான் உடம்பைப் பேணிக்கணும். வசதியான இடத்தில் வாக்கப்பட்டும் பொறுப்பாய் இந்த வேலையை முடிச்சுட்டுப் போகணும்னு நினைக்கிற உனக்குத் தெரியாதா? நெய், பால் சாப்பிடு. கூடவே இளநீரும் குடி. உங்க தோட்டத்திலேயே விளையும். உடம்பு சூடுபிடிக்காமல் பார்த்துக்க... எல்லாத்துக்கும் ஈடு தரும் அளவிலே நாமதான் நம் உடம்பைப் பார்த்துக்கணும்...''



''ஆகட்டும்'' என்றதோடு நழுவினாள்.

கட்டியவன் கட்டிக் குலாவ வேண்டாம்; பள்ளிக்கு ஒரு முறையேனும் தன்னை விடவோ, கூட்டிப் போகவோ வந்திருக்கலாம் என்பதுதான் ஆதங்கம்.

படிப்பதற்குத் தோதாய், தம்பி, நகரின் மையத்திலேயே ஒரு விடுதியில் தங்கிவிட, வீடு தனிமையாய்ப்பட்டது.

தோட்ட வேலைக்கு இருந்தவர்கள் அனைவரும் ஆண்கள் வந்த சில பெண்களும் சாப்பாட்டை எடுத்து வந்து எங்கோ ஒரு மரத்தடியில் சாப்பிட்டுவிட்டுப் போனார்கள். காலை ஒரு சில வேலைக்காய் வருபவள் ரகுமாயி. அவள் வருவதற்குள், பார்ப்பதற்குள் அஸ்வினி அவசரமாய்க் கட்டில்களைச் சேர்த்து விடுவாள். தன் அந்தரங்கங்கள் பகிரங்கமாவதை, அவள் விரும்பவில்லை. ஆக, வழக்கமான புதுத் தம்பதிகளுடையது போல தங்களது நாட்களும் குதூகலமாய்க் கழிவதாய்க் காட்ட நினைத்தாள். அந்த ஆசை அவளை மேலும் சோர்வுறவேச் செய்தது.

கவனமாய் இருந்தும் சில இக்கட்டான சந்தர்ப்பங்கள் நேர்ந்து விடுகின்றன. இரு நாட்களுக்கு முன் நடந்த சம்பவத்தை நினைத்ததுமே முகம் வெப்பமாகிச் சிவந்தது.

வழக்கமாய் முன்தின இரவே அவள் தனக்கான சேலை, உள் ஆடைகளைக் கீழ் அறையின் குளியலறையில் வைத்து விடுவாள். குக்கர் வைத்த கையோடு அவசரமாய்க் குளித்து, சேலை சுற்றி மறுபடி சமையலறைக்கு ஓட அதுதான் வசதி. தவிர கணவனின் முன் உடை மாற்ற நேரும் அவதியும் இல்லையே...

அன்று தேங்காய் சட்னியைத் தாளித்தபின், சாம்பாருக்கு பருப்பை வேக விட்டவள், குளிக்க ஓடினாள். கீழ்ப்புற

அறையின் கதவு சரிவரப் பொருந்தாது. குளியலறையின் கதவில் பிரச்சினையில்லை என்பதால் அதை அவள் பெரிதுபடுத்தவில்லை. தவிர, கதவு திறந்திருப்பது குக்கரின் 'விசில்' சத்தத்தைத் தடுக்காது என்பதும் ஒரு காரணம்.

அவசரமாய்க் குளித்தபின் ஈரத்தோடு பாவாடையை மார்புக்குக் கட்டியபடி 'இது எத்தனையாவது விசில்?' என்ற சந்தேகத்துடன் அறைக் கதவருகே வந்தவள். உள்ளே நுழைந்தவனைக் கண்டு விதிர்த்தாள்! ஈர உடலில் ஒட்டியிருந்த மெல்லிய பாவாடை மட்டுமே மறைப்பாய் கொண்டு நின்றவளை சாவகாசமாய்ப் பார்த்தான்!

பசு வெண்ணெயில் துளிர்விடும். நீர்த்துளி போல அவளது இளந்தோள்கள், மார்பெங்கும் நீர் முத்துகள், நெற்றி பிடரியின் கலைந்த கூந்தல் இழைகளிலும் வைரத் துளிகளை ஒட்டியது போல அவை ஒளிவீசின. சந்தனக் கால்களில் வழிந்து கொலுசு பாதங்களில் சற்று தங்கி, பின் சொட்டின...

பருவத்தில் யாரும் பார்த்திராத தன் உடலின் பாகங்களை ஒரு ஆண் நிதானமாய்ப் பார்ப்பது சகிக்காமல் குனிந்து கொண்டாள்.

''அடடா... நீ உள்ளே இருப்பது தெரியாமல் வந்துட்டேன். கதவும் தாழிடலையா... காற்றுக்குத் திறந்தே இருந்தது...'' என்பது போன்ற மன்னிப்பு கோரல் ஏதுமின்றி வெகு உரிமையாய் உள்ளே வந்து நின்றவனை நிமிர்ந்து பார்க்க மனம் தவித்தது. குளிர் நீரின் தாக்கத்தை மீறி வேறு உணர்வில் தளிர் உடம்பு நடுங்கியது.

''சரியாய்த் துடைக்க வேணாமா? பாரு உடம்பு நடுங்குது'' என்று வெகு சாதாரணமாய்ச் சொல்லிவிட்டு வெளியேறினான்.



''அப்பாடா'' என்று அவள் நிம்மதியாய் ஓடிப்போய்க் கதவைத் தாளிட முனைய, கதவு மறுபடி திறந்தது.

''ஐயோ... என்ன?'' அவசரமாய் விசில் அடிச்சிடுச்சு... நெருப்பைக் குறைச்சிட்டேன். அடுப்பை அணைக்கட்டுமா?''

'அணைக்கட்டுமா?' என்பதை அவன் மிக மெல்ல - விநோத அழுத்தத்துடன் சொல்ல... இவளுக்கு மேலும் நடுங்கியது.

தரையைப் பார்த்தபடி ''ம்....'' என்றவள், கதவைத் தாளிட்டாள்.

கதைகளிலும் திரைப்படங்களிலும் வரும் மோகக் காட்சிகள், அவளின் மனதிற்குள் ஓடிக் குழப்பின. முன்பெல்லாம் அது போன்ற காட்சிகளைத் தவிர்ப்பாள். அவை தன்னைச் சலனப்படுத்தி விடுமோ என்ற அச்சம்தான் காரணம்.

ஆணின் வேட்கை, மோகம் பெரியது. சட்டென்று நெருப்பாய் பற்றி எரிந்து, பெண்ணைக் கட்டிக் கலந்தாலே அடங்கும் என்பது அவளின் கணிப்பு.

தவிர கேள்விப்பட்ட பல உண்மைச் சம்பவங்களின் மூலம் - ஆண்கள் சபலக்காரர்கள்; மனைவி இருந்தும் பிற பெண்ணை இச்சித்து அடையத் துடிப்பவர்கள்; 'அந்த' விஷயத்தில் போதுமென்ற பொன் மனசு இல்லாதவர்கள் என்றே புரிந்து கொண்டிருந்தாள்.

ஆக, கணவனின் நடவடிக்கைகளில் குழம்பினாள்.

ஒருவேளை இவனது ஆண்மையில் பழுதோ?

மோக - தாபங்கள் அற்ற வெற்றுப் பாத்திரமோ?





இல்லை... நிச்சயம் இல்லை... அவளது உள்மனம் கூச்சலிட்டது.

அவனது ஒவ்வொரு அசைவிலுமிருந்த துடிப்பு; பார்வையில் வழிந்த குறும்பு, அவனில் உணர்ச்சி மிகுந்திருப்பதையே காட்டியது.

ஆனால், இம்மாதிரியான நடவடிக்கையும் அசாதாரணம் தான். கூட்டுக் குடும்பங்களில் புதுமணத் தம்பதிகள் தனிமைக்காக - அதில் விளையும் இனிமைக்காக ஏங்குவது பற்றிக் கேள்விப்பட்டதுண்டு.

இங்கு இத்தனை தனிமை வாய்த்தும் சீண்டல், சிணுங்க லில்லை. இரு இளம் உள்ளங்கள் நெருங்கி குலவவுமில்லை.

இதை எல்லாம் கண்டு உணர்ந்து அறிவுறுத்த இங்கு பெரியவர்கள் இல்லாதது பெருங்குறை. தானாய்ப் போயும் சொல்லக்கூடாத விவரமிது. தன் கணவனை விட்டுத் தருவது பற்றி யோசிக்கக் கூட முடியவில்லை, அவளால்.

இப்படி யோசனையில் மண்டை காய்ந்து பள்ளிக்குப் போனால், 'ஹா... வந்தாச்சு புதுப்பொண்ணு, கண் சிவந்து, இதழ் வெளுத்து, சிற்றிடைத் துவள... சுகமாய் சோர்ந்து...' என்று கவிபாடத் தொடங்குகிறார்கள்.

பொருளாதாரச் சிக்கல் எனும் கூண்டிலிருந்து வெளியேறி இப்போது தாம்பத்திய தணலில் கிடந்து துடிக்கிறாள்.

ஆனால், பள்ளி விடுமுறைக்காய் மூடி, இவளது பிரிவுபசார விழாவின்போது இவளுக்குள் வேதனை தந்தது.

அனுபவித்துச் செய்த வேலை இது! பதமும் பண்புமான சக ஆசிரியைகள், துடிப்பும் பாசமுமான மாணவிகள் என்ற இனிய சூழல், அது.



''இனி உனக்கு ரெட்டைக் குதிரை சவாரியின் அவதி இல்லை... அப்படித்தானே அஸ்வினி?''

''உங்களை எல்லாம் விட்டுப் பிரியறது கஷ்டமாய் இருக்கு கோகிலா...''

''அதெல்லாம் நாலு நாள் எங்க நினைப்பிருக்கும்... அப்புறம் எல்லாம் அவர்தான்... அதுவும் குட்டிப் பாப்பா பிறந்துட்டா... வேறென்ன வேணும்?''

சிநேகச் சீண்டலில் இவளுக்குக் கண் கலங்கியது.

''உஷ்... என்ன? குழந்தை பற்றிப் பேசினால் ஏன் குழந்தையாட்டம்...''

''இல்லை... நீங்க எல்லாரும் அடிக்கடி வீட்டுக்கு வரணும்.''

''வர்றோம். வளைகாப்பு இருக்கு... குட்டிக்கு பெயர் சூட்டணும்... பிறகு பிறந்த நாள்னு வரிசையாய் விசேஷங்கள் வருமே...''

அஸ்வினி பெருமூச்செறிந்தாள். 'இன்னும் தூளியே கட்டவில்லை. இவள் தாலேலோ பாடச் சொல்கிறாள்' என்ற அலுப்பு.

''நாங்க தந்த பரிசு உனக்குப் பிடிச்சிருக்கா அஸ்வி?''

அது 12 லிட்டர் குக்கர்! இவள் சதா பலருக்கு வடித்துக் கொட்ட வேண்டியவள் என்று தெரிந்தே தந்திருக்கிறார்களோ?

''உனக்கு எல்லோரும் தாராளமாய்ப் பணம் தந்தாங்க. விசேஷ நாட்களில் சோறோ பிரியாணியோ சமைக்க இதைப் பயன்படுத்துவே! அப்ப எங்களையும் நினைச்சுக்கு வேல்லியா?''

''நன்றி. இந்த அன்புக்கு ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன்...''

''சரி, இன்னைக்கு அவர் வருவாரில்லை? இல்லைன்னா இந்த கனமான பரிசை சைக்கிள்ல வைச்சு அழுத்த முடியாது உன்னால...''

''இங்கேயே இருக்கட்டும்... தம்பி வந்ததும் எடுத்துட்டு வரச் சொல்றேன்.''

''ஏன் அஸ்வி? அமரேசனுக்கு அவ்வளவு வேலையா?''

''இப்ப பழ சீசன். பழுக்கும்முன்னே பதமாய் பறித்து விற்றிடணும். எத்தனை கிலோ பழங்கள் எந்த ஊருக்குக் கடைக்குப் போகணும்கிறதில் சிறு தப்பும் நேர்ந்திடக்கூடாது... அழுகிப் போகிறது இல்லையா?''

''ம்... சுயமாய் முன்னுக்கு வந்தவரில்லையா? இந்த வயசில் பத்து இருபது பேருக்குச் சம்பளம் போடுற அளவுக்கு உயரணும்னால் அதுக்கு உழைப்பைத் தவிர வேற வழியே இல்லையே. நீயும் உழைக்க அஞ்சாதே அஸ்வினி. நீங்க வாழ்வில் மேலும் உயரணும்...''

மனசுக்குப் புனுகு பூசியது போன்ற வார்த்தைகள். நாளை காலை சமைத்த கையோடு குளித்துத் தயாராகி, சுடச்சுட உணவை விழுங்கிவிட்டு கால்கடுக்க சைக்கிள் மிதிக்க வேண்டாம் என்ற நிம்மதியோடு படுத்தாள். தோழி சொன்னது போல இனி இரட்டைக் குதிரை சவாரியின் அவஸ்தையில்லை.

ஆனால், ஒற்றைக் குதிரை சவாரியிலுமே குலுக்கல்கள், சரிவுகள், அதிர்ச்சிகள் அதிகம் வரும் என்பதை, தொடர்ந்து வந்த சில நாட்கள் அவளுக்குப் புரிய வைத்தன.



## 9

மண்ணில் புள்ளி வைத்து, பின் கோல மாவை இழைக்க, உள்ளே மகிழ்ச்சி பரவியது. விரலைப் போலவே குரலும் சன்னமாய் ராகமிழுத்தது.

தற்போது காலை சமைத்த பின்பு சற்று நிற்க முடிந்தது. அப்படிக் கிடைத்த நேரத்தில் வீட்டை மேலும் நேர்த்தியாக்கினாள்.

குளித்தவுடன் வீட்டு வாசலில் சிறு கோலம் ஒன்றைப் போடுவதும் வழக்கமாயிற்று.

அன்றைய கோலம் சின்னதுதான். ஆனால், கச்சிதமாய் அமைந்திருந்தது. அவர்களின் வீட்டில் இப்பழக்கம் இல்லையெனினும் சிநேகிதிகளிடமிருந்து பள்ளி நோட்டுகளில் வரைந்து வரைந்து பழகிய கலை இது.

கோடிழுத்த தன் விரல்களைப் பெருமையுடன் பார்த்து அவள் எழு. அந்தக் கார் மகா இரைச்சலுடன் வீட்டின் முன் வந்து நின்றது. அதன் முன் சக்கரம் கோலத்தின் கீழ்நுனியைச் சிதைத்துவிட, இவள் சிறு எரிச்சலோடு நோட்டமிட்டாள்.

இறங்கியவர்கள் இருவரும் பெண்கள். தாயும் மகளும் போன்ற தோற்றம். மூத்தவளுக்கு சதை பிதுங்கும் உடல்வாகு. அதை இளமையாய்க் காட்ட முனைந்த அலங்காரம். இளையவளுக்குத் தானும் பருத்து விடுவோமோ என்ற அச்சம்



போலும். அரை வயிற்றுக்கே சாப்பிட்டு, உடலை இளைப்பாக வைத்திருந்தாள்! கழுத்து எலும்புகள் துருத்தியிருந்தாலும், 'இதுதான் அழகு' எனும் மிடுக்கிலிருந்தது முகம்.

வாசலில் நின்ற அஸ்வினியை அலட்சியமாகப் பார்த்தவள், ''எங்கே... வீட்டுக்கு எஜமானியம்மா வந்தாச்சாமே? விருந்தாளி வந்திருக்காங்கன்னு சொல்லி வரச்சொல்'' என்றாள், மேலும் அலட்சியமாய்.

அஸ்வினி துணுக்குற்றாலும் உடனே சுதாரித்து விட்டாள். கொசுவத்தைத் தழைய விட்டுக் கைகூப்பினாள்.

''வாங்க... உங்களைக் கல்யாணத்தப்ப பார்க்கலையே... உள்ளே வாங்க'' என்றபடி முன்னே நடந்தாள்.

''அமரேசன் மனைவி எங்கே?''

''இதோ உங்க முன்னேதான் இருக்கேன். ஒரு நிமிஷம் அவரையும் வரச் சொல்லிடுறேன்.''

தன் பதற்றத்தைக் காண்பித்துக் கொள்ளாமல் நிதானமாய் பேச முடிந்ததில் அஸ்வினிக்கே ஆச்சரியம்தான்.

சற்றுக் கசங்கிய பருத்தி சேலைதான் என்றாலும், கழுத்தில் கனமான தாலிச்சரடு, பொன் வளையல்கள், கல் கம்மல் இவற்றோடு மாதான் வேலைக்காரி போல தோன்றுகிறோம்? சந்தேகத்துடன் திரும்பியவளுக்கு தாயும் மகளும் ஒருவரை ஒருவர் நமுட்டாய்ப் பார்த்து நகைப்பது தெரிந்தது.

ஆக, இவள்தான் அமரேசனின் மனைவி என்று தெரிந்தேதான் இப்படி ஒரு கள்ளக் கேள்வி கேட்டிருக்கிறாள்... கபட நாடகம்!



முதன் முறையாக வீட்டிற்கு வந்த விருந்தினர்கள் முகம் மாறினாலும் அதைக் கண்டுகொள்ளாமல், ''வந்திருப்பது யார்னு கேட்பார்... பேர் சொல்றீங்களா?'' வினவினாள்.

''அனுவும் அவ அம்மாவும் வந்திருக்காங்கன்னு சொல்லு.''

துடுக்கான ஒருமையில் வந்த பதில் மேலும் குத்தியது. ஆனால், இவ்வீட்டில் தன் நிலைமையும் அப்படித்தானே இருக்கிறது என்ற விரக்தியுடன் கணவனிடம் தகவல் சொல்லப் படியேறினாள்.

நீரின் சலசலப்பு அவன் குளிப்பதைச் சொல்லியது.

அங்கேயே நின்று, விவரத்தைச் சொல்லவா அல்லது திரும்பி விடலாமா என்று தயங்கியவளை இரண்டு நாட்கள் முன்பு வீட்டில் நடந்த நிகழ்வு ஒன்று நினைவிற்கு வந்து மேலும் சோர்வுறச் செய்தது.

எதிர்பார்த்ததைவிட பழங்களுக்கு நல்ல விலை கிடைக்க அங்கு வேலையிலிருந்த இளைஞர்களுக்கு ஏக குஷி.

அன்று சனிக்கிழமை மாலை.

பட்டாணி சுண்டல் - காப்பியை உள்ளிறக்கியபின் உற்சாகமாய்ப் பேசத் தொடங்கினார்கள். ''இன்னைக்கு எல்லாரும் வெளியே போறோம் அண்ணா...''

முதலில் பேசிய சரவணன்தான் உள்ளதிலேயே 'துறுதுறு' இளைஞன். 'அண்ணி' என்று விளித்து அஸ்வினியிடம் ஏதேனும் பேசாமல் நகரமாட்டான்.

''எங்கே?'' கேட்டவன், அமரேசன்.

''எங்கேன்னு சொன்னாத்தான் வருவீங்களா?'

"பின்னே? கண்ணைக் கட்டி கொள்ளைக் கூட்டத் தலைவன் போலக் கூட்டிப் போகப் போறியா? சொல்லுப்பா?"

"சினிமாவுக்குத்தான்."

"ஐயா.. ஆளைவிடு பாதி நேரம் சண்டை மீதி நேரம் நடனம்னு இருக்கு... அதைப்போய் நாம ஒரு மாதிரி மண்டூகங்கள் போல உட்கார்ந்து பார்க்க வேண்டியதிருக்குது. கதைன்னா நாமளா ஏதேனும் தேடி உருவாக்க வேண்டியதுதான்."

"புதுப்படம் பரவாயில்லைண்ணா! இளைஞர்களைப் பற்றி, ஆனால் விகல்பமில்லாத, இயல்பான கதையோட்டம்... நீங்க நிச்சயம் ரசிப்பீங்க... ஆனா பாட்டு, நடனம் உண்டு."

"ஏன் சரவணா, நீங்க, நான் எல்லாரும் பாடி, ஆடிட்டுதான் இருக்கோமா? நாம இளைஞர்கள்தானே?"

"அலுத்துக்கறீங்களேண்ணா... இந்த அலுப்பு, பார்க்கிறவங்களுக்கு வந்துடக் கூடாதுன்னு கொஞ்சம் 'ஜிலுஜிலு'ப்பாய் காட்டுறாங்க."

"சரி போயிட்டு வாங்க" அமர் எழுந்து கொண்டான்.

அஸ்வினிக்கு ஆசையாய் இருந்தது. பள்ளி வேலை குறைந்தபின் வீட்டு வேலை அத்தனை சிரமமில்லை. மதியம் சற்று தூங்கி எழுந்ததில் உடம்பும் உள்ளமும் புத்துணர்ச்சியில் பரபரத்தன. எங்கேயாவது வெளியே போய் வந்தால் தேவலை என்ற நமநமப்பு...

இரவிற்கான சோறு, ரசம், கோஸ் பொரியல் வேலையை முக்கால் மணி நேரத்தில் முடித்துவிடலாம். பிறகு அந்த ஊதா நிற ஜார்ஜெட்டைக் கட்டிக் கொண்டு... ஊருக்குள் போய் ஜாதி



மல்லி வாங்கிச் சூடிக்கொள்ள வேணும். அப்படியே அங்கே தம்பி அசோக்கைப் பார்க்கக் கூடுமா? அவனையும் திரைப்படத்திற்குக் கூட்டிப்போய் திரும்பலாம்.

அசோக் அவ்வப்போது இவளை வந்து எட்டிப் பார்ப்பதுண்டு என்றாலும், 'நிறைய படிக்க வேண்டியது இருக்குதுக்கா' என்று பறந்துவிடுவான்.

பாவம் இவன்! 'பசி, சுவை அறிந்து விடுதியில் உணவிடுகிறார்களா?' கேட்பாள்.

"அடிக்கடி அசைவம் போடுறாங்கக்கா. ஆனா உன் கைப்பக்குவம் வராது. நீ வெறுமனே ரசம், துவையல் வைச்சாலும் கூட வயிறு முட்டச் சாப்பிடலாம். ஆனா, சாப்பாடு பெரிய விஷயமில்லை. உடம்பை இயங்க வைக்கத்தானே உணவு?"

"அடடே... என்னடா தத்துவம் மாதிரி பேசறே?"

"அத்தான்தான் சொன்னார்."

"இவரையா அத்தான்கிறே?"

"பின்னே... அவர் எனக்கு அந்த முறைதானே?"

"ம்... ஆனா அப்படி யாரையும் உறவு வைச்சு நீ அழைக்க மாட்டியே..."

"அப்படி அழைச்சுக் கொண்டாட நமக்கு யார் இருந்தாங்கக்கா? உன் கல்யாணத்துக்குக் கூட நம்ம உறவுக்காரங்க அரை மனசாகத்தான் வந்தாங்க. 'பையன் யாரு? எந்தக் குடும்பம், படிப்பு என்ன?'ன்னு ஏதும் கேட்கலையே... வேடிக்கைப் பார்ப்பது போல வந்து,



சாப்பிட்டுட்டுப் போனாங்க. அவங்களை உறவுன்னு சொல்லிக்கிறதில் அர்த்தமில்லை."

உண்மை என்பதாய் தலையசைத்தாள்.

"அத்தான் சுருக்கமாய்த்தான் ஆலோசனை சொல்வாருக்கா. 'சிறந்த பயிற்சி வகுப்புல சேர்த்திருக்கேன். வசதியான விடுதியும் கூட. இனி முன்னுக்கு வர்றது உன்பாடு. இது போதலை; அது சரியில்லைன்னு முணுமுணுக்கிறது, போற வழிக்கு ஆகாது'ன்னார்."

"பொறுப்புணர்ந்துட்டே... நாளை நீ உசந்த நிலையில் இருப்பதைப் பார்த்துடணும்டா... எனக்கு அது போதும்..."

இப்படி நெகிழ்வும் மகிழ்வுமான நினைப்பில் இருந்தவள், தன்னை அமர் அழைப்பதை உணர்ந்து அவனை ஆர்வமாய்ப் பார்த்தாள்.

"பயலுகளுக்கு மாற்றம் வேண்டியிருக்கிறது போல... கிளம்புற ஜோரில் இருக்காங்க..."

"ம்..." முறுவலித்தாள்.

"அண்ணன் மறுக்க மாட்டாங்கன்னு டிக்கெட்டும் சொல்லி வச்சிட்டோம், அண்ணி."

"ம்..."

"ரெண்டு கிலோ கோழி வாங்கிக் குழம்பாய் வைச்சிடு அஸ்வினி. முட்டை அவிச்சிடு. பயலுக வீட்டுக்கு வந்து ஒரு பிடி பிடிக்கட்டும்..."

அத்தனை முகங்களும் மாறின, பேச்சுகள் ஓய்ந்து, மௌனம் ஓங்கி நின்றது.



"அண்ணியும் நம்ம கூட வர்றாங்கதானே?"

"இல்லை. அவளுக்கு இப்படி கும்பலாய் போறது பிடிக்காதுப்பா. தவிர சமையல் வேலை இருக்குதே. ஆங்... அப்பளமும் பொரிச்சிடு அஸ்வினி."

இவள், கல்லாகிவிட்டது போல உணர்ந்தாள். கண்களும்கூட இமைக்கவில்லை!

"எல்லாருமாய் சேர்ந்து போய் வரலாமேன்னுதான்..." இழுத்தார்கள்.

"இன்னும் பண்ணையில் வேலை இருக்குதுப்பா. அதுக்குள்ளே இப்படிப் போறது எனக்குச் சரின்னு படலைன்னாலும் உங்க ஆசையைக் கெடுக்கவும் மனசில்லை. என் மனசு மாறுறதுக்கு முன்னே கிளம்புறதுன்னா கிளம்புங்க... இல்லை உர மூட்டைகளைப் பிரிச்சு விகிதப்படி கலந்து வச்சிட்டு, ரசஞ் சோற்றை சாப்பிட்டுவிட்டுப் படுங்க..."

மற்றவர்களின் பரிதாப முழியைக் காணச் சகிக்காமல் இவள் எழுந்து சமையலறைக்குள் தஞ்சமானாள்.

சிறு விஷயம்தான். ஆனாலும் உள்ளே குமுறியது. 'உனக்குப் படம் பார்க்க விருப்பமா... போகலாமா?" என்ற அனுசரணையான கேள்விகூட இல்லையே!

"குழம்பு வை - அப்பளம் பொரி" என்ற உத்தரவுகள்தான்!

இப்படி வேலைக்காரியாக மட்டும் வைக்க, தன்னை இவன் மணந்தது ஏன்? வீட்டுக்காரியாகவும் இருப்பதால்தானே இத்தகு எதிர்பார்ப்புகள்... ஏமாற்றங்கள். படுக்கையறையில் தான் தன்னை ஒதுக்கியாயிற்று என்றால், பலர் பார்க்கும்போதாவது தன்னை நேசிப்பது போல் காட்டிக்

கொண்டால் என்ன? இந்தப் பேதை மனம் சற்று சமாதானமாகுமே!

சரவணனும் மற்றவர்களும் என்னதான் நினைக்க மாட்டார்கள்? ஆனால், அங்கிருந்து அதிர்வேட்டாய்ச் சிரிப்பொலி கிளம்ப, எல்லாருமே தன்னை ஒதுக்கிய உணர்வுடன் ஒடுங்கிப் போனாள்.

கசந்த நினைவுகளை மறுபடி அசைபோட்டவள், குளியலறையின் தாழ் விலகும் சத்தம் கேட்டு அவசரமாய் குரல் கொடுத்தாள்.

''உங்களைப் பார்க்க அனுங்கிறவங்களும், அவங்க அம்மாவும் வந்திருக்காங்க.''

''யாரு அனுகுண்டா?'' பிடரியைத் துவட்டியபடி தலை நீட்டினான்.

''இல்ல... ஒல்லியாய்தான் இருந்தாங்க.''

வாய்விட்டுச் சிரித்தான். கவர்ச்சியாய்க் கலைந்திருந்த ஈர கேசம்; அதில் ஒட்டி மின்னிய நீர்த்துளிகள்; அப்போதுதான் கழுவித் துடைத்ததால் பளபளத்த கன்னங்கள்; அவற்றோடு போட்டியிட்ட பளீர் பல்வரிசை அத்தனையையும் அவசரமாய்ப் பார்வையாலேயே விழுங்கினாள்.

''அனுவிற்குத் தன் அம்மாவைப் போல குண்டாகி விடுவோமோங்கிற பயம்... இன்னும் அத்தனை தூரம் உப்பலை. ஆனா அவ பேச்சு, அனுகுண்டு போட்டது போலத் தான் இருக்கும். தவிர, அத்தையும் வந்திருக்காங்களா?''

''அவங்க உங்க அத்தையா?''



''ம்... ஒண்ணுவிட்ட அத்தை. வர்றேன்னு சொல்லு. காப்பி கொடு.''

''போடுறேன். கேசரி கிளறட்டுமா?''

''கிளறினால் நம்ப பயல்க சப்புக் கொட்டிட்டுச் சாப்பிடுவானுங்க. ஆனா அனு தொடமாட்டா. தொட்டாலே குண்டாயிடுவோம்கிற பயம் அவளுக்கு கிண்டலாய்ச் சிரித்தான்.

அவன் உரிமையாய்க் கிண்டலடிக்க, உரியவள் வந்தாயிற்று. வந்தவள் தன்னை வேலைக்காரி போலிருக்கிறாய்'' என்று மறைமுகமாய் மட்டம் தட்டுகிறாள்.

''அஞ்சே நிமிஷத்தில் வந்துடுறேன்னு சொல்லு'' அவன் உற்சாகமாய்ச் சொல்ல, இவள் சோர்வாய்ப் படியிறங்கினாள்.

## 10

சமைத்த பதார்த்தங்களை உணவு மேஜையில் அடுக்கியவள், வியர்வை நீங்கக் குளித்துப் பளிச்சென ஒரு ஆரஞ்சு நிறச் சேலையைச் சுற்றிக் கொண்டாள் நேற்றே தொடுத்து, மண் பானை மூடி மேல் வைத்திருந்த பூச்சரத்தைச் சூடினாள். எண்ணெய் தேய்த்து அலசிய கூந்தல் 'பம்'மெனக் கச்சிதமாய் இருந்தது. கைகளில் முத்து வளையல்களும் ஏற, அலங்காரம் அவள் அழகைத் தூக்கி நிறுத்தியது.

இப்படி வந்து உணவு பரிமாறியவளை தாயும் மகளும் வாய் திறந்து பார்த்தார்கள். வழக்கம் போலவே, 'நீயும்



உட்காரு. சேர்ந்தே சாப்பிடலாம்'' என்று இன்றும் அமர் சொல்லாவிட்டாலும் இவளும் அவர்களுடன் அமர்ந்தாள்.

பரிமாறிக் கொண்டு சாப்பிடத் தொடங்கியவளை அமர், துளி ஆச்சரியத்துடன் ஏறிட, இவள் அழுத்தமாய்ப் புன்னகைத்தாள்.

''நீங்க சொல்லாட்டி என்ன? உடன் உட்கார்ந்து சாப்பிட எனக்கு உரிமை இருக்குதே'' - இப்படி அந்த புன்னகையில் பொதிந்திருந்த சவால், அவனுக்கு மட்டுமே புரியக்கூடியது. அது புரிந்தது என்பதாய் அவனும் முறுவலித்தான்.

தம்பதிகளின் இந்த புன்னகைப் பரிமாற்றத்தைக் கவனித்த விருந்தினரின் முகங்களில் கடுப்பு!

அது அஸ்வினிக்குள் கெட்ட உற்சாகத்தைக் கிளற, ''உங்களுக்குப் பிடிக்குமேன்னுதான் அன்னாசிப்பழ கேசரி செய்தேன். அத்தான் இன்னும் ஒரு கரண்டி போட்டுக்கோங்க'' கொஞ்சி உபசரித்தாள்.

அவன் கண்களிலும் குறும்பு மின்னல்கள்... ''பிரமாதம் அஸ்வி... அனுகூட இவ்வளவு சாப்பிட்டு நான் பார்த்ததே யில்லை. உன் சமையலுக்கு அவளும் அடிமையாயிட்டா.''

''நான் எதற்கும் அடிமையாகும் ஆள் இல்லை'' மார் தட்டியது போல பீற்றிய அனு. அமரை அதட்டினாள். ''ஏன் இந்த 'திடீர்' திருமணம்? அதுவும் நான் ஊரிலே இல்லாதபோது?''

''முதல்ல நீ ஊர்லே இல்லாததே எனக்குத் தெரியாதே அனு! தவிர, திருமணம் சொர்க்கத்தில் நிச்சயமானதும் நாம இங்கே மேளத்தைக் கொட்டிட வேண்டியதுதானே...''



''சொர்க்கத்திலா? இவ சமையல் திறமையில் மயங்கி நிச்சயம் பண்ணிட்டீங்கன்னு தோணுது...''

''அதுவும்தான்... தவிர உன் கண்ணில் கோளாறு ஏதுமில்லையே?''

''ஏன்?''

''அஸ்வினி ரொம்ப அழகு. அதுவும் தெரியுதுல்ல?''

அந்தப் பாராட்டை அலட்சியப்படுத்திட்டு அனு, ''இவளுக்கு உறவு அதிகம் இல்லை போலவே?'' என்றாள்.

இதற்கும் பதிலடி பலக்கவே கிடைத்தது. ''காசு இருந்தால் தானே உறவு? ஐந்து ஆண்டுக்கு முன் நீங்களும் என்னைத் திரும்பிப் பார்த்ததில்லையே... அஸ்வினியுடையது சின்ன குடும்பம். தம்பி என்ஜினீயரிங் சேரணும்... கல்யாணத்துக்கு அவ உறவு, நண்பர்கள் வந்திருந்தாங்க. நீங்க வராததால் தெரியலை...'' சொன்னவனை நன்றியுடன் பார்த்தாள், அஸ்வினி.

ஆனால், கேள்விக் கணைகள் ஓய்வதாயில்லை.

''எங்கே சந்திச்சீங்க ரெண்டு பேரும்?''

''மருத்துவமனையில்'' என்றவனைக் குழப்பத்துடன் பார்த்தவள், அவனுக்கு நினைவூட்டுவது போல, ''இல்லை... ரோட்டில் என் சைக்கிள் பஞ்சர் ஆனபோது'' என்றதை அவன் கேளாதது பால் பேசினான்.

''இவளைப் பார்த்ததும் கேட்டதுமே சரணாகதி...''

''கேட்டதுமா? ஆஸ்பத்திரியில் பாடினாளா என்ன?'' கேட்டாள், அத்தையம்மா.

''பாடுறதுபோல பேச்சும் ஒரு கலைதானே. எத்தனை பேருக்கு அது அமையுது?'' விடாமல் பீற்றினான், அமரேசன்!

''என்ன பேசினேன்?'' குழப்பம் கலந்த வியப்புடன் கேட்டாள், அஸ்வினி அவளுக்கு இது புதுக் கதையாய் இருந்தது. அவர்கள் எந்த மருத்துவமனையில் எப்போது சந்தித்தார்கள்? இவள் அப்படி என்ன பேசினாள்?

''தைரியமாய் பேசினாள். என்னை யாரும் மிரட்டிப் பணிய வைக்க முடியாதுங்கிற தொனியில் தெளிவாய்ப் பேசினாள்.''

இவளுக்குக் குழப்பம் கூட பேச்சு மாறியது.

''சட்னி வை அஸ்வினி. அந்தக் கேசரி பாத்திரத்தை என் பக்கமாய் நகர்த்து'' என்றவன் ''நம்ம பசங்க எல்லாரும் சாப்பிட்டாச்சா?'' எனக் கேட்டான்.

''ஆச்சு.''

''இந்தத் தோட்டக் கலை பத்திரிகைகளை வாசிச்சு வை'' புத்தகங்களை நீட்டினான். ''மர வகைகள், அவை கனி தரும் காலம், தாக்கும் பூச்சிகள், உரம் பற்றிய பரிச்சயம் இருந்தால் தான் பண்ணையில் சுவாரசியம்...''

''இத்தனை பேருக்கு இந்தப் பொண்ணு சமைக்கிறது போதாது போல இதையெல்லாம் வேறு படிச்சுத் தொலைக் கணுமா?'' மெய்யான பரிதாபத்துடன் அத்தை கேட்க,

''இல்லைம்மா... ரொம்ப சுவாரசியமாகவே இருக்குது'' என்று விட்டுத் தராமல் சமாளித்தாள், மகள்.

''தனியாளாய் நின்றுகூட அஸ்வினி இந்தப் பண்ணையை நிர்வகிக்கணும். அதற்குத்தான் அவளைத் தயார் பண்ணுறேன்...''



''நானா... நான் ஏன்?'' தாளாமல் குறுக்கே விழுந்து கேள்வி கேட்டவளின் கன்னத்தை மிக லேசாய்த் தட்டினான். ''ஏன்னா இத்தனைக்கும் நீதானே ராணி.''

அவன் சொல்ல, மலைத்து முகம் சிவந்தாள். இது விருந்தினருக்காகப் போட்ட 'இனிய இல்லற' நாடகம். ஆனாலும் அந்த வார்த்தைகளும், சின்னத் தொடுதலும் அவளைப் பரவசப்படுத்தின. இத்தனை ஏக்கம் தன்னுள் கிடந்தது. அவளுக்கே அப்போதுதான் புரிந்தது.

''காதல் - இன்னொரு இதயத்தை இனாம் கேட்பதல்ல, இன்னொரு இதயத்துக்காய் ஏங்கிக் கிடப்பது...''

சமீபத்தில் வாசித்து ரசித்த வரிகள் மனதில் ஓடின. அவன் மனதில் மட்டும் இடம்பெற்று விட்டால் அடிமைச் சேவகம் புரியவும் தான் தயார் என்பது புரிந்தது.

''சரி... நாங்க கிளம்புறோம் அமர்...''

''வாங்க... வந்ததற்கு நன்றி'' சற்று கிண்டலோ?

''கொஞ்சம் ஓய்வெடுங்க. அதுக்குள்ளே உங்க டிரைவருக்கும் சாப்பிட ஏதேனும் தந்துடறேன்.''

''ம்... நிறைய சாப்பிட்டுட்டேன்... உடனே கிளம்புறதும் கஷ்டம்தான்...''

''இந்த அறையில் சற்றுப் படுங்க அத்தை'' கீழ் அறையில் அவர்களை விட்டவளின் பின்னேயே அமரேசன் வந்தான்.

''டவுனுக்குப் போறேன். அசோக்கிற்கு கேசரி தந்து விட்டால் கொண்டு போய் தரேன். நேற்று பறிச்ச பன்னீர் கொய்யாவும் எடுத்து வை.''





அவன் சொன்னதை ஓடி ஓடிச் செய்தாள். இனம் புரியாத பரபரப்பில் உடம்பு நடுங்கியது. தன்னைப் பாராட்டியது, இதமாகப் பேசியது. கரிசனையாய்த் தம்பிக்குத் தின்பண்டம் எடுத்துப் போவது... எதனால் விளைந்தது இந்த பரவசம்?

அமரேசனை வழியனுப்பிவிட்டு ஓட்டுநருக்கு உணவு இட்டவள், அவர் சாப்பிட்டாகி விட்டதைச் சொல்ல அத்தை இருந்த அறைக்குப் போனாள். கதவு வழக்கம் போல சரியாய்ப் பொருந்தாமல் காற்றுக்கு விலகி இருக்கவே அவர்களது பேச்சு, தெளிவாய் இவளின் காதுக்கு வந்தது.

''என்னடி இப்படி அந்நியோன்யமாய் இழையிறாங்க?''

''அவ சொன்னது சரிதான்'' குறைக்கப்பட்டது இளைய குரல்.

''யார்... அந்த ஓட்டல்காரியா?''

''தேடி வந்தவ நல்ல அழகாயிருந்தா. தவிர நம்மை எல்லாம் அட்சியம் பண்ற அமர், இந்த அஸ்வினி வந்ததும் ஆர்வமாய் ஓடிவந்தார் - சிறு வயசுக் காதலன் போல விதவிதமாய்ச் சாப்பிட வச்சு ஜால்ரா தட்டினார்னு சொன்னாளே...''

இப்போதுதான் அஸ்வினிக்கு முழுக்கப் புரிந்தது. வரவேற்பில் நின்ற அப்பெண் ஏன் தன்னை சிடுசிடுக்க பார்த்தாள் என்பது. எதிரியின் எதிரி தனக்கு நண்பன் என்ற ரீதியில் அனுவும் அந்தப் பெண்ணும் கைகோர்த்துத் தன்னைப் பற்றிப் புலம்பி இருக்கிறார்கள்.

பாவம்... அத்தனைக்கு அமரேசனை விரும்பி இருக்கிறார்கள்! சரி... இப்படி தனக்காய் ஏங்கிய அழகுப் பெண்களை விட்டுவிட்டுத் தன்னை ஏன் தேர்ந்தெடுத்தார்?



காதல்தானா?

இல்லை, அதைவிட எளிய பதில் ஒன்று இருந்தது. ரெண்டும் ரெண்டும் நாலு என்பது போல. மற்ற பெண்கள் இப்படி முதுகொடிய வேலை பார்க்க சம்மதிக்க மாட்டார்கள். தினம் பத்து பேருக்கு மூன்று வேளை வடித்துப் பரிமாற தயாராய் இருக்க மாட்டார்கள்.

விதவிதமாய் உடுத்தி, கணவனோடு வெளியே, விருந்து, விழா என்று சில மாதங்களைக் கழித்த பின், இருவருக்குமாய் ஏதோ சமைப்பதே பெரிசு! இப்படி சமைத்து கழுவி, அது பற்றி புலம்பாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்து...

ஆனால், மறுபக்க புத்தி அவளை இடித்தது - 'ஒப்பந்தமே அதுதானே அஸ்வினி! நீ பண்ணையை நடத்த உதவும் பொறுப்பான துணையாய் இரு. உன் தம்பியின் பொறுப்பை நான் ஏற்கிறேன்'' என்பதுதானே... தவிர இனி பிரியமாய் கூடப் பழகி...

உள்ளே பேச்சு தொடர்ந்தது.

''இவ அழகாய்த்தான் இருக்கிறா இல்லியாம்மா?''

''ம்... ஆனா ரொம்ப அடக்கம்... பயப்படுற மாதிரி கூட தெரியுது...''

''பாவம், இப்படி சமைச்சே தேய்ஞ்சடப் போறா... இதுல பண்ணை பத்திரிகைகளை வேற மனப்பாடம் பண்ணணுமாம்!''

''நல்லவேளை, நீ தப்பினேடி... உன்னை இந்தப் பண்ணைக்கு ராணியாக்கி நானும் தர்பார் பண்ணலாம்னு நினைச்சேன். அதான் அமருகிட்ட பழகி, அடிக்கடி வந்து

போனேன். ஆனா, அப்படியே பாடுபட்டு அவனை மாப்பிள்ளையாக்கி இருந்தா நான் வெங்காயம் உரிச்சே தளர்ந்திருப்பேன். அரை வயிற்றுச் சாப்பிடுற உன்னால இங்குள்ள சாமானை அங்க நகர்த்தக்கூட முடியாதே...''

''சரிம்மா விடு... அங்கலாய்ச்சிட்டு வந்தே... இங்கே என்ன ஏதுன்னு பார்த்தாச்சு... இது நமக்குப் பொருந்தாது... அவங்க பொருந்திப் போறாங்க... நாம கிளம்புவோம்....''

இவள் கதவைத் தட்டிவிட்டு ஓட்டுநர் தயாராய் இருப்பதாய்ச் சொன்னாள்.

''உங்களுக்குக் கூடையில் பழங்கள் எடுத்து வச்சிருக்கேன் அத்தை.''

''ஹிஹி.... சரி... உனக்கு ஏதும் வாங்கிட்டு வரலை... ஏதேதோ வேலையில... விட்டுட்டோம்...''

''நீங்க வந்ததே பெரிசு... அடிக்கடி வந்து போங்க'' வழியனுப்பினாள்.

அவர்கள் வந்த நோக்கம் எதுவாயினும் எப்படியோ தன்னை அமருடன் மேலும் நெருங்க வைத்து விட்டதாய் நினைத்து மகிழ்ந்தாள்.

உப்பு சப்பற்றுப் போன வாழ்வில் இனிய திருப்பம் நேர்ந்ததே. அவர்கள் தந்த பரிசுதானே?

இந்த உற்சாகத்துடன் தோட்டக்கலை பத்திரிகைகளைப் புரட்டி, தொழில் நுட்பம் அத்தனையும் புத்தியில் ஏற்றலானாள்!

சமைக்கும்போது பருத்திச் சேலையை மாற்றிக் கொண்டாலும், வேலை முடிந்த, மாலை வேளையில் மறுபடி



குளித்து, காலையில் கட்டிய அதே ஆரஞ்சு நிறச் சேலையை உடுத்தினாள். அந்தச் சேலை, ராசியானது என்ற மூடநம்பிக்கை!

''நம் தோற்றத்தைப் ''பளிச்'சென வைத்தால், வேண்டாத சிந்தனைகள் நம்மை அண்டாது, அண்டினாலும் ஆளாது'' என்பதிலும் நம்பிக்கை உண்டு என்பதால் கவனமாகத் தலைபின்னி, ஆரஞ்சு நிறச் சாமந்திப்பூ ஒன்றைப் பின்னலில் செருகினாள்.

''பொன்னிட பொன்னிட பெண்ணுக்கழகு.''

உண்மைதான். ஆனால், உலகில் எல்லாப் பெண்களுக் குமே பொன் கிடைத்து விடாது என்பது தெரிந்து இறைவன் படைத்ததுதான், பூக்கள் போலும்!

பின்னலில் சற்று மலர் சூட முகத்தின் ஒளி பலமடங்காகப் பெருகி விடுகிறதே!

துளி ஏக்கத்துடன், இணைந்திருந்த கட்டில்களைப் பார்த்தாள். மாலை மயங்கியதும் இவளே அவற்றைப் பிரித்துப் போடுவாள். அவன் அதைச் செய்யும்வரை விடுவானேன் என்ற வீம்பு...

ஆனால், இன்று மனம் வரவில்லை... தனது ஏக்கம் அவளையே நாணச் செய்தது. மனதை அடக்கியவள் அவற்றைப் பிரித்து போட்டபோது அவன் வாகனத்தின் ஒலி அழைப்பு வர, கீழே விரைந்தாள். கதவைத் திறந்தவளுக்கு எதிர்பாராத இனிய அதிர்சசி.

அமரேசனின் முகத்தில் புன்னகை, கையில் இனிப்புப் பெட்டி, அவன் நீட்டியதைப் பிரித்துப் பார்த்தவளுக்குள் மேலும் இனிப்பு! அது அவளுக்கு மிகப் பிடித்த பால் அல்வா!



''இது... இது... உனக்கு மட்டும்தான்...''

''யார்? தம்பி வாங்கித் தந்தானா?'' உண்மையான சந்தேகத்துடன் கேட்டாள்.

''இல்லை... உனக்குப் பிடிக்கும்னான்... அதான் வாங்கினேன்...''

''ம்...இதுவும் ஜாதிமல்லியும் பிடிக்கும்...''

''பூவும் வாங்கினேன்... காரில் இருக்கிறது'' சற்று தடுமாற்றத்துடன் காரை நோக்கித் திரும்பிப் போனவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

அவன் முகமுமே சற்று சிவந்து கனிந்திருக்கிறதோ? பூ; இனிப்புப் பற்றி சில தாம்பத்திய துணுக்குகளை அவள் கேள்விப்பட்டதுண்டு!

வெட்கச் சிரிப்புடன், 'ஆண்கள் இப்படியுமா வெளிப் படையாய் வழிவார்கள்?' என்று உதடு சுழித்ததுமுண்டு.

ஆனால், கட்டில்களைப் பிரித்து போட்ட கணவன், 'இன்று என்ன சமையல்? இதைச் செய்' என்பது தவிர அதிகம் பேசாதவன், மனமாரச் சிரிக்காதவனின் கையில் இன்று பூவும் அல்வாவும் ஏன்?

அவளது மறுபக்க நியாய புத்தி, வழக்கம் போல அதட்டியது.

''ஏதோ இதுவரை அவர் உனக்கு ஏதுமே பரிசளிக்காதது போல அலட்டாதே அஸ்வினி... கல்யாண வேளையில் உனக்கு வேண்டிய பட்டுச் சேலைகள், அவரது பரிசுதான்.

''கழுத்தில் மாலையும் புதுத் தாலியும் தவிர வேறேதும் இல்லை. கவனிச்சியா?'' என்று உன் கல்யாணத்திற்கு வந்த



பெண்கள் போலி பரிதாபம் காட்டக்கூடாத வகையில் நகைகளும் வாங்கித் தந்தவர்தானே?''

ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது! ஆனால், அவற்றை விட இந்தப் பூவும் தனக்குப் பிடிக்குமென்பதால் வாங்கி வந்திருந்த இனிப்பும் அவளை நெகிழ்த்தின... ஏன்... கிறக்கின என்றுகூடச் சொல்லலாம்.

இரு நாட்களாய் மற்றவர்களிடம் அதிகம் பேசாதிருந்தவள், இன்று 'கலகல'வெனப் பேசினாள்.

சமையலறையை ஒதுக்கி வைத்து மாடியேறி அறைக்குள் நுழைந்தவளை, அந்தக் காட்சி திகைக்க வைத்தது.

சற்று முன்பு அவள் விலக்கிப் போட்டிருந்த கட்டில்கள் இணைக்கப்பட்டிருந்தன. அதில் அமர்ந்து புத்தகம் பிடித்தபடி அமர்! தவறு - புத்தகம் 'பிடித்தபடி' என்றுதான் சொல்லணும்... ஏனெனில் அவனது பார்வை இவளில் நிலைத்திருந்தது.

இவளுக்குப் படபடத்தது. இதுவரை உள்ளே கனன்ற ஏக்கம், இப்போது அச்சமாய் மாறி எரிக்க ஓடிவிடலாமா என்று கணநேரம் யோசித்துவிட்டு, பின் மாற்றமே காணாதவள்போல இயல்பாய் போய்க் கட்டிலில் அமர்ந்தாள்.

கீழ் அறையில் பல்விளக்கி, இரவுக்காகத் தயாரான பிறகே அவள் மாடிக்கு வருவது வழக்கம். அதுவும்கூட முன்னறையில் படுக்கும் தனித்தனி அறைகளில் படுப்பது யாருக்கும் தெரிய வேண்டாமென்றே இப்படி ஒரே அறையில் படுக்கை.

இதுவரை பிரிந்த கட்டில்களில்... இன்று...?

வழக்கம் போல பிரார்த்தனை செய்துவிட்டு மறு பக்கமாய் ஒருக்களித்துப் படுத்தவளை அவனது கை பற்றியது. அதன் சூடு அவளைத் தகித்தது.

''அஸ்வினி, நான் ஏற்கனவே சொன்னேன்... அதாவது பள்ளிக்கூட வேலையும் சேர்த்து உனக்கு வேலை அதிகம்தான். சமாளிச்சுட்டே... இனி பண்ணை, வீட்டு வேலை மட்டும்தான்... இதோடு மனைவிங்கிற வேலையையும் செய்திடுவேன்னு நினைக்கிறேன். சரிதானே?''

சற்று முன் கனிந்த மனம், இப்போது அனல் பட்டதாய் துடித்தது.

ஆக, இவனோடு படுக்கையைப் பகிர்வதும் ஒரு வேலை! மற்ற வேலைகள் குறைந்து விட்டன என்று அவன் கருதுவதால் தனக்கு அளிக்கப்பட்ட மாற்று வேலை! வேறேதுமில்லை... காதல்... ஏன் காமம் கூட இல்லை...

துக்கத்தால் விக்கித்திருந்தவளை இழுத்துத் தழுவிக் கொண்டான்.

## 11

காலையில் கண் விழித்தவளுக்கு உடல் முழுக்க ஒரு சுகச் சோர்வு! கண்களைத் திறந்து மணி பாாத்த பிறகு விழிகள் தானாகவே மறுபடி செருகிக் கொண்டன.

மணி ஆறாகிவிட்டது.

காலை ஐந்தரைக்கெல்லாம் சமையல் மேடை முன் நிற்பதுதான் வழக்கம். அப்போதுதான் வேலை பதற்றமின்றிப் போகும்.



ஆனால், எழ முடியாதபடி உடல் அசந்து கிடந்தது.

திரைப்பட நாயகிகள் முதல் ராத்திரியை முடித்துவிட்டு எத்தனை சீக்கிரமாய்த் தலைகுளித்து, உடுத்தி, கணவனுக்குக் காப்பி கொண்டு போகிறார்கள். இந்நினைப்பு வழக்கம் போல அவளைப் புன்னகைக்கச் செய்யவில்லை. மாறாக ஒருவிதச் சோர்வையே சேர்த்தது.

''நான் செய்யும் செலவிற்கு நீ இந்தச் சேவகத்தையும் சேர்த்தே செய்யலாமே'' என்ற ரீதியில் பேசிவிட்டு ஏற்பட்ட அணைப்பு, வேதனையாகத்தான் இருந்தது. மிக இனித்திருக்க வேண்டிய உறவு, கசந்து போனது.

ஆனால், இதற்கு நடுவே ஒரு நிம்மதியும் இழையாமல் இல்லை ஆக, இவர் ஆண்மையற்றவர் இல்லை.

முன்பும்கூட இப்படியேதான் தன்னைத் தேற்றிக் கொண்டாள். என்றாலும் சில மணி நேரத்துக்கு முன் அடித்த மோக அலையில் முழுக்க நனைந்த பின் அது போன்ற சந்தேகக் கசடுகள் நீங்கி மனம் இலகுவாகி இருந்தது. இந்த மோக வேகத்தை இத்தனை நாட்கள் எப்படி அடக்கி வைத்திருந்தான் என்ற ஆச்சரியம் வேறு!

முயன்று எழுந்தவள், கீழே போனாள். கட்டிலில் அமர் இல்லாதது பெரிய நிம்மதி.

சும்மாவே குறுகுறுக்கும் அவன் கண்களை அவள் பார்ப்பதைத் தவிர்த்து விடுவாள்... இனி அவனை ஏறிடும் தைரியம் தனக்கு இல்லை என்றே பட்டது. படியிறங்கும் போதே காப்பியின் மணம், அவளைத் தழுவி வரவேற்றது.

அந்த மணத்தில் அவளது மனம் சுரந்தது... ஆக காப்பி தயாரிப்பில் இறங்கிவிட்டாரா?



மனம், திடும்மென எம்பி உற்சாகச் சிறகை விரித்தது. இத்தனை நாட்களில் அவனுக்குக் காப்பி போடத் தெரியும் என்பதுகூட தனக்குத் தெரியாதே? அதாவது அதை அவன் காட்டிக் கொள்ளவில்லை.

ஆனால், இன்று மனைவியின் உறக்கத்தைக் கலைக்காமல், அவள் வேலையை எடுத்துச் செய்யுமளவில் மனம் இரங்கி இருக்கிறது.

வெட்கமும் விருப்பமுமான புன்னகையுடன் அவள் நுழைய ஓரக்கண்ணால் இவளைப் பார்த்தவன், ''கூட ஒரு வேலை கொடுத்தேன்தான். அதுக்காக ஏற்கனவே உள்ள வேலையில் அசமந்தமாய் இருக்கணும்னு அர்த்தமில்லை'' என்றான், கறாராய்.

இது கேலியா?

இல்லை... குரலில், முகத்தில் இறுக்கம்! அது கேலி அல்ல; குற்றச்சாட்டு என்றது தெளிவாய்.

சற்று முன் முளைத்திருந்த உற்சாகச் சிறகுகள், அறுந்து தொங்கின. பதில் சொல்ல... ஏன் யோசிக்கவும் கூடாத வேதனை.

''என்ன?''

''மன்னிக்கணும்... இப்ப... இப்ப செய்திடுறேன்...''

''ம்...'' ஒரு மாதிரியான உறுமலுடன் விலகினான்.

நேற்றிரவின் தாபம் எல்லாம் இப்போது ஏன் கோபமாகி விட்டது? கேள்வி, தொண்டையை அடைக்கக் குமைந்தாள்.

ஆனால், எதையும் வாய்விட்டுக் கேட்டாளில்லை.



தொடர்ந்த இரவுகளிலும் கட்டில்கள் இணைந்தே இருந்தன. இரவுகள் மோகத்தால் அடர்ந்திருந்தாலும், அது நேசமற்ற மோகம்...

காதலற்ற உறவு...

கனிவற்ற தழுவல்கள்...

கசந்த முத்தங்கள்...

இவளது விருப்பமின்மையை அவன் உணராமலில்லை. ஆனால், அது அவனுக்கு ஒரு பொருட்டாகவுமில்லை.

''என் விருப்பத்திற்கு நீ வளைந்து கொடுத்தாலே போதும்'' என்ற ரீதியில் போன இரவுகள்...

முன்பு தான் ஏங்கியது இதற்காகவா? கசந்த வறட்சியுடன் கேட்டுக் கொண்டாள்.

விரகத்தின் தணலைவிட, காதலால் மிருதுவாக்கப்படாத இந்த மோகம், அதிக வேதனையாய் இருந்தது.

யாருமில்லாத நேரத்தில் கண்ணீரே அவளுக்குத் துணையாய் வடிந்தது.

பெருமூச்சுடன் வேலையில் தன்னை மூழ்கடிக்க முயன்றாள்.

ஆனால், மறுவாரம் வந்த மாதவிலக்கின்போது வேதனை மிக அதிகமாகப் படுத்தியது. அது உடலின் மாற்றங்களாலா அல்லது உள்ளச் சோர்வாலா என்று புள்ளி குத்த முடியா விட்டாலும் தாளாத வலியில் சுருண்டு கிடந்தாள்.

இடக்காக ஏதும் சொல்வானே என்று அஞ்சி காலை உணவைத் தயாராக்கி மேஜையில் வைத்தபின், வலிக்காக ஒரு மாத்திரையைப் போட்டுவிட்டுப் படுத்தாள். வலியைக்

குறைத்த அது, உறக்கத்தை அதிகப்படுத்தியது. அசந்த தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

சற்று முரட்டுத்தனமாய் தன் தோள்கள் உலுக்கப்பட தடுமாறி எழுந்தாள்.

''எத்தனை தரம் கூப்பிட, அஸ்வினி?''

''நான்... எனக்குக் கேட்கலை...''

''இப்ப என்ன தூக்கம்?''

''வந்து... மாத்திரைப் போட்டேன்.''

''ஏன்... என்னாச்சு?''

''வயிற்று வலி... வழக்கமாய் இத்தனை வலிக்காது. இந்த மாசம் வேதனை அதிகமாய் இருக்குது. அதான்...'' அவன் புரிந்து கொள்வான் என்ற நினைப்பில் விளக்கினாள்.

அவனுக்குப் புரியத்தான் செய்தது. ''இது எல்லாப் பெண்களுக்கும் ஆண்டுக்குப் பன்னிரண்டு முறை வரும் பாடுதானே? இன்னுமா உனக்குப் பழகலை? மற்றவர்களின் மூணு நேர வயிற்றுப் பாட்டையும் நீதானே கவனிக்கணும். எழுந்திரி... நல்லவேளை வந்து பார்த்தேன்... இல்லைன்னா ஒரு மணி வரை தூங்கி இருப்பே...''

அவனது பேச்சுகள் ஓரளவு பழகி விட்டன. ஆனாலும் இப்போது தாள முடியாமல் அழுகை முட்டியது. அவன் முன் கண்ணீரைச் சிந்திவிடக் கூடாது என்ற வெட்டி வைராக்கியம் வேறு.

'சரட்'டென எழுந்தாள். துவண்ட கால்களைச் சமாளித்து முகம் கழுவி, சொச்ச தூக்கத்தைத் துடைத்தாள்.



கெட்டிப் பருப்பும் ரசமும் வைத்து, வடகம் பொரித்தால் போதும் என்ற யோசனையுடன் சமையலறையுள் நுழைந்தாள். அடுப்பு மேடையில் வைக்கப்பட்டிருந்த பெரிய மீன் ஒன்று தன் விறைத்த கண்களால் அவளை முறைத்தது!

பின் தொடர்ந்தவன், விளக்கினான் - ''நம்ப பேச்சிமுத்து கொண்டு வந்தான். அவன் கண்மாயில் பிடிச்சதாம். குழம்பாய் வச்சிடு. மீன் குழம்பிற்கு எப்போதும் கீரை மசியலும் மல்லித் துவையலும் வேணும். ஆக...''

''செய்திடுறேன்'' என்றாள், கடித்த பற்களூடே!

தன்னால் அந்தப் பெரிய மீனை வெட்ட முடியுமெனத் தோன்றாததால், மேல் வேலைக்கிருந்த ரகுமாயியை உதவக் கேட்டாள். அவள் மீனை அறுக்கத் தொடங்க, இவள் மசாலா தயாரிக்கலானாள். பின்புறத் தோட்டத்திலிருந்து கீரையும், மல்லித் தழையும் பறித்து வந்து, ஆய்ந்து வேகவிட்டுக் கடைந்து முடித்தபோது தன்னையே யாரோ கடைந்து விட்டது போல அவளை அலுப்பு, போர்த்தியது.

''என்னம்மா சோர்ந்து தெரியுறீங்க?''

''வயிற்றுவலி ரகுமாயி...''

''சூட்டு வலி போல. முனியன்கிட்ட சொல்லி ரெண்டு இளநீர் சீவித் தரச் சொல்றேன்.''

''ம்...''

''மல்லித்தழையை ஆயட்டுமா?''

''ஆகட்டும். துவையலுக்குத்தான்.''

''வேண்டிய சாமான்களை எடுத்துப் போடுங்கம்மா... அரைச்சு வச்சுடுறேன். நீங்க சித்த படுத்து எந்திரிங்க.''



இந்தப் பரிவில் இவளுக்குக் கண்கள் பொங்கிவிட்டன. ''சம்பளம் வாங்கிப் போகும் பெண்ணுக்கு இருக்கும் நேயம்கூட கட்டினவனிடமில்லையே...''

''சுகத்திலும், துக்கத்திலும், வாழ்விலும் தாழ்விலும் உன்னை நேசிப்பேன்'' என்று கடவுள் சந்நதியில் வாக்குத் தந்து வாழ்வில் இணைந்தவனிடம் கிடைப்பதெல்லாம் ஏவலும், குத்தல் பேச்சும் தான்.

கழிவிரக்கம் அவளைக் கடைந்தது... குடைந்தது...

வேடிக்கைதான்... போன சில மாதங்கள் வரை வீட்டு வாடகை பாக்கி, அதை எப்படி அடைப்பது, தம்பி மட்டும் பொறியியல் படிக்கக் கூடுமானால்... இப்படியே போனது அவளது கனவு, கவலை எல்லாம்.

போன வாரம் வரை, ''கணவன் தன்னைத் தொடாதது ஏன்? அவர் ஆண்மையில் பழுதா அல்லது தன் பெண்மைதான் அவரை வசீகரிக்கவில்லையா?'' என்ற மருகல்!

இன்று அவையெல்லாம் மாறிப் புதுப் பிரச்சினைகள்... வேதனைகள். வாழ்க்கைக் கடலின் புது அலைகள்... ஆனால், அலைகளைச் சமாளிக்கக் கூடிய தெம்பு தனக்குக் குறைந்து வருகிறதோ?

வெளியே கார்கள் வந்து நிற்கும் அரவமும் புதுக் குரல்களும் கேட்க, எழுந்தாள். மேலாகத் தலைசீவியவள், ஜன்னல் வழியே பார்க்க, அமரேசனுடன் வேறு சிலர் வீட்டிற்குள் நுழைவது தெரிந்தது.

''என் பண்ணையில் புது சாகுபடி செய்யலாம்னு இருக்கேன்.''



''ஆரஞ்சுன்னு சொல்லேன். அதான் அஞ்சு ஆண்டில் காய்க்கத் தொடங்கும் அமர்.''

''நம்ம சமவெளிப் பகுதியில் அந்த நிறமும் பருமனும் வாய்க்காதுன்னு சொல்றாங்களே?''

''ம்... என் மரங்களை சாம்பல் நோய் வேறு தாக்க, மருந்து தெளித்து சமாளித்தேன்.''

இவர்களை வரவேற்பது போல் வந்து நின்ற அஸ்வினியைப் பார்த்து, சற்று நரைத்த தலையர் ஒருவர் உரிமையாய்ப் பேசினார்.

''அமர் இவங்க...?''

''என் மனைவி அஸ்வினி.''

''என்னப்பா... ஆரஞ்சுப் பழத்தை பிரமாதமாய், சத்தமில்லாம கொண்டு வச்சிருக்கியே...''

மற்றவர்கள் கைகுவித்தனர்.

''என்ன, சாப்பாடு தயார்தானே?''

''ம்...''

''மீன்குழம்பு மணம் அபாரம். அழகு மனைவிக்கு கைப்பக்குவமும் சேர்ந்தே வாய்ச்சிருக்கு.''

''அஸ்வினி, இவங்கெல்லாம் என் நண்பர்கள். சுற்று வட்டாரத்தில் பண்ணை வச்சிருக்காங்க. சில ஆண்டுகளாய்ப் பழக்கம்.''

''கல்யாணத்திற்குக் கூட அழைக்காத நட்பு... பழக்கம்!'' கேலி பேசினார்கள்.

''திடீர்னு முடிவான திருமணம்.''

''எங்கே இத்தனை அருமையான பெண், கை நழுவிப் போயிடுவாளோங்கிற பயத்தில் உடனே நடத்திட்டியாக்கும்?''

ஒரு மெல்லிய முறுவலை ஒட்ட வைத்தபடி பரிமாறியவள், வாயே திறக்கவில்லை.

''நீங்களும் எங்களோடு உட்கார்ந்து சாப்பிடுங்களேன்.''

''இல்லை... இருக்கட்டும்'' பணிவாய் மறுத்தாள்.

''இத்தனை பேர் எதிர்பாராமல் வந்தும்கூட அற்புதமாய் சமைச்சு அசத்திட்டாங்க!''

''அதெல்லாம் அவளுக்குப் பழக்கம்தான்.''

அவளுக்கு வந்த பாராட்டை அமரேசன், அமர்த்தலாய் ஏற்றுக் கொண்டான்!

''அதாவது பழக்கிட்டே? பெண் என்பவள் சக்தி... தன் முழு சக்தியை உணராதவள் பெண்ணே இல்லை'ன்னு முன்பே ஒரு தத்துவத்தை உருவிவிடுவியே... அதற்கேற்றது போல உன் மனைவியை உருவேத்துறே.''

''பழகுறா, அடுத்த ஆண்டு முழுக்கத் தேறிடுவா.''

அவள் எதிலும் சுவாரசியம் காட்டவில்லை. இயந்திரத் தனமாய் பரிமாறி முடித்தவள், மேலும் சோறு வடித்தாள். குழம்பு போதுமான அளவு எஞ்சி இருந்தது.

கீழ்முதுகு 'விண்விண்'னென்று தெறிக்க ஒரு குவளை மோர் மட்டும் பருகிவிட்டுப் படுக்கையில் சுருண்டாள். பண்ணை சம்பந்தமான உரத்தப் பேச்சுகள் கேட்ட வண்ணம் இருந்தன.



மாலையில் மறுபடி அனைவருக்கும் தேநீரும் பிஸ்கட்டும் பரிமாறி கைகூப்பலோடு வழியனுப்பியவளைப் புதிராய் பார்த்தான், அமர்.

''அன்னைக்கு அனுவும் அத்தையும் வந்தப்ப அத்தனை கலகலப்பாய்ப் பேசினே. உடன் உட்கார்ந்து சாப்பிட்டே... இன்னைக்கு என்ன ஆச்சு?''

அவளது உடல் நிலை பற்றி ஏதுமே அறியாதவன் போல அவன் விசாரிக்க, பதில் பேசாமல் நகர்ந்தாள்.

அன்றிரவு மீண்டும் படுக்கை அறையில் கட்டில்கள் பிரிக்கப்பட்டிருந்தன. பிரித்துப் போட்டவள், அவள்!

## 12

ஆனால், ஐந்தாம் நாள் ஒன்றுமே நேராதது போல மீண்டும் அமரேசன் கட்டில்களை இணைக்க, இவளுக்கு அடிநெஞ்சில் கசந்தது.

''இல்ல... வேணாம்...'' முனங்கினாள்.

''ஏன்?'' கேள்வி சற்று அதிகாரத்துடன் வந்தது.

''எனக்கு... எனக்குத் தலைவலி...''

''நோய்க்கு இடங்கொடேல்'' எச்சரிக்கையாய் இடது கை விரலை ஆட்டியவன், வலது கரத்தால் அவளை வலிய இழுத்துக் கொண்டான்.





நாய்க்குட்டிக்குக்கூட சோறு, பால் எல்லாம் தந்து அன்பு காட்டி கவனிக்காவிட்டால் அது வதங்கிப் போகும்.

இளம் செடிக்குக் கூட நீரும் வளமான மண்ணும்கூட போதாதே... சில மணி நேரங்களேனும் சூரியனின் வெம்மை வேண்டுமே! அதேபோல கணவனின் நேச வெம்மை, அவளுக்குத் தேவைப்பட்டது.

அவளை உயிர்ப்பிப்பது! அடி முதல் முடி வரை காதலால் நீவி, ரத்தத்தில், கனவுகளில் சூடேற்றுவது அது.

கணவனின் இதமான சூட்டில்தானே இவள். உயிர்ப்பிக்கப் பட வேண்டும்? இவளது பாசத்தினால் அவனும் பலப்பட வேண்டும்?

ஆனால், இதமான ஒரு பார்வை, சொல், புன்னகைக்காக ஏங்கியல்லவா கிடக்கிறாள்...? இதோ இப்போது கிடைக்கும் மோக முத்தங்களும் தாபத் தழுவல்களும் அவளைத் திருப்தி படுத்தவில்லை... மாறாகத் தவிக்கவிட்டன.

நான் இவ்வளவுதானா? ஒரு ஆணின் மிருக இச்சையைத் தீர்க்கும் போகப் பொருள்தானா' எனக் கன்றிக் குறுகச் செய்தன.

ஆக, கணவனின் பிடியில் ஒரு உற்சாகக் குழந்தையிடம் கிடைத்த துணி பொம்மைப் போலவே கிடந்தாள்.

அடிக்கடி வேளாண்மைக் கல்லூரியிலிருந்து, ஆசிரியர் களும் மாணவர்களும் பண்ணைக்கு வர, இவளுக்குச் சமைப்பதும் பரிமாறி, கழுவிக் கவிழ்ப்பதும் சகஜமானது.

மதியங்களிலும் அவளைப் படுக்க விடாமல் பண்ணையைச் சுற்றி வரச் செய்தான்.



பல ஏக்கர்களுடன் விரிந்து கிடந்த சொத்து, அது. கிழக்கு மூலையில் 'வெள்ளை முசலி' என்ற ஒரு வகைக் கிழங்கு வகைப் பயிரை சோதனை முயற்சியாய் பயிரிட்டிருந்தார்கள். அதை மனைவியின் பொறுப்பிலே விட்டிருந்தான், அமரேசன்.

''இந்திய, அலோபதி மருந்து தயாரிப்பில் இது பயன்படுத்தப்படுமாம் அஸ்வினி. மூட்டு, எலும்பு நோய், நீரழிவிற்குக்கூட மருந்தாகுமாம். 'வயாகரா'விற்கும்கூட இது மாற்று மருந்தாகலாம்னு சொல்றாங்க'' என்றான், ஒரு கண் சிமிட்டலுடன்.

இவள் மண்ணிலேயே விழி பதித்திருந்தாள்.

''ஓர் ஆண்டுக்கு இதன் தேவை சுமார் 35 ஆயிரம் டன் உற்பத்தியோ 5 ஆயிரம் டன்தான். வணிக ரீதியில் - ஏன் மருத்துவ ரீதியில்கூட இதை நாம் பயிரிடுவது நல்லது. ஒரு செடியில் ஏழட்டு கிழங்குகள் இருக்கும். அதை உலர்த்துவது தான் முக்கியமான வேலை... உலர்ந்தது நல்ல விலைக்குப் போகும்...''

வேர்களை உலர்த்தும் முறை பற்றி அவள் பல புத்தகங் களையும் வாசித்துவிட்டாள். தன் பண்ணையின் ஒவ்வொரு செடியின் தேவை அறிந்து நீரும் உரமும் தந்து பாதுகாப்பவன், மனைவியை மட்டும் அலட்சியம் செய்வது ஏன்?

ஆனால், அவளை அதிகம் சிந்திக்கவிடாமல் வேலைகள் நெம்பித் தள்ளின. நார்த்தை, விற்பனைக்குப் போகும்போது இவளது சமையலறையிலும் வந்து விழும் - ''ஊறுகாய் போட முதலாளி அனுப்பினாங்க'' என்று!

மோர்மிளகாய், வடாம், ஜாம் என்று சதா எதை எதையோ செய்ய வேண்டி இருந்தது.

வேலை அதிகமாக அதிகமாக உடம்பு சுணங்கியது. சாப்பாடு கூட பிடிக்கவில்லை.

இடையிடையே வந்த திரவியம் மாமா, ''என்னம்மா, மகிழ்ச்சியாத்தானே இருக்கே?'' என்று வினவினார், ஒருவித சந்தேகத் தொனியில்!

ஆவலாய் தங்கள் சிநேகிதியைப் பார்க்க வந்த ஆசிரியத் தோழிகள், சற்று சஞ்சலத்துடனேயே திரும்பினார்கள்.

''என்ன அஸ்வி... முன்னாடி நல்லா இருந்தியே... இப்ப வாடிட்டே?''

''இங்கே உன்னைக் கவனிக்கப் பெரியவங்க இல்லை... அதான். நேரா நேரத்திற்குச் சாப்பிடு... நிம்மதியாய்த் தூங்கு...''

''சதா வெயில்ல அலையாதே.''

''ஒருவேளை... மாசமா இருக்கியோ?''

''அதெல்லாமில்லை'' என்று தலைகவிழ்ந்தபோதுதான் நாட்கள் சற்று தள்ளிப்போயிருந்ததை உணர்ந்தாள்.

மிகுதியான உழைப்பால் அல்லது போதுமான அளவு சாப்பிடாததால் விளைந்த அசதி என்று நினைத்தது தப்போ?

மேலும் ஒரு வாரம் கழிய, அவளுக்குத் தலைதூக்க முடியவில்லை.

உணவின் மணமே குமட்டியது. தூக்கம் பெரும் கரும் போர்வையால் அவளை மூடி, சதா தன்னுள்ளேயே வைக்க, நேரம் நிலை மறந்து உறங்கினாள்.

அவளை எழுப்பினான்... அதட்டினான்... ''என்ன அஸ்வினி... ரகுமாயியை இட்லி ஊற்றச் சொன்னாயாமே?''



''ம்...''

''அவ வச்ச சட்னியை வாயில் வைக்க முடியலை... இட்லி, எப்படியோ இருக்குது. காலையிலேருந்து தோட்ட வேலையில் காஞ்சு பசிச்சு வந்தால் எல்லாரது வயிற்றையும் காய வச்சுட்டியே?''

''என்னால் முடியலை...''

வாயில் சுரந்த எச்சிலை விழுங்கியபடி குழறினாள் -

''ஏன்?'' முகம் சுழித்தவன், பின் புரிந்தாற்போல, ''அந்த மாதாந்தர விஷயம்தானே? எல்லாப் பெண்களுக்கும் உள்ளதை நீ ஏன் ஊதிப் பெரிசுப்படுத்தறே? உடம்பின் விருப்பத்திற்கு நாம விட்டுக் கொடுக்கக்கூடாது. நம் இஷ்டத்திற்கு அதுதான் வளைஞ்சு வணங்கணும்...''

''இல்ல... அது இல்ல...''

''எது இல்லை...?''

''நான் இந்த மாசம் குளிக்கலை...'' பல்லைக் கடித்தபடி சொன்னாள். பசியும் சோர்வும் அவளை அரை மயக்க நிலைக்குத் தள்ளி இருந்தன. இதில் இவனது ஆரோக்கியம் பற்றிய பிரசங்கத்தை வேறு கேட்கும் தொல்லை!

''ஏன்...?'' என்று அதிகாரத்துடன் வினவத் தொடங்கியவன், சட்டென நிறுத்தினான்.

ஆனால், அவனை நிமிர்ந்து பார்க்க அவள் துணியவில்லை.

''அப்படின்னா... நீ...'' வெட்கம் வந்த குழந்தை, தாயின் முந்தானை தேடி அதன்பின் பதுங்குவது போல் பெரிய



வர்கள், சற்று சங்கடமான சூழ்நிலையில் வார்த்தைகளை ஏனோ விழுங்கி விடுகிறார்கள்.

''ம்... அப்படித்தான் நினைக்கிறேன்...''

தன் நகங்களை ஆராய்ந்தபடி முனங்கினாள்.

''இப்ப என்ன செய்யலாம்?''

முதன் முறையாக, செய்வது அறியாமல் மனைவியிடம் ஆலோசனை கேட்டான்.

''நான் டாக்டர் கிளாடிசைப் பார்க்கப் போறேன்...''

சில விநாடிகளின் மௌனத்திற்குப் பிறகு கேட்டான்: ''கருக்கலைப்பு செய்துக்கவா?''

அதுவரை தன்னுள் திரண்டிருந்த வெறுப்பை எல்லாம் திரட்டி நிமிர்ந்து வெறித்தாள், அவள்.

மேஜையில் சாய்ந்து அழுதவளைப் பரிதவிப்புடன் பார்த்தார், மருத்துவர்.

''உஷ்... எத்தனை துணிச்சலான பெண் நீ... இப்படி அழாதேம்மா... அதுவும் இந்த நிலையில் இப்படி குலுங்கிக் குமுறி அழக்கூடாது...''

''என்னால தாங்க முடியலியே, டாக்டர்...''

''அதற்கான பலம் உன் உடம்புக்கும் மனசுக்கும் இப்ப இல்லை. நிறைய ஓய்வும், சாப்பாடும் கிடைச்சால் எல்லாம் சரியாயிடும்...''

''நிரந்தரமாய்க் கண்ணை மூடிடமாட்டேனான்னு இருக்குது.''



''அநாவசியமாய் பேசாமல் இந்த மேசை மேல் ஏறிப் படு... இதுவரை உன் பிரச்சினையைப் பற்றி நீ சொன்னதை எல்லாம் நான் கேட்டேன். இனி என் பேச்சை நீ கேளு...''

அஸ்வினி, சிவந்த கண்கள் - வறண்ட முகத்துடன் நிமிர்ந்து பார்த்தாள். மருத்துவர் கிளாடிஸ் ஊசியை இழுத்து மருந்தை உள்ளேற்றிக் கொண்டிருந்தார்.

''அது... எனக்கா?''

''உனக்கேதான்... வந்து படு...''

''வேணாம் டாக்டரம்மா... எனக்குச் சாவுதான் வேணும்...''

''ஆழ்ந்த தூக்கம் கூட ஒரு வகையில் மரணம் போலத்தான். ஆனால் விழித்ததும் உலகம் இன்னும் சற்று பிரகாசமாகத் தெரியும். எந்தச் சவாலையும் சமாளிக்கலாம் என்கிற அளவுக்குத் தெம்பும் ஊறியிருக்கும்...''

மருத்துவர் சொன்னபடி பிஸ்கட்டும் ஊட்டச்சத்து பானமும் வர, ஊசியின் மூலம் தன்னுள் மருந்தை ஏற்றுக் கொண்டாள், அஸ்வினி. மருத்துவரின் பேச்சுக்குக் கீழ்ப்படிந்து, வந்ததை வயிற்றுக்கு இட்டாள்.

''ம்... இப்ப வாயைக் கொப்பளிச்சுட்டு இங்கேயே படு... நானும் வீட்டுக்குப் போகாமல் உன்னோடுதான் இருக்கப் போறேன். காலையில் என் வீட்டுக்குப் போய் குளிச்சு, சாப்பிட்டுட்டு மறுபடி பேசுவோம். சரிதானே?''

''அதான் நான் சொல்லிட்டேனேம்மா. நான் அவரைக் கல்யாணம் பண்ணினது அவசரமான முட்டாள்தனம்.

''வெறுமே உங்க சமையல்காரியாய் வர்றேன்னு சொல்லியிருக்கணும். தம்பியின் படிப்புக்காகப் பத்து இருபது

பேருக்குச் சமைச்சுப் போட்டிருக்கலாம். ஆனா எனக்குத் தாலி கட்டி, படுக்கையில் சுவைத்து, குழந்தை தரித்தது தெரிஞ்சதும் 'கருக் கலைப்பு செய்துக்கிறியா?'ன்னு கேட்டு... இப்படி மனிதத்தனமே இல்லாதவர்னு நினைக்கலியேம்மா..."

அஸ்வினியின் நெற்றியை மருத்துவர் மிருதுவாக நீவிவிட்டார்.

படுத்திருந்தவளின் புலம்பல்கள் குழறல்களாகி, பின் அடங்கின. மெல்லிய போர்வையினால் அவளைப் போர்த்திவிட்டு வெளியேறிய மருத்துவர், தன் செல்போனில் எண்களை அழுத்தினார்.

எடுத்த நபர் இந்த அழைப்பிற்காகவே காத்திருந்தார் போல்... "டாக்டர்?"

"அமரேசன்... இனி நீங்க வரலாம்..."

"அஸ்வினிக்கு...?"

"நல்ல தூக்கம்... ஆனால் நாம நிறைய பேச வேண்டியது இருக்கு."

"உடனே வர்றேன்..."

அரை மணி நேரத்தில் வந்தான். அவனது வாகனத்தில் ஏறி அமர்ந்தார், கிளாடிஸ்.

"என் அறையில் பழுதுபார்க்கும் வேலை நடந்திட்டிருக்கு அமர். ஒரே தூசி, இப்படி காரிலேயே உட்கார்ந்து பேசலாமா?"

பொலிவின்றிக் களைத்திருந்தவன், வெறுமனே தலை யாட்டினான்.

"கல்யாணத்தின்போது பூரிப்பான தம்பதிகளாய் இருந்தீங்களே அமர்... இப்படி மூணு மாசத்துல உருக்குலைய வேண்டிய அவசியம் என்ன?"



"எங்க அம்மா...!" என்றான் அவன் அழுத்தமாய்!" அவங்க மூலம் நான் கற்ற பாடம்..."

அவன் சொன்னதை ஆர்வமாய் கவனிக்கலானார், மருத்துவர்.

## 13

"டேய் அமரு... தள்ளி உட்காரேன்டா..."

"ஊகூம்... நான்... உங்கள் மடியிலதான் உட்காருவேன்..." என்றான், ஆறு வயதுச் சிறுவன்.

"அம்மாவுக்குக் கால் வலிக்குதேடா ராஜா..."

"உங்க காலுதான் மெத்து மெத்துன்னு சுகமா இருக்குது..."

அப்பா குறுக்கிட்டுச் சிடுசிடுப்பார்.

"ஆமடா... உங்கம்மா பூ மாதிரி அவ மடியிலே நானே முழுக்கச் சாஞ்சதில்லை. நீ விழுந்து அமுக்காதே..."

"உஷ்... என்னங்க... பொடிப்பயல்கிட்ட கண்டபடி பேசுறீங்க..."

"அப்புறம் அவன் இப்படி குதிச்சா உன் தொடை கன்னி போயிடுமே சௌந்தரி!" என்றபடி அப்பா, குட்டி அமரைத் தன் மடிக்கு மாற்றிக் கொள்வார்.

"இருடா... நீ அப்பா மடியிலேயே இருந்தா உனக்குக் கதை சொல்ல வேணாம்..."



"வேணாம்... இங்கேயே இருக்கேன்... ஆனா அம்மாதான் கதை சொல்லணும். அவங்க பேச்சுதான் பாட்டு மாதிரி இருக்கும்."

"ஏன்டா உங்கம்மாவைப் பாடாய்ப்படுத்துறே..." அப்பா சலிப்பார்.

"ஏன், பிள்ளைக்குச் சொன்னா எங்குரல் காய்ப்பு கண்டிருமா?"

இது அம்மாவின் சரச கேலி!

"உனக்குச் சிரமமில்லைன்னா சொல்லு சௌந்தரி. நானும் உன் சங்கீதக் குரலைக் கேட்கிறேன்..." கொஞ்சுவார், கெஞ்சுவார்.

தரையில் விரித்த, அகன்ற இலவம்பஞ்சு மெத்தை.

அதை மேலும் மென்மையாக்க பட்டு விரிப்பு, பட்டுத் தலையணைகள். விடிவிளக்கின் ரகசிய நீலவெளிச்சம்.

இத்தனை ரம்மியமான சூழலில் தினமும் ராத்திரி, பெற்றோரின் நடுவே படுத்துத் தூங்கிப் போவான், அமர். ஆனால் விடியும்போது மெத்தையின் ஓரமாய்க் கிடப்பான்.

"எப்படிம்மா நான் ஓரமாய்ப் போனேன்?" என்று உதடு பிதுக்குபவனை, "உருண்டுதான்டா" என்று சிரித்துச் சமாதானப்படுத்துவாள், தாய்.

ஆனால், அப்பா செல்லமாய் அதட்டுவார் - "டேய் அமரு... உங்க அக்காக்களுக்குப் பிறகு 15 ஆண்டு கழிச்சு கிடைச்ச சிங்கக்குட்டி நீ... எப்படி ஓரத்துக்குப் போனேன்னு எல்லாம் நீ விசாரணை வச்சீன்னா வேறு அறைக்கு துரத்தி விட்டுருவேன் படவா...!"



அது தமிழ்நாடு - கேரள எல்லையில் உள்ள அழகிய கிராமம். அங்கிருந்த நாலு கட்டு விசால வீட்டின் குடும்பமும் பெரியதுதான்.

வீட்டை ஒட்டியே 'சிலுசிலு'வென்று ஓடை. அதனை கரை முழுக்க பலாவும், தென்னையும் பசும் கிளை பரப்பி நிற்கும். அவற்றின் வேர்கள் சதா ஓடைநீரை உறிஞ்சுவதால் புஷ்டியான கனிகள். பறித்துக் கடித்ததும் சாறு ஒழுகும்.

நான்கு சகோதரர்கள் உள்ள குடும்பத்தில் அப்பா பாண்டியன்தான் கடைசிப் பிள்ளை என்பதால் அவராகவே எடுத்துக் கொண்ட சலுகைகள் அதிகம். அதில் முக்கியமானது குடும்பத்தின் முக்கிய தொழிலான முந்திரிப் பருப்பு ஏற்றுமதியில் அதிக அக்கறை ஏதும் எடுத்துக்கொள்ளாதது!

ஷோக்காய் உடுத்தி, நேரா நேரத்திற்கு உண்டு, மகிழ்ந்து, சகாக்களுடன் ஜமாவாய் ஊர் சுற்றியவரை மூன்று அண்ணன்களும் அதிகம் கண்டுகொள்ளவில்லை.

காரணம் நான்கு பேருக்கான வேலை அங்கில்லை. தவிர, 'இவனுக்கென்ன தெரியும் சிறு பயல்' என்ற எண்ணம் வேறு. ஆனால் சிறு பயலுக்கு மிகச் சுந்தரவதியான சௌந்திரவல்லி மனைவியாக வாய்த்தபோது அவர்களே, 'பய அதிர்ஷ்டக்காரன்தான்' என்று துளி பொறாமையுடன் தலையாட்டிக் கொண்டார்கள்.

அவர்களது மனைவிகள், பார்க்கச் சுமார் ரகம்தான். காரணப் பெயராகத்தான் வைக்க வேண்டுமெனில் மூன்று பேருக்குமே 'சுமாரவல்லி' என்ற பெயரே அமையும்!

கொடி போன்ற பால் பளிங்கு மேனியும், இடுப்பைத் தாண்டி விரியும் நெளியான கூந்தலும், இப்படி திருத்தமாக ஒரு முகம்

அமையுமா என்ற பிரமிப்பை ஏற்படுத்தும் முகலட்சணமுமாய் கடைசி மருமகள் வந்ததும் வீட்டின் மதிப்பே சற்று கூடியது.

வந்தவர்கள் எல்லாரும் - 'அப்சரஸ்தான்... சின்ன மருமக' என்று சிலாகிக்க, புது மாப்பிள்ளையான பாண்டியனுக்கு - அதாவது அமரேசனின் தந்தைக்குப் பெருமை தாளவில்லை. அதுவரை படிப்பிலோ தொழிலிலோ எதையும் சாதிக்காத அவர், தன் இளம் மனைவியின் பேரழகைத் தன் சாதனையாகக் கருதிக் கொண்டார்!

அவளது தோற்றம் மேலும் பொலிவு பெறும்படி உடைகள் நகைகளைத் தேர்ந்தெடுத்தார். சௌந்திரவல்லி அம்மணிக் கென்று நெருங்கத் தொடுத்த மலர் சரம் தினம் தருவிக்கப் பட்டது. மணம் மிக்க தைலங்கள் காய்ச்சப்பட்டன.

கருநாகமாகத் தழைந்த கூந்தலைக் கோத, தந்தச் சீப்பு செய்யப்பட்டது. தங்கக் கொலுசுகள் அப்பகுதியில் பயன்படுத்தப்படும் என்றாலும் மாணிக்கக் கற்கள் பதித்த மணிக்கொலுசு, யாரும் கண்டு... ஏன், கேட்டும் கூட அறியாதது.

நகங்களில் தக்காளிச் சிவப்பில் சாயம் தடவி, மாணிக்கக் கற்கள் ஒளிவீசும் கொலுசுகளோடு அந்தத் தாமரைப் பூப்பாதங்கள் தரையில் பட்டாய்ப்பட்டு எழும்புவதைப் பார்ப்பவர்கள் லேசில் கண்களை அகற்ற முடியாது.

எங்கும் சௌந்திரவல்லி முன்னிறுத்தப்பட்டாள். தலையில் சூடும் பூவிலிருந்து பாதங்களின் அம்சம் வரை சர்வ அலங்காரியான அவளைக் காண்பதே பலருக்கு அதிர்ஷ்ட கடாட்சமாகத் தோன்றியது.



இதை எல்லாம் தொடக்கத்தில் நாடகம் போன்று சற்று சுவாரசியமாகவே ரசித்த அண்ணன்மாரின் பொறுமை போய்விட்டது. அது சீக்கிரம் போக, முக்கியமான காரணம் அவர்களின் மனைவிமாரே!

''சரி, வேலை செய்ய வேணாம்! - உங்களைப் போல ஊர் ஊராய் ஓடி, பாதம் தேய வேணாம்... கொழுந்தன், வீட்டுக் கணக்கு வழக்கைக்கூட பார்க்கிறதில்லையே...?''

''நூத்தில் ஒரு பங்குக்கூட வேலை செய்யாதவருக்கு செலவு மட்டும் நம்மைவிட நூறு பங்கு ஆகுது!''

''அவருக்கு மட்டும் அதிக செலவு? ஜவ்வாதும் பட்டுவேட்டியும் எதுக்கு? இப்ப வீட்டுக்கு வந்தவ காலிலே மாணிக்கம் போடாட்டி என்ன? அடுத்து வைரத்திலே 'மிஞ்சி' செய்யப் போறாராம். இதெல்லாம் தெண்டமில்லையா?''

''எது பட்டாலும் படலாம்... ஆனா கண்ணடி படக்கூடாது. இப்ப ஊர் கண் முழுக்க நம்ம வீட்டு மேலேதான்.''

அண்ணிகள் பேச்சில் நியாயம் இல்லாமலும் இல்லை.

முதலில் பேச்சாகத் தொடங்கியது. பின் பொறுமலானது. அண்ணன்மாரையும் அது பாதிக்காமல் இல்லை. அதே நேரம் ஏற்றுமதியில் ஒரு பெரிய நட்டம் வர -

''இத்தனை ஆண்டாய் நலுங்காமல் நடந்த வியாபாரம் இப்படித் தடுமாறுது... இவ ராசிதான்...''

''ராசியாவது தோஷமாவது... வியாபாரத்தில் இதெல்லாம் சகஜம்...'' வீட்டுப் பெரியவர் பேச்சை அடக்க முயன்றார். ஆனால் பெரியவர் கையில் வியாபாரம் இல்லை. பிள்ளைகளின் கையில்தான்... ஆக பெரியவர் சொல் யார் காதிலும் ஏறவில்லை.



அண்ணன்மார், தம்பியைக் கூப்பிட்டுக் கடிந்தார்கள். ''இதோ பார் பாண்டியா... கொஞ்சம் அடக்கி வாசி. ஜோடியாய் சிங்காரிச்சுட்டு ஊர் முழுக்கத் திரியாதே. எல்லார் கண்ணும் ஒரே போல இராது. அங்கே விழுற எரிச்சல்தான் நம்ப தொழிலைப் பாதிக்குதோ என்னவோ?''

தம்பியோ தன் ஒரே 'சாதனை'யான சௌந்திரவல்லியை விட்டுத் தருவதாயில்லை. அவருக்குக் கிடைத்த வண்ணக் கொடி அவள்!

ஆக, அதைத் தூக்கிப் பிடிக்கவே விரும்பினார்.

''இதெல்லாம் என்ன மூடநம்பிக்கை? சௌந்திரா நாலு இடத்துக்கு அம்சமாய் போய் வர்றது நம்ம குடும்பத்திற்குத் தானே பெருமை...?''

''ச்சே... அந்த மாதிரி பெருமையெல்லாம் நமக்கு வேண்டாம். பொம்பளையை உடுத்தி, உலாவ விட்டுப் பெருமை சேர்க்கிறானாம் முட்டாள்.''

''அண்ணா, கவனமாப் பேசுங்க... யாரைப் பற்றி என்ன பேசறீங்க?''

''பின்ன என்னடா? நாலு காசு சம்பாதிக்கத் துப்பில்லை... பெண்டாட்டி காலைச் சுத்திட்டு கிடக்கிறே...''

இந்த விவகாரம் பெரிதாவதற்குள் சௌந்திரத்தின் வயிறு பெரிதாகியது... பிறந்தகத்திலும் செல்வ மிதப்பிலேயே வளர்ந்த அவளுக்குப் பூஞ்சை தேகம். உடலுழைப்பையே அறியாத பூமேனி ஆக, கர்ப்ப காலத்தைப் பெரும்பாலும் சேர்ந்து படுத்தே கழித்தாள். உடுத்தவோ, உலா வரவோ அவளுக்கு மனமில்லை; தெம்பில்லை.



அடுத்தடுத்து அவளுக்குப் பிறந்தது இரண்டுமே பெண் குழந்தைகள். அம்மாவின் அழகைக் கொண்டு இல்லாமல் அப்பா சாயலில் அவர்கள் பிறந்ததில் பாண்டியனின் குடும்ப நிம்மதிப் பெருமூச்சு விட்டது!

அதற்கப்புறம் சௌந்திரவல்லிக்குத் தன் பெண்களை அலங்கரித்து அழகு பார்ப்பதிலேயே நேரம் சரியாய்ப் போனது!

ஆனால் பாண்டியனின் நோக்கமெல்லாம் மனைவியின் மீதுதான்.

''ம்ப்ச்... பாதியாவது உன்னைக் கொண்டிருக்கலாம் இதுங்க...''

''இப்ப என்ன உங்களோட கூர்மூக்கு - முழியோடு அம்சமாய்த்தானே இருக்குதுங்க... பருவ வயசிலே அழகு ரெட்டிப்பாகும்... அப்பப் பாருங்க...'' என்றபடி மகள்களை முத்தமிடுவாள்.

வியாபாரம் மறுபடி நிமிர, அது தன் மகள்களின் பிறப்பால் தான் என்று கூறி மகிழ்ந்தாள்.

ஆனால், மற்ற மூன்று குடும்பங்களுக்கும் இவர்களுக்கும் நடுவே கண்ணுக்குத் தெரியாத சுவர் ஒன்று எழும்பிவிட்டது.

அதுவே மூத்த மூன்று அண்ணன்மாரின் குடும்பத்தின் இடையில் ஒரு நெருக்கத்தையும் ஏற்படுத்தித் தந்தது. பெரியவரின் மரணத்திற்குப் பிறகு பிரித்த பணத்தில் பாண்டியன் தனக்கென்று வீட்டை எழுப்பிக் கொண்டார். தனியாய்ப் போய்விட்டதால் பெரியப்பாவின் பிள்ளை களோடு அதிகம் பழகவும் வாய்ப்பில்லை... பழக்கம் சொற்பமாகி பிரிவு அதிகப் பட்டது!

சொன்னது போலவே சௌந்திரத்தின் பாச கவனிப்பில், அலங்கரித்த நேர்த்தியில் பெண்கள் இருவரும் மொட்டவிழ்ந்து அழகு மலர்களானார்கள்.

''என் வீட்டைச் சதா தேவதைங்க சுற்றி வரும்'' என்று பீற்றிக் கொள்வார், பாண்டியன்!

விரைவிலேயே வசதியான இடங்களிலிருந்து பெண் கேட்டு வர, வீட்டில் கல்யாணப் பேச்சு எழுந்தபோது, சௌந்திரம் மூன்றாம் முறையாய்க் கர்ப்பம் தரித்தாள்! அவளுக்கு அது வெட்கம், கூச்சம் தர, பாண்டியனின் நெஞ்சோ மேலும் நிமிர்ந்தது!

அதுவும் பிறந்தது. ஆண் வாரிசாகவே வானுக்கே தவ்விக் குதித்தார். மிகமிக ஆர்ப்பாட்டமாய் மகள்களின் கல்யாணத்தையும் நடத்தினார்.

ஆனால், ''எங்க கடமை முடிந்தது தம்பி. இதற்கு மேல் பொதுப் பணத்திலிருந்து உனக்குக் காசு பெயராது...'' என்று அண்ணன்மார் ஒதுங்கிவிட, இவளுக்கு வழக்கம் போல கையில் காசு புரளவில்லை.

''பெண்களின் கல்யாணக் கடமையில் நமக்கும் பங்கு உண்டு. ஆக செய்தோம்... இனியாவது கொழுந்தனுக்குப் பொறுப்பு வரட்டும்... தன் மகனுக்காய் ஏதேனும் சேர்த்து வைக்கட்டும்'' என்றனர் அண்ணிகளும்.

அவர்களுக்குப் பிள்ளைகளும் அவர்களுக்கான கடமைகளும் இருந்தனவே!

மாதம் மாதம் வரும் பணம் நின்றுவிட, பாண்டியன் தடுமாறினார்.



தோட்டத்திலிருந்து வந்த வருமானம் 'தாம்தூம்' பண்ணப் போதாதே.

''என்ன தொழில் தொடங்கலாம்?'' என்று சில வேண்டாத நபர்களுடன் உட்கார்ந்து ஆலோசித்தபோது ஒட்டிய நோய்தான் அது... சூதாட்டம்!

எல்லாப் பொல்லாப் பழக்கங்களையும் போல், தொடக் கத்தில் அது இனித்தது. கையில் காசையும் புழங்கவிட்டது.

ஆனால், விரைவிலேயே அவரது 'மடி'யைப் பிடித்துத் திருகி, வீட்டை அடமானம் வைக்குமளவு இழுத்துப் போனது... ஆனால் அடுத்ததாக, ''உங்கிட்ட வேற என்னப்பா இருக்குது? அழகான பெண்டாட்டியைத் தவிர... இன்னும் கண்ணுக்குக் குளிர்ச்சியாய்த்தான் இருக்கா... அவளை...?''

சக சூதாடிகள் கேவலமான பேரத்தில் இறங்கவும், தான் குழி நெருப்பில் கிடப்பது பாண்டியனுக்கு உறைத்தது.

ஏறித் தப்பவும் வழியில்லை.

வேக்காட்டின் தீவிரத்தையும் தாள முடியவில்லை.

அதிர்ச்சியில் மூன்று நாள் படுத்து அனற்றியவர், நான்காம் நாளே 'ஆமரர்' ஆகி, பிரச்சினையிலிருந்து தப்பிக் கொண்டார்.

பிறகுதான் சௌந்திரத்திற்குக் கேடுகாலம் தொடங்கியது. கடனில் மூழ்கியிருந்த வீட்டை விற்று, கடனைத் தீர்க்க வேண்டிய கட்டாய நிலை. ஆக, இருக்க வீடில்லை.

அவள் பெற்றோர் இறந்து, பிறந்து வீட்டில் அண்ணன்மார் சொத்துத் தகராறில் ஒருவருக்கொருவர் முறுக்கிக் கொண்டு இருந்ததில் தங்கையை யாரும் பொருட்படுத்தவோ பொறுப்பேற்கவோ இல்லை.





கணவனின் அண்ணன்கள் அக்கறையாகவே வந்து அழைத்தார்கள். ''இது நீ வாக்கப்பட்டு வந்த இடம். கவனிக்கக் கடமைப்பட்டவங்க நாங்க இருக்கோம், வாம்மா வீட்டுக்கு'' என்று.

ஆனால் சம்பந்தக்காரரின் ஏற்றின புருவங்களைக் கண்டு அண்ணிகள் அஞ்சினார்கள்.

''என்ன சௌந்திரம் சாப்பிட்டியா?'' என்று அண்ணன்கள் விசாரித்தாலுமே, ''இதோ பாருங்க... சாப்பிட்டியா தூங்கினியான்னெல்லாம் வழியாதீங்க... பேரன், பேத்தி எடுத்தாச்சு நீங்க...''

''என்ன அத்தான்... அக்காவை அப்படிப் பார்க்கிறீங்க...? அறுத்து வந்தவளுக்கு ஆதரவாய் பேசுறீங்க... நம் சம்பந்தக்கார ஆம்பிளைங்க எல்லாத்தையும் விகல்பமாயில்ல பார்க்கிறாங்க?''

ஆக, சௌந்திரவல்லி, பின் கட்டிற்குத் தள்ளப்பட்டாள்.

''ஏதேனும் வேலை செய்தபடி இரும்மா. சும்மா இருந்தால் மனசு, தறிகெட்டுப் பாயுமில்லை?'' என்றார்கள்.

தேவதையாட்டம் வந்த மருமகள், வேலைக்காரியாக மாறிப் போனாள். தீக்கங்குகளாய் ஒளிர்ந்த, மணி கொலுசு ஒலிக்க, பொற்சிலையாய் வீட்டில் உலவியவள், கொல்லையில் பாத்திரங்களைப் பளபளக்கச் செய்தபடி அவற்றின் நடுவே மங்கினாள்.

தோட்டத்திற்கு நீர் பாய்ச்ச, களை பிடுங்க என்று தன்னை ஒதுக்கியவளோடு உடம்பு ஒத்துழைக்க மறுத்தது.

பிறந்ததிலிருந்தே பவுசாய் வளர்ந்தவளின் கைகள் பொய்த்து ரணமாகின.



''டேய் உங்கம்மா விரல்களைப் பார்த்தியா? பிஞ்சு வெண்டையாட்டம்... கடிச்சுடலாம் போல'' என்று அப்பா பூரிப்பும் பரிகசிப்புமாய் போற்றிய விரல்கள், காய்ந்து தடிப்பேறி இருந்தன.

அவற்றைத் தடவி அழுவான், அமரேசன்.

இருவருக்குள்ளே ஒரே நினைவலைகள் போலும்.

சௌந்திரம் சொல்லுவாள்: ''முள்ளங்கி போல விரல் இருக்கிறதுதான் நல்லது அமரா... பார்வைக்கு ஆகிறதைவிட வேலைக்கு ஆகிறதுதானே உசத்தி... என்று!

அமரேசன் வீட்டிலிருந்த நேரமெல்லாம் அம்மாவுடனேயே இருந்து உதவினான். என்னதான் ஆண் பிள்ளை ஆனாலும் சாண் பிள்ளைதானே?

அம்மா, 'முதுகு வலிக்குதேடா' என்று தாள முடியாமல் அழும்போது தைலம் நீவிவிடுவானே தவிர மருத்துவம் பார்க்க வேண்டும் என்று தோன்றாத வயது.

கடைசியாய் உறவினரிடம் சொல்லி அம்மா மருத்துவரிடம் போனபோது காசநோய் முற்றிய நிலை என்று அனுதாபப்பட்டார், வைத்தியர்.

விரைவில் அம்மாவையும் இழந்து அனாதை ஆனான், அமர்.

அம்மா இறந்ததுகூட அவனுக்குப் பெரும் துக்கமாயில்லை. அம்மா மேலும் உடம்பு ரணப்படாமல் தப்பினாளே என்று நிம்மதிதான். ஆனால், கஷ்டங்கள் விரைவில் மறக்கவில்லை. அந்நிலைக்கு தன் தாயைத் தாழ்த்திய தந்தை மீது தாளாத ஆத்திரம்... வன்மம், ஷோக்கு பேர்வழியாய் இருந்து தங்களின் வாழ்வை நரகமாக்கிய தந்தையின் மீது வெறுப்பு.

தன் மனைவி மீது உண்மை அன்பு இருந்திருந்தால் அவள் தனக்குப் பின்னாலும் ராணியாக வாழுமளவு செய்துவிட்டுப் போயிருக்க வேண்டும். தனியேயும் குடும்பக் காரியங்களைச் சமாளிக்குமளவு கற்றுத் தந்திருக்க வேண்டும். உடலுழைப்பும் மன உறுதியும் ஓரளவேனும் பழக்கி இருப்பது அவசியம். அதை விட்டுவிட்டு, வேண்டாத அலங்கார, உபசாரங்கள் செய்து மனைவியை அப்பிராணியாய், பூஞ்சையாய் விட்டுப் போனவர் மீது கோபம்... இகழ்ச்சி!

அம்மாவின் பத்திரப்பட்ட நகைகள் சில, முக்கியமாக அந்த மாணிக்க மணிக் கொலுசு விற்ற பணம்தான் மகனை நிமிர்த்தியது. அவனது உழைப்பிற்குத் துணை நின்றது.

அத்தனையும் சொல்லி முடித்தவனின் கண்கள் சிவந்து கலங்கி இருந்தன.

## 14

"ஆக உங்கள் மனைவியை நீங்க எந்தச் சூழலையும் சமாளிக்கும்படி பழக்க நினைச்சீங்க?"

இரு கைகளாலும் தன் தலைமுடியை அழுந்தக் கோதியவன், தலையாட்டினான்.

"ஆனால், பயிற்சி, கடுமையாயிடுச்சு அமரேசன். செடிக்கு அதிக நீர் விட்டால் அது அழுகுவது போல, நீரே விடாவிட்டால் கருகி வெந்திடுமே?"



பரிதாபமாய் ஏறிட்டான். "அஸ்வினி எப்படி இருக்கா?"

"அவளுக்கு இதையெல்லாம் ஏன் சொல்லலை?"

"என் சோகத்தை அவ மேல் அழுத்த வேண்டாம்னு நினைச்சேன். தவிர என்னை ஈர்த்ததே அஸ்வினியின் துணிச்சலும் தெளிவான பேச்சும்தான்."

"அப்படி ஒண்ணும் அதிகம் பேசிப் பொழியமாட்டாளே?" சந்தேகமாய் புருவங்களை நெரித்தார், மருத்துவர்.

"அவளுடைய தம்பி அசோக் அடிபட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டபோது, நானும் அங்கே இருந்தேன். என் பண்ணை வேலையாள் ஒருத்தன் மரத்திலிருந்து விழுந்து எலும்பு முறிந்திருந்தது."

"ம்..."

"அவசரத்திற்காக அந்த ஆஸ்பத்திரியில சேர்ந்தேன்... ஆனா 'பில்' எக்கச்சக்கமாச்சு. எடுத்துச் சொன்னால் அந்த டாக்டர் பரந்தாமன் கேட்பதாயில்லை.

"உயிர் முக்கியமா இல்ல பணமா'ன்னு என் வாயை அடைச்சுட்டார்.

ஆனால், அந்தப் பருப்பெல்லாம் அஸ்வினிகிட்ட வேகலை. தெளிவாய்ப் பேசி. தன் தம்பியை அரசு மருத்துவமனைக்கு மாற்றிட்டா. டாக்டரோடு அவ பேசியதை நான் கேட்க நேர்ந்தது. நம்மால் முடியாததை அநாயாசமாய்ச் செய்துட்டாளே இந்தப் பொண்ணுங்கிற ஒரு பிரமிப்பு. பிறகும் அவளது செயல்முறை, நடவடிக்கைகளைக் கவனிச்சேன். அவளிடம் கண்ணியம் கலந்த கண்டிப்பு தெரிந்தது. எனக்குள் முதன் முறையாக முப்பது வயசில் கல்யாணம் பற்றிய எண்ணத்தை விதைத்தவளே அஸ்வினிதான்."



"ஏன்னா அவ உங்க அம்மாவைவிட வித்தியாசமானவள்... உம்...?"

"இன்னும் கொஞ்சம் தேய்த்தால் மேலும் அவளுடைய தன்னம்பிக்கையின் மெருகு கூடும்னு நினைச்சேன்..."

"அன்பால் தேய்த்திருக்கணும் அமர். தன் தம்பியின் விபத்து நேரத்தில் அவளை அப்படிச் செயல்பட முடுக்கியது. அவன் மீது அவளுக்கிருந்த அன்பு. கடன்படாமல் தன் தன்மானத்தை இழக்காம்ல குடும்பத்தைப் பாதுகாக்கணும் என்ற கரிசனை. பெண்களுக்கு இதற்கென்று தனியே பயிற்சி எல்லாம் அவசியமில்லைப்பா. தவிர அவள் வேலை பார்த்தவள். உலகம் புரியாதவள் இல்லையே? தாய் இருந்தபோதும் அந்தக் குடும்பத்தை அஸ்வினிதானே பொறுப்பாய் நடத்தினாள்.

மேஜையை வெறித்தபடி தலை ஆட்டினான். "ம்... ஆனா இப்ப உங்களுக்கு என் கோணமும் புரியுதில்லையா? ஒரு வேளை நான் இறந்துட்டால் அஸ்வினிக்குப் பண்ணையைத் திறமையாய் நிர்வகிக்கத் தெரியணும். அவ யார் தயவையும் எதிர்பாராமல் கையேந்தாமல் இருக்கணும். அதற்கு இப்படித்தான் என் காதலை வெளிப்படுத்தணும்... அதுதான் நேர்மையான காதல்னு நான் நினைக்கிறேன். அவ பின்நாளில் சிரமப்பட்டுடக் கூடாது" ஆவேசமாய் அழுந்தச் சொன்னான்.

"நல்ல எண்ணம், ஆரோக்கியமான சிந்தனை. இதையெல்லாம் அவகிட்ட பகிர்ந்து, இப்படியான என் எதிர்பார்ப்பிற்கு நீ ஈடுகொடுத்தால் மகிழ்வேன்னு சொல்லி இருக்கலாமே. அன்பினால் சாதிக்க முடியாததா?"

அவசரமாய்த் தலையாட்டி மறுத்தான். "அன்பு, பாராட்டு எல்லாம் பலகீனப்படுத்துகிறதுதானே டாக்டர்? அம்மா மேல்



அப்பா வைச்ச அதீத பாசத்தால், அம்மாவையே பூஜித்ததால் அவரால் வேறெதுவுமே சாதிக்க முடியலை. இப்படி பொத்திப் பாதுகாக்கப்பட்ட அம்மாவாலும் தனிச்சு வாழ முடியலை. சாதாரண வேலைகூட அசாதாரண அலுப்பாயிடுச்சு... பழகாத இடுப்பை முறிச்சு... மனசையும் வாட வைச்சிடுச்சு..."

"ஓ... அதனால்தான் நீங்க அஸ்வினியைப் பாராட்டினதே இல்லையா? அவளைத் தொட்டபோதும்கூட கனிவாய்ப் பேசியதில்லை... தப்பு அமர். சமீபத்தில் ஒரு மேல்நாட்டுப் பத்திரிகையில் நான் வாசிச்ச உண்மைச் சம்பவம் இது -

தளர்ந்த மூதாட்டியும் அவளது மகனும் காரில் போக, ஏதோ ஒரு விபத்து மகன், காரின் கீழே சக்கரத்தின் கீழே சிக்கிகிட்டான். அந்தப் பதைப்பில் அந்தம்மா காரின் முன்புறத்தைப் பற்றி அப்படியே காரைத் தூக்கிவிட்டாளாம்... அது அன்பு தரும் சக்தி. இது இல்லாமல் என்ன?"

"எனக்கு என் அஸ்வினி மகிழ்ச்சியாய் இருக்கணும். அவ விம்மி, விக்கி அழுததைப் பார்த்த நான் துடிச்சுட்டேன்."

"உங்க அக்காமார், அவங்க குடும்பத்தார் யாரும் உதவலையா? அதாவது உங்க அம்மா நோயால் கஷ்டப்பட்டபோது?"

"உதவின்னாலே காசுதான். பக்கத்தில் போனால் நம்ம பணத்துக்குக் கேடுங்கிற எண்ணத்தில் யாரும் எங்களை அண்டலை... அதான் அக்காமாரை இப்ப நான் அண்டவில்லை."

பரிவுடன் அவன் கையைத் தட்டினார், மருத்துவர். தன் அக்காவின் வயதை ஒத்த அம்மருத்துவரை ஆயாசத்துடன் பார்த்தான், அமர்.

அத்தனை நாளாய் உள்ளே குடைந்த வேதனையை எல்லாம் சொல்லிக் கொட்டிவிட்ட ஆயாசம்!

''நம் நாட்டில் பெண்களுக்குத் திருமணம் ஒரு கண்டம் போல அமர். செல்லமாய் வளர்ந்த சிறு பெண்கள் புகுந்த வீட்டிற்குப் போய்ப் பழகி ஓரளவு தெளியவே சில ஆண்டுகளாகும். அதற்குள் ரெண்டு, மூணு பிள்ளைகள் பிறந்து அவர்களோடு நாட்கள் பறந்திடும்.''

சற்று புரிந்தது போல அமைதியானான். பார்வை சாந்தப் பட்டிருந்தது.

''தவிர, தாய் வீட்டின் ஆதரவு இல்லாமல் புகுந்த வீட்டில் சமாளிப்பது பெரிய வித்தை! அப்படி அவங்க சமாளித்து உங்க அம்மாவிற்கு உபத்திரவம் தராமல் நிம்மதியுடன் போகவிட்டதே பெரிய உதவிதான்.''

இருக்கலாம் என்பதுபோல தோளை உயர்த்தினான்.

''உதவும் நிலையில் அவங்க அன்று இல்லை. இப்ப பிள்ளைகள் தலையெடுத்து, மாமன், மாமி தளர்ந்து இவங்க கையிலும் நாலு காசு புழங்கும் வேளை. அதான் அஸ்வினிக்குப் பரிசுகளோடு வந்தாங்க. அது பாசத்தை உயிர்ப்பிக்க அவங்க எடுத்த முயற்சி.''

''அமர்... குற்றம் பார்த்தால சுற்றம் இல்லையே...''

''ம்... அஸ்வினியின் தம்பியை நான் படிக்க வைத்ததிலும் சுயநலம் உண்டு. எனக்கு ஏதேனும் ஆயிட்டாக்கூட தன்னைப் படிக்க வைத்த நன்றிக்காய் அக்காவைக் கவனிச்சுக்குவான், உதவுவான்கிற எண்ணம்! மனித சகாயமும் அப்பப்ப தேவைப்படுமே...''



''உங்களுக்கு ஏதேனும் நோய் இருக்கா அமர்?''

அதட்டலாய்க் கேட்ட மருத்துவரைத் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தவன், மறுவிநாடி புரிந்து சற்றே புன்னகைத்தான்.

''இல்லைதான்... ஆனா வாழ்வு அநித்தியமானது...''

''உங்க சிந்தனை ரொம்ப ஆரோக்கிய நிலையில் இருக்குன்னு சொல்றதுக்கில்லை.''

''உண்மைதான். சரியாய்த்தான் கணிச்சி இருக்கீங்க. ஆனால், எட்டு வயசிலிருந்து தாயின் கண்ணீர், துன்பத்தைப் பார்த்ததால் என் பார்வையும் சற்று கோணலாகிடுச்சு போல.''

''அதை நேராக்கிடுறது நல்லது இல்லையா?''

''முதல்ல அஸ்வினி பற்றிச் சொல்லுங்க. அவ எப்படி இருக்கா? கருக்கலைப்பு பண்ணவா உங்ககிட்டே வந்தாள்?''

மறுபடி அவன் கையைத் தட்டிக் கொடுத்தார், கிளாடிஸ். ''மனைவி கர்ப்பம்னு தெரிஞ்ச கணவன், தான் தகப்பனாகும் பூரிப்பு, கர்வத்தில் இருப்பான். ஆனா, உங்களுக்கு கருக்கலைப்பு பற்றிய எண்ணம் ஏன் வந்தது?''

''அவ... அவதான் உங்களிடம் வரப்போறதாய் சொன்னா... பிரசவ வேளையில் டாக்டர் தேவை... ஆனால், கர்ப்பம் தெரிஞ்சதுமே உங்களிடம் வர்றதுன்னா அதுதான் காரணம்னு யூகிச்சுக் கேட்டேன்'' தீவிரமாய் விளக்கினான்.

''உங்களுக்குப் பெண்கள் பற்றி அடிப்படை ஞானமே இல்லைங்கிறதுக்கு இந்த ஒரு சோற்றின் பதமே போதும்... நீங்க உண்மையைத் தெரிஞ்சுக்கணும் அமர். பெண்களுக்கு மாத விலக்கின்போதும் கர்ப்ப காலத்திலும் உடலினுள் பல



மாற்றங்கள் நேரும். அதெல்லாம் ஆர்மோன்களின் வேலை விலக்கிற்கு முன் (பி.எம்.டி.) ஏற்படும் மன உளைச்சல் பற்றி இரண்டு சதவிகித ஆண்களுக்குக் கூடத் தெரியாது. நான் சொல்றது படிச்சவங்களைப் பற்றித்தான்.

அமெரிக்காவில் ஒரு கொலைகூட இதன் அடிப்படையில் இப்ப மன்னிக்கப்பட்டது தெரியுமா? ஆர்மோனின் குழறுபடியான பி.எம்.டி. நேரத்தில் அவளை மீறி நேர்ந்துவிட்ட வெறிச்செயல் என்று அந்தப் பெண்ணிற்குத் தண்டனை குறைக்கப்பட்டதாம்.''

''அஸ்வினிகூட ஏதேதோ கத்தினா... கைக்குக் கிடைச்ச பாத்திரத்தை எடுத்து வீசினா... அமைதியும் அழுத்தமுமான அஸ்வியை அப்படியொரு காலத்தில் பார்த்தது...'' அவன் அதிர்ச்சி, அவனது பார்வையிலேயே தெரிந்தது.

''அழுகை, கூச்சல் எல்லாம் உங்க அம்மாவைப் பார்த்ததன்படி உங்களுக்கு பலவீனம் இல்லையா?''

''ம்... அஸ்வினி மயக்கம் போட்டுட்டா... படுக்க வச்சுட்டு உதவிக்கு ரகுமாயியைக் கூப்பிடப் போனேன். திரும்ப வந்தப்ப அஸ்வினி அங்க இல்லை... அவ சைக்கிளையும் காணலை... எங்கே போய்த் தேடுறதுன்னுகூட , தெரியாமல் திகைச்சுட்டேன்... டாக்டர்! என் வாழ்க்கையில் ரொம்ப பயந்த நிமிடங்கள் அவை...''

''உங்கம்மாவின் அழுகை, தன் கணவனின் அன்பு பறிபோன ஏமாற்றம்! அஸ்வினிக்கோ அன்பே கிடைக்காத ஏமாற்றம்...''

''அவளை மனசார நேசிச்சேனே...''



''அவளுக்கே தெரியாத தினுசில் இல்லையா காதலிச்சி இருக்கீங்க? கல்யாணத்திற்குப் பிறகு காதலிக்க இத்தனை அவதிப்பட்ட ஆளை இப்பத்தான் பார்க்கிறேன்'' பெருமூச்சுடன் சொன்னார்.

''அவதிதான்! என்னுள் பெருகின காதலை அவளுக்குக் காட்டாமல் இருக்கக் கஷ்டப்பட்டேன்... இவளைப் பார்த்ததுமே என்னில் ஏகப்பட்ட ஈர்ப்பு, ஏக்கம்... அதை அடக்கினேன். வழிந்து கிறங்கினேனானால் என் நாடகம் அரங்கேற முடியாதே...''

''அதாவது மனைவியை இரும்பாக்கணும்ங்கிற உங்க நாடகம்! உம்... உங்க அலட்சியப் போக்குதான் அதன் முதுகெலும்பு.''

''கதையே அதுதானே? ஆனா எங்க அத்தையும், அனுவும் வந்தபோது அஸ்வி என்னை விட்டுக் கொடுக்காமல், பிரியங்காட்டிப் பழகியதில் எனக்குள் ரொம்ப இளக்கம்! அவ மேல் மதிப்பும் கூடிடுச்சு... தவிர எங்களுக்கிடையே இயல்பான தாம்பத்தியம் இருந்திருந்தால் இப்படித்தான் இனிக்கும் என்ற குஷி... எல்லாம் சேர, அன்றிரவு...''

''உம்.. புரியுது. உடல் சேர்க்கை, பிரச்சினைகளுக்குத் தீர்வாகி இருக்க வேண்டியது. அந்தச் சந்தர்ப்பத்தையும் விட்டுட்டீங்க. பவித்திரமான அந்த உறவைக்கூட அவள் செய்ய வேண்டிய கடமையைப் போலாக்கி அவளை வெறுப்பின் எல்லைக்கே அனுப்பிட்டீங்க...''

''மன்னிக்கணும் டாக்டர். இப்ப அஸ்வினி...''

''இனி அந்தப் பழைய அஸ்வினி, உங்களுக்குக் கிடைக்கமாட்டா, அமர்.''

அவன் விக்கித்து விழித்தான்.

''சில நாட்கள் கழிச்சு அவளை உங்க பண்ணைக்கு அழைச்சிட்டு வர்றேன். அதாவது அவளிடம் பேசி அதற்கு முயற்சி பண்றேன்...''

''அப்படீன்னா... அவளைப் பார்க்கணுமே டாக்டர்... இதையெல்லாம் நான் சொன்னால் புரிஞ்சுக்குவா... எனக்கு அவளும், அவ வயிற்றில் வளரும் குட்டிக் குழந்தையும் வேணும்...''

''அவ மனநிலை பாதிக்கப்பட்டிருக்குதே... தேறட்டும்.''

''என் கவனிப்பில் தேறட்டுமே? முக்கியமாய் நான் மாறிடுறேன்.''

''இல்லை அமர்... நீங்க மாறவேண்டாம். அஸ்வினியின் மீதுள்ள காதலை நீங்க மறைக்காமல் இருந்தாலே போதும்.''

''நிச்சயமாய்... ஒரு தரம் அவளைப் பார்த்தாலும் போதும்... அனுமதி கொடுங்க டாக்டர்.''

தாயை நாள் முழுக்கக் காணாத குழந்தையாய் அவன் தவித்தது சகிக்காமல் அந்த அறையைச் சுட்டிக்காட்டி, போய்ப் பார்க்கச் சொன்னார், மருத்துவர்.

''நன்றி டாக்டர்... அவளை எழுப்பலை. 'பார்த்துட்டுப் பேசாமல் பக்கத்திலேயே இருக்கேன்.''

''சரி. காலையில உங்க ரெண்டு பேருக்கும் சாப்பிட ஏதேனும் அனுப்புறேன். காலையில குளிச்சு தயாராகி, அப்படியே கோயிலுக்கும் போயிட்டு வரலாம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யு'ங்க.''

கேட்க அவன் அங்கு இல்லை!



விழித்து எழுந்தவள், தன் கால்மாட்டில் தலை வைத்து உட்கார்ந்தபடியே உறங்கிய கணவனைக் கண்நிறையப் பார்த்தாள்... கலைந்த கேசத்துடன் ஒரு குழந்தையைப் போல அவன் இருந்தான்.

அவளது அசைவில் பதறி கண் திறந்தவனின் பார்வை, ஆர்வமாய் அவளைக் கவ்வியது. விழிகளாலேயே விடைகளை எல்லாம் பரஸ்பரம் தேடினார்கள். ஆனால், மருத்துவரின் ஆலோசனை நினைவிற்கு வர, முதலில் குளித்து, உடுத்திச் சாப்பிட்டபின் மனம் விட்டுப் பேசினான்.

இத்தனை காலமாய் உள்ளே கெட்டித்திருந்த கசப்பைத் திறந்து வழிய விட்ட பின் உடம்பும் மனமும் மகிழ்ச்சி சிறகு போலாயின! உள்ளே இப்போது காதலின் மணம் மட்டுமே கமகமவென!

''தெரியாமல் பண்ணின தப்பு அஸ்வி... மன்னிப்பியா?''

நீண்ட அவனது கைகளுக்குள் மறுபேச்சின்றி ஒண்டினாள்.

''என்னை முழுக்க... அதாவது என் கண்களைப் பார்த்திருந்தால் உனக்கு அப்பவே இதெல்லாம் நாடகம்தான்... இவன் சரியான காதல் சீக்காளிங்கறது புரிஞ்சிருக்கும்... நீயோ சதா மண்ணைப் பார்த்துக் கொண்டிருந்தாய்...'' நாடக பாணியில் முடித்தான்.

''இன்னும் சந்தேகங்கள் இருக்கே...''

''என் காதலைப் பற்றியா? நெஞ்சைக் கிழிச்சு...''

சிரிப்புடன் தடுத்தாள். ''வெட்டிப் பேச்செல்லாம் வேணாம். சம்பவ:ங்களைப் பற்றி நாம முதன் முதல் சந்திச்சது?''



''மருத்துவமனையில் டாக்டர் பரந்தாமனிடம் நீ பேசுறதைக் கேட்டேன்... அதெல்லாம்தான் சொல்லிட்டேன் கிளிப் பிள்ளையாட்டம்...''

''அதில்லை... ரோட்டில் கிடந்த குதிரை லாடம்?''

''போட்டது அடியேன்தான்... தேவியோடு பேசணும், பழகணுங்கிற ஆசையில் செய்த யுக்தி...''

''நீங்க அனுப்பிய நகைகளைப் போட்ட பிறகும் உங்க வாயிலிருந்து 'பொருத்தமா இருக்குது அஸ்வினி'ன்னு நல்ல வார்த்தை வராதான்னு ஏங்கினேன் தெரியுமா?'' குழந்தை போல் குற்றம் சாட்டினாள்.

''நெஞ்சடைச்சுப் போற அளவு பூரிச்சேனம்மா. ஆனால், அழகு பற்றிப் பாராட்டவே கூடாதுன்னு எனக்கு நானே கடிவாளம் போட்டிருந்தேனே... நீ உறங்குவதைக்கூட பார்த்துப் பார்த்து ரசிச்சவன் நான்...''

''அப்படிப்பட்டவர்தான் என்னை வெளியே கூட்டிட்டுப் போகாமல், வீட்டில் கோழிக்குழம்பு சமைக்கப் போட்டீங்களாக்கும்?''

''முதன் முறையாய் நாம ஜோடியாய்ப் போகணுமேங்கிற ஆசை அஸ்வி குட்டி... எல்லாரோடும் கூட்டமாய்ப் போறது பிடிக்கலை... நாம மட்டுமாய்... ஆனா அந்த ஆசை நிராசையாய்ப் போச்சு...'' அவளது விரல்களை ஆராய்ந்தபடி பெருமூச்செறிந்தான்.

''ஏன்?''

''இனி இந்தக் குட்டியும் போற இடமெல்லாம் கூடத்தானே வரும்'' அவன் கைகள் அவளது வயிற்றை வாஞ்சையாய்த் தடவின.



''சொன்னதுபோல உங்க கண்ணைப் பார்த்திருந்தால் இந்த கோல்மாலை எல்லாம் கண்டுபிடிச்சிருப்பேன்... ஆனால், என்னை அழவிட்டதுக்கு உங்களுக்குத் தண்டனை தரலாம்னு...''

''தா... தந்தால்தான் என் மனசாறும்'' சீண்டினான்.

''இனி நான் நின்றாலும் நடந்தாலும்கூட நீங்க என்னைப் புகழணும், பாராட்டணும்.''

''எண்ணெய் வழிய நின்றாலும் புகழ்ந்து தள்ளிடுறேன்!''

''முக்கியமாய் எதையும் என்னிடம் மறைக்கக் கூடாது...'' அவன் நெஞ்சைத் தொட்டாள். ''இங்கே இருக்கிறது நான்தானே? எங்கிட்டேருந்து ஏன் எதையும் மறைக்கணும்?''

''அதுக்குப் பார்வை ஒன்றே போதுமே... அத்தனையும் என் கண் வழியே நீ படிச்சுத் தெரிஞ்சிருக்கலாமே...''

''ஆனா மனம் விட்டு சொல்லணும்.''

''சரி என் கல்லே...''

''கல்லா? கண்ணேன்னு சொல்ல வந்து...''

''ஊகூம்... சரியாய்த்தான் சொன்னேன். கல், கல்... கூழாங்கல்லே! பாயும் நீரால் கல்லைத் தூளாக்க முடியாது. தன்னை மேலும் பளபளப்பாக்கிக் கொள்கிற கூழாங்கல் போல நீ... அத்தனை சோதனையிலும் வென்று இப்ப பளபளன்னு ஜொலிக்கிறே...''

''ஊகூம்...''

''அஸ்வி குட்டி'' என்றவன், அவளைக் கட்டி இறுக்கினான். ''இனி என்னைவிட்டு ஒரு நிமிடமும் நீ விலகவே கூடாது...''

''சரி...''

''இப்படி அழுந்தக் கட்டிப்பிடிச்சா நீ கல் மாதிரி இல்லை... பஞ்சு போல மிருதுவாய், சுகமாய்...''

''ம்... உங்களுக்கு நான் சொன்னது புரிஞ்சுடுச்சு... நல்லாத்தான் பாராட்டுறீங்க... மேலும் கொஞ்சம் சொல்லுங்க பார்ப்போம்'' உத்தரவிட்டாள். அவனுடைய காதல் மகாராணி! அவன், அவள் உச்சியில் குளிர்ச்சியாய் முத்தமிட்டான்.